# புதிய ஜனநாயகம்

ஜூலை 2020
ரூ. 15.00




## சுயசார்பு இந்தியா:

# மோடியின் மற்றொரு பித்தலாட்டம்!

# ஊரடங்கு, ஊரடங்குன்னு தொடர்ந்தோம்னா, நாசமாப் போய்டுவோம்!

**க**டந்த மூன்று மாதங்களுக்கு மேலாகத் தொடரும் ஊரடங்கை நியாயப்படுத்த தான்தோன்றித்தனமான, வயிற்றெரிச்சலை ஏற்படுத்தக்கூடிய வக்கிரம் நிறைந்த வாதங்களை அடுக்கிவருகிறது, பார்ப்பன-பாசிச பா.ஜ.க. கும்பல்.

“பல்லாங்குழி, தாயம், பரமபதம், கல்லாங்கல் ஆகிய பாரம்பரியமான உள்ளரங்கு விளையாட்டுக்களைக் குடும்பத்தோடு சேர்ந்து விளையாடி வருவதாகவும்; கரோனா போன்ற பெரும் சங்கடம் வந்திருக்கவில்லை என்றால், வாழ்க்கை என்றால் என்ன, வாழ்க்கை ஏன் ஏற்பட்டிருக்கிறது, வாழ்க்கை எத்தகையது ஆகியன பற்றி நாம் சிந்திக்கக்கூட முயன்றிருக்க மாட்டோம்" என்றும் மன் கி பாத் நிகழ்ச்சியில் பேசி, இந்திய மக்கள் அனைவரும் இந்த ஊரடங்கு காலத்தில் ஆனந்தமாகவும் தத்துவவிசாரத்தில் ஈடுபட்டும் பொழுதைக் கழித்து வருவதாகக் குறிப்பிட்டிருக்கிறார், பிரதமர் மோடி.

கார்ப்பரேட் முதலாளிகளின் வளர்ச்சியையே நாட்டின் வளர்ச்சியாகக் காட்டும் மோடி வித்தை போலவே, புளித்த ஏப்பக்காரனின் அனுபவத்தை இந்திய மக்களின் அனுபவமாக ஊதி விடுகிறார், மோடி. மாதச் சம்பளம் வாங்கும் நடுத்தர வர்க்கம்கூட அல்லாடிப் போய் நிற்கும் இந்த ஊரடங்கு காலத்தில் அன்றாடங் காய்ச்சிகளின் நிலை என்னவாக இருக்கும்?

உதிரித் தொழிலில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்கள், சிறு வியாபாரிகள் உள்ளிட்டோர் கரோனாவையும் ஊரடங்கையும் எப்படிப் பார்க்கிறார்கள் என்பதை தமிழ் இந்து நாளிதழ் நேர்காணல் செய்து வெளியிட்டிருந்தது. அதனை பு.ஜ. வாசகர்களுக்காகச் சுருக்கி வெளியிட்டிருக்கிறோம். அச்சாமானிய மக்களின் ஊரடங்கு அனுபவம் பிரதமர் கூறிய அனுபவத்தை மறுதலிப்பதோடு, கரோனா தொற்றைவிட ஊரடங்குதான் அவர்களின் வாழ்க்கையை அச்சுறுத்துவதை எடுத்துக் காட்டுகிறது.

*- ஆசிரியர் குழு*

**எம்.எஸ்.பாண்டி, கிரானைட் கற்களை ஒட்டுபவர்**

*கழுத கெட்டா குட்டிச்சுவர்ங்கிற மாதிரி, கிராமத்துல விவசாயம் பொய்ச்சுதுன்னா ஒருத்தருக்கு முதல்ல சோறு போடக்கூடிய தொழில் கட்டிடத் தொழில்தான். எந்த வேலையும் தெரியாட்டியும் கல்லை, மண்ணைத் தூக்கிப் போட்டாவது பிழைச்சுக்கலாம். எத்தனை வருஷ சர்வீஸ் இருந்தாலும் இந்தத் தொழில்ல அதிகபட்ச சம்பளமே எண்ணூறு ரூபாதான். அதனால, மாசத்துல இருபது நாளைக்காவது வேலைக்குப் போனாத்தான் குடும்பம் நடத்த முடியும். முழுசா மூணு மாசமா வேலையில்லன்னா, எங்க நிலைமைய யோசிச்சுப் பாருங்க.*

**எஸ்.சித்தன், கிரேன் ஆபரேட்டர், கலவை இயந்திரம் இயக்குபவர்**

*ஊரடங்குக்குப் பின்னாடி வேலையெல்லாமே குறைஞ்சுடுச்சு. அங்க ஒண்ணு, இங்க ஒண்ணுன்னு வர்ற வேலையையும் அரசாங்கம் விதிக்குற கட்டுப்பாடுகள் நாசமாக்கிடுது. ஒரு நாள் மண்டலம்னு சொல்றாங்க, ஒரு நாள் மாவட்டம்னு சொல்றாங்க; எங்கேயிருந்து சார் எங்களை மாதிரி ஆளுங்க வெளியூர் வேலைக்குப் போறது? எங்களை மாதிரி ஆளுங்களால இ-பாஸ் எல்லாம் எடுக்க முடியுமா?*



**பாண்டிச்செல்வம், கொத்தனார்**

*பூராம் வெளிமாநிலத் தொழிலாளிங்களை இறக்கி ருசி கண்டுட்டாய்ங்க நம்மூரு மொதலாளிங்க. சல்லிசுக் கூலியில அவய்ங்க மாடா உழைச்சாய்ங்க. நம்மாளுக்கு வேலை இல்லைங்கிறதைப் பயன்படுத்திக்கிட்டு, முன்னாடி அவய்ங்க வாங்குன கொத்தடிமைச் சம்பளத்துக்கே நம்மளையும் கூப்பிடுறாங்க. வேற வேலை இல்லைங்கிறதால இப்படி நம்மாளும் போறான். இது என்னாகுதுன்னா, எல்லார் கூலியையும் பாதிக்குது. அரைக்கூலி, முக்காக் கூலிக்குத்தான் இப்பம் வேலைக்குப்*

## இந்தியா - சீனா முறுகல் போக்கு:

# மோடி அரசின் சவடாலும் சரணாகதியும்!

**கி**ழக்கு லடாக்கின் கல்வான் பள்ளத்தாக்கில் ஜூன் 15-ஆம் தேதியன்று இந்திய-சீன துருப்புக்களுக்கிடையே நடந்த கைகலப்பு, உயிர்ப் பலிகளை அடுத்து நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், "இந்திய எல்லைக்குள் யாரையும் நுழையவிடவில்லை, இந்திய நிலைகளை யாரும் கைப்பற்றவில்லை" என விளக்கமளித்தார், பிரதமர் மோடி. இதனைத் தொடர்ந்து காங்கிரசு, இடதுசாரிகள் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள், "இந்திய எல்லைக்குள் யாரும் ஊடுருவவில்லை என்றால், கைகலப்பும் மோதலும் ஏற்பட்டதேன்? 20 இந்தியச் சிப்பாய்கள் கொல்லப்பட்டதேன்?" என்ற கேள்விகளை எழுப்பின.

இக்கேள்விகளுக்கு வெளியுறவுத் துறை அமைச்சகம், குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டாத கதையாக விளக்கம் அளித்தது என்றால், சங்கிகளோ, பிரதமரின் அதிகாரப்பூர்வ அறிவிப்பைக் கேள்வி கேட்பவர்களைத் தேசத்தை இழிவுபடுத்துபவர்களாக முத்திரை குத்தினர்.

மோடி அரசோ இன்னும் ஒருபடி மேலே போய், இக்கேள்விகளை எழுப்பிய காங்கிரசை சீனாவிடம் காசு வாங்கும் கைக்கூலியாக வசைபாடியதோடு, காந்தி குடும்பத்தாரால் நடத்தப்படும் மூன்று அறக்கட்டளைகள் சீனா உள்ளிட்ட அந்நிய நாடுகளிலிருந்து நிதி பெற்றதில் முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளதாகக் குற்றஞ்சுமத்தி, அவற்றை விசாரிப்பதற்கு கமிட்டியொன்றை அமைத்திருக்கிறது.

மோடி அரசு உண்மைகளை மூடிமறைக்க என்னதான் முயன்றாலும், இந்தியா-சீனா இடையேயான முறுகல் நிலையைத் தணிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளே எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பதை எடுத்துக் காட்டி வருகின்றன.

கல்வான் பள்ளத்தாக்கில் நடந்த மோதலைத் தொடர்ந்து தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலுக்கும் சீனாவின் வெளியுறவு அமைச்சர் வாங் யியுக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தைகளை அடுத்து, கல்வான் பள்ளத்தாக்குப் பகுதியில் செல்லும் உண்மைக் கட்டுப்பாட்டு கோட்டுப் (Line of Actual Control) பகுதியிலிருந்து இருநாட்டுப் படைகளும் பின்வாங்கிக் கொள்ளும் ஒப்பந்தம் முடிவாகியிருக்கிறது.

இந்த ஒப்பந்தப்படி, இந்தியப் படைகள் கல்வான் பள்ளத்தாக்குப் பகுதியில் அமைந்திருக்கும் கட்டுப்பாட்டு கோட்டிலிருந்து 1.8 கி.மீ. தொலைவிற்குப் பின்வாங்கியிருப்பதோடு, அந்தப் பகுதியை இராணுவச் சிப்பாய்கள் ரோந்து வராத பஃவர் ஜோன் ஆகவும் அறிவித்திருக்கிறது. கல்வான் பள்ளத்தாக்கு பகுதி முழுவதுமே தனக்குச் சொந்தமானது என சீனா உரிமை பாராட்டத் தொடங்கியிருக்கும் நிலையில், இவ்விரு முடிவுகளை இந்திய அரசும் இராணுவமும் எடுத்திருப்பதுதான் இங்கு கவனங் கொள்ளத்தக்கது.

லடாக்கிற்குத் திடீர் விஜயம் செய்து, இந்திய இராணுவச் சிப்பாய்களைச் சந்தித்து, அவர்கள் மத்தியில் சீனாவின் விரிவாக்கத்துக்கு எதிராக மோடி எச்சரிக்கை விடுத்த பத்து நாட்களுக்குள் இந்தியா கல்வான் பகுதியிலிருந்து பின்வாங்கியிருக்கிறது எனில், சீன ஆக்கிரமிப்பு என ஆர்.எஸ்.எஸ். கிளப்பிவிட்டு வரும் பூச்சாண்டியின் பொருள்தான் என்ன?


புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி : 35 இதழ் : 8-9

ஜூன்-ஜூலை-2020

தனி இதழ் : ரூ. 15.00

ஆண்டு சந்தா : ரூ.180.00

வடிவமைப்பு : மு.துரை



தொடர்பு முகவரி :

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண் : 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல் :
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி:
94446 32561




லடாக்கிலுள்ள கல்வான் பள்ளத்தாக்கிற்குச் சற்று கிழக்கே தொடங்கி மேற்கே நேபாள எல்லையை யொட்டியுள்ள பாங்காங் டெஸ்ஸோ ஏரி வரையிலும் இந்திய - சீன இடையேயான எல்லை தெளிவாக வரையறுக்கப்படாத நிலையில், அப்பகுதியெங்கும் உண்மைக் கட்டுப்பாட்டுக் கோடு (Line of Actual Control - LAC) என்ற கற்பனைக் கோடுதான் இரண்டு நாடுகளையும் பிரிக்கிறது. எனினும், பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையே ஜம்மு-காஷ்மீர் பகுதியில் எல்லையாக வரித்துக் கொள்ளப்பட்ட எல்லைக் கட்டுப் பாடு கோடு (Line of Control - LOC) போல, சீனா விற்கும் இந்தியாவிற்கும் இடையேயான உண்மைக் கட்டுப்பாட்டுக் கோடு தெளிவாக வரையறுக்கப்பட்டு, இரு நாடுகளும் முழுமனதோடு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக அமையவில்லை.

இந்த உண்மைக் கட்டுப்பாட்டுக் கோடும் கடந்த அறுபது ஆண்டுகளில் பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டே வந்திருக்கிறது. 1959, 1960, 1962 ஆகிய ஆண்டுகளில் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மைக் கட்டுப் பாட்டுக் கோடும், 1993-ஆம் ஆண்டில் இந்தியா-சீனா எல்லை அமைதி ஒப்பந்த அடிப்படையில் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மைக் கட்டுப்பாட்டுக் கோடும் ஒன்றல்ல. மேலும், 1993-ஆம் ஆண்டில் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மைக் கட்டுப்பாட்டுக் கோடு நெடு கிலும் 23 இடங்கள் சர்ச்சைக்குரியவையாக உள்ளன. அப்பகுதிகளை இரு நாடுகளுமே தத்தமது எல்லைக் குட்பட்ட பகுதிகளாகக் கூறி வருகின்றன.


இப்படி எல்லை தெளிவாக வரையறுக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் சீனாவை ஆக்கிர மிப்பாளனாக இந்திய அரசும் பா.ஜ.க. உள்ளிட்ட தேசியக் கட்சிகளும் குற்றஞ்சுமத்துவதற்கு எந்த அடிப்படையும் கிடையாது. எனினும், சர்ச்சைக்குரிய கோக்ரா, கல்வான் பள்ளத்தாக்கு, ஹாட் ஸ்பிரிங்ஸ், பாங்காங் டெஸ்ஸோ ஏரி ஆகிய இராணுவ முக்கி யத்துவம் வாய்ந்த பகுதிகளில் வழக்கத்திற்கு மாறாகத் தனது படை எண்ணிக்கையை சீனா அதிகப்படுத் தியதற்கு அந்நாட்டை மட்டுமே குற்றஞ்சுமத்திவிட முடியாது. சீனாவின் இந்த தன்னிச்சையான இராணுவ நடவடிக்கைகளுக்குப் பின்னே இந்தியாவின் "ஆக்கிர மிப்பு" நோக்கங்களுக்கும் இடமுண்டு.

லடாக்கிலுள்ள லே நகரிலிருந்து 255 கி.மீ. தொலை விலுள்ள தௌலத் பேக் ஓல்டி பகுதி வரையிலும் இந்தியத் துருப்புக்களை விரைந்து அனுப்பும் நோக்கில் அமைக்கப்பட்டு வரும் சாலை ஏறத்தாழ முடிவடையும் நிலையில் உள்ளது. 2014-இல் மோடி பிரதமராகப் பதவி யேற்ற பிறகு, இந்தச் சாலையை விரைந்து முடிப்பதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. உண்மைக் கட்டுப்பாட்டுக் கோட்டிற்கு இணையாகச் செல்லும் இந்தச் சாலை, இந்தியப் பகுதிக்குள் அமைகிறதென இந்திய அரசால் நியாயப்படுத்தப்பட்டாலும், எல்லைத் தகராறு இருந்துவரும் நிலையில் இந்தச் சாலை அமைக் கப்படுவதை சீனா எதிர்த்தே வந்திருக்கிறது.

இந்தச் சாலை தொடர்பான முரண்பாடுகளுக்கு அப்பால், ஜம்மு-காஷ்மீருக்கு அளிக்கப்பட்டிருந்த சிறப்பு உரிமையையும் அதனின் மாநிலத் தகுதியை யையும் ரத்து செய்து, அதனை இரண்டாக உடைத்து, லடாக் நிர்வாகத்தை டெல்லியின் நேரடிக் கட்டுப் பாட்டிற்கு எடுத்துச் சென்றதையும் சீனா சந்தேகக் கண்ணோடு அணுகி எதிர்த்து வருகிறது.

ஜம்மு-காஷ்மீருக்கு வழங்கப்பட்டிருந்த சிறப் புரிமையை ரத்து செய்து நாடாளுமன்றத்தில் உரை யாற்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா, "நான் ஜம்மு-காஷ்மீர் எனக் குறிப்பிடும்போதெல்லாம் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீரையும், சீனா வசமுள்ள அக்சாய் சின் பகுதியையும் சேர்த்தே குறிப் பிடுகிறேன் என்பதை அதிகாரப்பூர்வமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்" என உரையாற்றி, ஆர்.எஸ்.எஸ்.-இன் அகண்ட பாரதக் கனவை உறுதிப்படுத்தினார்.

ஜம்மு-காஷ்மீரின் சிறப்புத் தகுதி நீக்கப்பட்ட பிறகு செப்டெம்பர் மாதத்தில் நடந்த பத்திரிக்கையாளர் சந்திப்பில் உரையாற்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், "இன்றில்லாவிட்டாலும், ஒருநாள் பாகிஸ் தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரை இந்தியா எடுத்துக் கொள்ளும்" எனக் குறிப்பிட்டார்.



இந்த உரைகள் எல்லாம் பாகிஸ்தானிற்கு எதிராக மட்டுமல்ல, சீனாவையும் சீண்டும் நோக்கிலும் கூறப்பட்டவை தான்.

இவற்றுக்கு அப்பால், மோடியின் கடந்த ஆறு ஆண்டு கால ஆட்சியில் இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே ஏற்பட்டிருக்கும் புதிய நெருக்கமும், அமெரிக்காவின் சீன எதிர்ப்பு ஜோதியில் மோடி கலந்துவிட்டதும் உலகமே அறிந்த உண்மையாகும். இந்தோ-பசிபிக் பகுதியில் சீனாவிற்கு எதிராக அமெரிக்கா-ஆஸ்திரேலியா-ஜப்பான்-இந்தியா என்ற நான்கு நாடுகளின் கூட்டணியை அமெரிக்கா உருவாக்கியிருக்கிறது. மேலும், இந்தியாவின் கடற்படை மற்றும் விமானத் தளங்களை அமெரிக்கா பயன்படுத்திக் கொள்ளுவதற்கு ஏற்ப தளவாட பரிமாற்ற ஒப்பந்தம் இந்தியா, அமெரிக்கா இடையே கையெழுத்தாகியிருக்கிறது.




**சீனாவை உலகின் புதிய எதிரியாகச் சித்தரிக்க முயலும் அமெரிக்காவின் வல்லாதிக்க நோக்கத்திற்கு அடியாள் வேலை பார்க்கும் நப்பாசையும் ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களின் சீன எதிர்ப்பு தேசிய வெறியில் மறைந்திருக்கிறது.**


கரோனா தொற்றுப் பரவலுக்கு சீனாதான் காரணமென்று குற்றஞ் சுமத்திவரும் அமெரிக்கா, அதோடு மட்டும் நின்றுவிடவில்லை. தென் சீனக் கடல் பகுதியில் அணு ஆயுதங்களைச் செலுத்தக் கூடிய எட்டு நீர்மூழ்கிக் கப்பல்களையும் மூன்று விமானந்தாங்கி கப்பல்களையும் அனுப்பிவைத்து, சீனாவை ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறது.

கரோனா தொற்றைப் பரவலைப் பயன்படுத்திக் கொண்டு சீனாவை அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாகத் தனிமைப்படுத்திப் பலவீனப்படுத்துவது, அதனை அச்சுறுத்திப் பணியவைப்பது என்ற இரு நோக்கங்களின் அடிப்படையில் அமெரிக்காவின் டிரம்ப் நிர்வாகம் காய்களை நகர்த்தி வருவதற்கு மோடி அரசும் துணை நிற்கிறது.

சீனா, உண்மைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் தனது படை எண்ணிக்கையை அதிகரித்து வருவதை இந்தப் பின்னணியிலிருந்துதான் பார்க்க வேண்டும். சீனாவை உலகின் புதிய எதிரியாகச் சித்தரிக்க முயலும் அமெரிக்காவின் வல்லாதிக்க நோக்கத்திற்கு அடியாள் வேலை பார்க்கும் நப்பாசையும் ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களின் சீன எதிர்ப்பு தேசிய வெறியில் மறைந்திருக்கிறது.

எனினும், ஆர்.எஸ்.எஸ்.-இன் இந்த சீன எதிர்ப்பு தேசிய வெறி, வெறுங்குடம்தான் அதிகம் சத்தம் போடும் என்ற கதையாகவே நடைமுறையில் உள்ளது. ஏனென்றால், சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களை உடனடியாகத் தடுத்து நிறுத்தும் பொருளாதார வல்லமை மோடி அரசுக்கு இல்லை. சீனாவைப் போல இந்தியாவை உலகின் ஏற்றுமதி மையமாக மாற்றக்கூடிய உற்பத்திக் கட்டமைப்புகளை உருவாக்க மோடி அரசும் தயாராக இல்லை; இந்தியத் தரகு முதலாளிகளும் தயாராக இல்லை.

இன்னொருபுறத்திலோ, சீனாவுடனான எல்லைப் பிரச்சினையை இராணுவரீதியாகத் தீர்த்துக் கொள்ளும் நிலைமையிலும் மோடி அரசு இல்லை. வாஜ்பாயி பிரதமராக இருந்தபோது, பாகிஸ்தான் எல்லையில் ஐந்து இலட்சத்திற்கும் மேலான துருப்புக்களைக் குவித்து முண்டா தட்டினார். பின்னர் அமெரிக்க நிர்பந்தத்தால், ஒரு ரவையைக் கூடச் சுடாமல் படைகளைப் பின்வாங்கிக் கொண்டார். அப்படிப்பட்ட நாடகத்தன்மை கொண்ட முஸ்தீபுகளைக் காட்டும் நிலையில்கூட இன்று மோடி அரசு இல்லை.

இந்த நிலையில், பாம்பும் சாகக்கூடாது தடியும் நோகக்கூடாது என்ற கதையாக, டிக்டாக் உள்ளிட்ட சீனா நாட்டைச் சேர்ந்த 59 செயலிகளைத் தேசப் பாதுகாப்பைக் காட்டித் தடை செய்திருக்கிறது, மோடி அரசு. மேலும், அவலை நினைத்து உரலை இடித்த கதையாக, சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் துறைமுகத்திலிருந்து வெளிச் செல்லுவதைத் தாமதப்படுத்தும் குசும்புத்தனத்திலும் ஈடுபட்டு வருகிறது.

இந்தச் சில்லுண்டி நடவடிக்கைகளை இந்தியத் தரகு முதலாளித்துவ வர்க்கம்கூட ஆதரிக்க மறுக்கிறது. அதனைவிட முக்கியமாக, கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில் செல்லும் உண்மைக் கட்டுப்பாட்டுக் கோட்டிலிருந்து 1.8 கி.மீ. தூரம் இந்திய இராணுவம் பின்வாங்க ஒப்புக்கொண்டிருப்பதை சீனாவிற்குக் கிடைத்த வெற்றியாகவே முன்னாள் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் உள்ளிட்ட பலரும் கருதுகின்றனர்.

ஆனால், ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களோ சீனாவிற்கு எதிராக மோடி அரசு ஒரு மாபெரும் வர்த்தகப் போரைத் தொடங்கிவிட்டது போலவும், சீனாவை வெற்றிகரமாகப் பின்வாங்கச் செய்துவிட்டது போலவும் சவுண்டுவிட்டு, மோடி அரசின் சரணாகதியை, அதனின் பல்முனைத் தோல்விகளை மூடிமறைத்துவிட முயலுகின்றன. ■

## சுயசார்பு இந்தியா:

# மோடியின் மற்றொரு பித்தலாட்டம்!

**கேந்திரமான துறைகளை அந்நிய முதலீட்டிற்குத் திறந்துவிட்டுவிட்டு, சுயசார்பு இந்தியா என முழங்குகிறார், மோடி. படிப்பது இராமாயணம் இடிப்பது பெருமாள் கோவில் போலும்!**

**மே**க் இன் இந்தியா, ஸ்டாண்ட் அப் இந்தியா, ஸ்டார்ட் அப் இந்தியா என மோடியால் அடுத்தடுத்து அறிவிக்கப்பட்ட இந்தியாக்களெல்லாம் பல்லிளித்து விட்ட நிலையில், சுயசார்பு இந்தியா என்றொரு புதிய அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார், மோடி. அவரது அரசால் திணிக்கப்பட்ட ஊரடங்கு நடவடிக்கை உள்ளூர் தொழில்களை ஒழித்துக்கட்டிவரும் நிலையில் வெளியாகியிருக்கும் இந்த அறிவிப்பு, இந்தியாவை உலக பிராண்டாக மாற்றப் போவதாகக் கூறிக் கொள்கிறது.

சுயசார்பு இந்தியா அறிவிப்புக்கு இணையாக, எல்லைப்புறத்தில் இந்தியா - சீனா இடையேயான மோதலைக் காட்டி, சீனப் பொருட்களைப் புறக் கணிக்கக் கோரும் போராட்டங்களை சங்கப் பரிவார அமைப்புகள் நடத்தி வருகின்றன. மேலும், மைய அரசின் சில அமைச்சகங்கள் சீனாவுடன் செய்துகொண்ட முதலீட்டு ஒப்பந்தங்களை ரத்து செய்வதாகவும் அறிவித்துள்ளன. இவற்றுக்கெல்லாம் முன்னரே, புதிய சீன முதலீடுகளுக்குப் பல்வேறு கட்டுப்பாடுகளை அறிவித்திருந்தது, மைய அரசு.

ஆர்.எஸ்.எஸ்.-இன் கம்யூனிச வெறுப்பும், சீன எதிர்ப்பும் புரிந்துகொள்ளக் கூடியதுதான். ஆனால், சுயசார்பு பொருளாதாரக் கொள்கைக்கும் ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கும் ஒட்டும் இருந்தது கிடையாது, உறவும் இருந்தது கிடையாது.

சுதேசி, சுயசார்பு என்பவையெல்லாம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்துடன் தொடர்புடைய தேசியப் பொருளாதாரக் கொள்கைகள். இந்திய மக்கள் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தபோது ஆர்.எஸ்.எஸ்., இந்து மகாசபை உள்ளிட்ட பார்ப்பன இந்து மதவெறிக் கும்பல் ஆங்கிலேய ஏகாதிபத்திய வாதிகளின் காலை நக்கிக் கொண்டிருந்தது உலகமே அறிந்த வரலாற்று உண்மை.




மன்னர் மானிய ஒழிப்பையும், வங்கி தேசியமயமாக்கப்பட்டதையும் எதிர்த்த கட்சி தான் பா.ஜ.க.வின் மூதாதையரான ஜனசங்கம். அக்கட்சி பா.ஜ.க.வாக மறுஅவதாரம் எடுத்த பிறகு, காந்திய சோசலிசம் எனப் பிதற்றிக் கொண்டு திரிந்தது. காங்கிரசு கட்சி நேருபாணி சோசலிசத்தைக் கைவிட்டுத் தனியார்மயம்-தாராளமயத்தை ஏற்றுக்கொண்டவுடன், தனது பொருளாதாரக் கொள்கையை காங்கிரசு திருடிக் கொண்டுவிட்டதாகப் புலம்பியது, பா.ஜ.க. இன்னொருபுறத்திலோ சுதேசி விழிப்புணர்வு இயக்கத்தைத் தொடங்கித் தனியார்மய-தாராளமய எதிர்ப்பு கபட நாடகத்தையும் நடத்தி வந்தது.

வாஜ்பாயி தலைமையில் அமைந்த பா.ஜ.க. கூட்டணி அரசோ, உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைகளை ஏற்று அந்நியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு இருந்துவந்த கட்டுப்பாடுகளை நீக்குவதில் புதிய சாதனை படைத்தது. ஏகாதிபத்திய நிறுவனங்களுக்கும் இந்தியத் தரகு முதலாளிகளுக்கும் சேவை செய்வதில் வாஜ்பாயி எட்டடி பாய்ந்தாரென்றால், மோடியோ பதினாறு அடி பாயக் கூடியவர் என்பதை குஜராத்தில் நிரூபித்துக் காட்டி, அதன் மூலமாகத் தான் பிரதமர் நாற்காலியையே பிடித்தார். இதுதான் பா.ஜ.க.வின் பொருளாதாரக் கொள்கை வரலாறு.

இப்படிப்பட்ட பின்னணி கொண்ட பா.ஜ.க.வின் சுயசார்பு அறிவிப்பு குறித்து நாம் சந்தேகங்கொள்வது இருக்கட்டும். தமது இந்த அறிவிப்பின் மீது மேற்குலக ஏகாதிபத்தியங்கள் சந்தேகம் கொண்டுவிடக் கூடாது என்ற கவலையில், சுயசார்பு இந்தியாவை அறிவித்த கையோடே, "சுயசார்பு இந்தியா உலகப் பொருளா

தாரத்துடன் முழுமையாக ஒருங்கிணைந்தே செயல்படும்” என விளக்கமளித்தார் மோடி.

இந்த விளக்கத்திற்குப் பொழிப்புரை எழுதியிருக்கும் துக்ளக் ஆசிரியர் குருமூர்த்தி, “சுதந்திரப் போராட்ட காலப் பின்னணி காரணமாக, சுதேசி என்றால் வெளிநாட்டுப் பொருட்களை பகிஷ்காரம் செய்வது என்கிற எதிர்மறை அர்த்தம் இருப்பதால், சுயசார்பு (ஆத்ம நிர்பர்) என்கிற காலத்துக்கேற்ற ஆக்கப்பூர்வமான பதத்தைப் பயன்படுத்தியிருக்கிறார் மோடி. உள்நாட்டுப் பொருட்களை உலக பிராண்டுகளாக மாற்றும் முயற்சிதான் இச்சுயசார்பு இந்தியா” எனக் குறிப்பிடுகிறார்.

இப்பொழிப்புரையின்படி ஆங்கிலேய காலனி எதிர்ப்புப் போராட்டத்தின்போது முன்வைக்கப்பட்ட சுதேசிக்கும் மோடி அறிவித்திருக்கும் சுயசார்பு இந்தியாவிற்கும் இடையே எந்தவொரு தொடர்பும் கிடையாது என்றாகிறது. அவ்வாறென்றால், இப்புதிய அறிவிப்பின் உண்மையான பொருள்தான் என்ன?

●●●


1947-க்குப் பிறகு இந்தியா தன்னை சுயசார்பு கொள்கை கொண்ட நாடாகக் காட்டிக் கொள்வதற்கும், உணவு உற்பத்தி உள்ளிட்டுப் பல்வேறு துறைகளில் ஓரளவு தன்னிறைவு கொண்ட நாடாகப் பரிணமிப்பதற்கும் அடிப்படையாக இருந்தவை அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள்தான். மோடி அரசு அறிவித்திருக்கும் சுயசார்பு இந்தியா திட்டமோ பொதுத்துறையை, அதன் சுவடே தெரியாமல் அழித்துவிடும் நோக்கத்தைக் கொண்டிருக்கிறது. அதாவது, அனைத்தும் கார்ப்பரேட்மயம் என்பதுதான் மோடி அறிவித்திருக்கும் சுயசார்பின் பொருள்.

கேந்திரமற்ற துறைகளில் செயல்பட்டு வரும் அனைத்துப் பொதுத்துறை நிறுவனங்களும் தனியார்மயமாக்கப்படும் என்றும், கேந்திரமான துறைகளில் செயல்பட்டு வரும் பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை நான்காகக் குறைக்கப்படுவதோடு, அவற்றிலும் தனியார் கார்ப்பரேட் நிறுவனங்கள் பங்கேற்க அனுமதிக்கப்படும் என அறிவித்து, சுயசார்பு இந்தியா என்ற போர்வையில் பொதுத்துறையே இல்லாத இந்தியாவை உருவாக்கிட முயலுகிறார், மோடி.

பாரத் பெட்ரோலியம், எல்.ஐ.சி., தொடங்கி ரயில் வழித்தடங்கள் வரையிலுமான பொதுத்துறைகளைத் தனியாருக்கு விற்பதன் மூலம் இந்த நிதியாண்டில் மட்டும் ஏறத்தாழ இரண்டு இலட்சம் கோடி ரூபாய் வருவாய் ஈட்டவுள்ளதாக அறிவித்திருக்கிறது, மைய அரசு. பொதுச் சொத்துக்களை விற்றுக் கிடைக்கும் இந்தப் பணத்தை பட்ஜெட் பற்றாக்குறையை ஈடு செய்து கொள்ளவே மோடி அரசு பயன்படுத்தும்.

கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு மென்மேலும் வரிச் சலுகைகளை அளிப்பதாலும், கார்ப்பரேட் முதலாளி வர்க்கம் வரி ஏய்ப்புகளில் ஈடுபடுவதாலும், அக்கும்பல் தாம் வாங்கிய வங்கிக் கடன்களைத் திருப்பிச் செலுத்த மறுப்பதாலும்தான் நாடு பெரும் பற்றாக்குறையில் சிக்கியிருக்கிறது. அவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தும் கார்ப்பரேட் வரி விகிதங்களை அதிகரித்தும் இப்பற்றாக்குறையை ஈடுகட்ட மறுக்கும் மோடி அரசு, சுயசார்பு என்ற போர்வையில் நாட்டின் வளங்களை அடிமாட்டு விலைக்கு அக்குற்றவாளிகளுக்கு பட்டா போட்டுக் கொடுக்கவிருக்கிறது.

இத்தனியார்மயத்திற்கு அப்பால், தொலைத் தொடர்பு, மோட்டார் வாகன உற்பத்தி, உரம் தயாரிப்பு உள்ளிட்ட இரசாயனத் துறை, ஜவுளித் துறை, விமான போக்குவரத்து, காபி, தேநீர் எஸ்டேட்டுகள், சுரங்கத் துறை, பெட்ரோலியம், இயற்கை எரிவாயு, ஆயுதத் தளவாட உற்பத்தி, விவசாயம், கால்நடை வளர்ப்பு, தொடர்வண்டித் துறையின் அடிக்கட்டுமானங்கள், தொழிற் பூங்காக்கள், மொத்த வியாபாரம், மருந்து உற்பத்தி, மின்னணு வர்த்தகம் ஆகியவற்றில் 100 சதவீத அந்நிய முதலீட்டிற்கும்; தனியார் வங்கித் துறையில் 74 சதவீத அந்நிய முதலீட்டிற்கும்; காப்பீடு துறையில் 49 சதவீத அந்நிய முதலீட்டிற்கும் அனுமதி அளிக்கும் தாராளமய சீர்திருத்தங்களை அறிவித்திருக்கிறது, மோடி அரசு.




கேந்திரமான துறைகளை அந்நிய முதலீட்டிற்குத் திறந்துவிட்டுவிட்டு, சுயசார்பு இந்தியா என முழங்குகிறார், மோடி. படிப்பது இராமாயணம் இடிப்பது பெருமாள் கோவில் போலும்!

●●●

இந்தத் தனியார்மய, தாராளமய சீர்திருத்த நடவடிக்கைகளின் மூலம் இந்தியா இறக்குமதி யைச் சார்ந்திராமல் தன்னிறைவு அடையும் என நியாயப்படுத்தும் சங்கிகள், அதற்கு உதாரணமாக நிலக்கரித் துறையைக் காட்டுகிறார்கள். இந்தியாவில் நிலக்கரி வளம் அபரிதமாக இருந்தும், இன்னமும் நமது தேவைக்கு அந்நிய இறக்குமதியைச்

சார்ந்திருக்கிறோம் என்றும், இந்த நிலைமையை மாற்றத்தான் நிலக்கரி சுரங்கத் துறையில் 100 சதவீத அந்நிய முதலீட்டிற்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள்.

இந்நடவடிக்கைளின் மூலம் நிலக்கரி உற்பத்தி அதிகரிக்கக் கூடும். அதனால் இந்திய மக்களுக்கு ஏதேனும் நன்மை கிட்டுமா என்பதுதான் கேள்வி. உதாரணத்திற்கு, உணவு உற்பத்தியை எடுத்துக் கொள்வோம். அத்துறையில் இந்தியா தன்னிறைவு அடைந்துவிட்டதாகக் கூறப்பட்டாலும், சத்தான உணவு கிடைக்காமல் அரைகுறைப் பட்டினியால் நோஞ்சான்களாக உள்ள குழந்தைகளின் எண்ணிக்கையில், போதிய ஊட்டச்சத்து இன்றி இரத்த சோகையால் பீடிக்கப்பட்டிருக்கும் கர்ப்பிணித் தாய்மார்களின் எண்ணிக்கையில் இந்தியா உலக அளவில் முன்னணியில் இருந்துவருகிறது.

வெறும் 105 கோடி ரூபாயில் தொடங்கப்பட்ட பொதுத்துறை நிறுவனமான இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் கடந்த ஆண்டு மட்டும் 21 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு அரசின் பல்வேறு திட்டங்களில் முதலீடு செய்திருக்கிறது (பிரண்ட்லைன், ஜூலை 17, 2020). வருடாவருடம் பல்லாயிரம் கோடி இலாபம் ஈட்டும் தனியார் கார்ப்பரேட் நிறுவனங்களிடமிருந்து இப்படிப்பட்ட பங்களிப்பை எதிர்பார்க்க முடியுமா? ஆபத்தான, நெருக்கடியான காலக்கட்டங்களில்கூடத் தனியார் கார்ப்பரேட் நிறுவனங்கள் தமது இலாபத்தை விட்டுக் கொடுக்க முன்வருவதேயில்லை என்பதே உண்மை.

எடுத்துக்காட்டாக, இந்தியாவில் உள்ள மொத்த மருத்துவமனை படுக்கைகளில் (13,70,000) 8,33,000 படுக்கைகள் தனியார் மருத்துவமனைகள் வசம் உள்ளன. ஏறத்தாழ 60 சதவீதத்திற்கும் மேலான படுக்கை வசதிகளைத் தம்வசம் வைத்திருக்கும் தனியார் மருத்துவமனை நிர்வாகங்கள் கரோனா தொற்றைக் கொள்ளை இலாபம் அடிக்கக்கூடிய வாய்ப்பாகத்தான் கருதுகின்றனவேயொழிய, அவை ஏழை, எளிய மக்களுக்குக் குறைந்த கட்டணத்தில்கூட சிகிச்சை அளிக்க முன்வரவில்லை.

எனவே, உற்பத்தித் துறையை, சேவைத் துறைகளை இந்தியத் தரகு முதலாளிகளுக்கும் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களுக்கும் தாரை வார்ப்பதன் வழியாக கார்ப்பரேட் முதலாளி வர்க்கம் தமக்குக் கிடைக்கும் இலாபத்தில் தன்னிறைவு அடைவார்களேயொழிய, இந்தியா தன்னிறைவு அடையப் போவதில்லை. மேலும், கேந்திரமான துறைகளில் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் 100 சதவீதம் முதலீடு செய்ய அனுமதி அளித்திருப்பதன் மூலம் இந்தியாவின், இந்திய மக்களின் எதிர்காலத்தை மேற்குலக ஏகாதிபத்தியங்களிடம் முழு அடமானம் வைக்கும் துரோகத்தை நிகழ்த்தியிருக்கிறது, பார்ப்பன பாசிசக் கும்பல்.

●●●


**மோ**டியின் சுயசார்பு ஒருபுறம் மேற்குலக ஏகாதிபத்தியங்களிடம் முழுச் சரணாகதி அடைகிறது; இன்னொருபுறத்திலோ சீன முதலீடுகளையும், சீனப் பொருட்களையும் புறக்கணிக்கும் குறுகிய தேசிய வெறியைத் தூண்டிவிடுகிறது.

இன்றைய இந்தியாவின் தொழிற்துறை உற்பத்திக்குத் தேவைப்படும் மூலப்பொருட்கள், இடைநிலைப் பொருட்களில் பெரும்பகுதியும்; செல்போன் உள்ளிட்ட பல்வேறு விதமான நுகர்பொருட்களும் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் நிலையில் ஆர்.எஸ்.எஸ். கும்பல் சீனப் பொருட்களைப் புறக்கணிக்குமாறு அறைகூவல் விடுத்திருப்பது கேலிக்கூத்தாகவே முடிவடையும்.

இந்த உண்மை ஆளும் பா.ஜ.க. கும்பல் அறியாததல்ல. ஆனாலும், சீனாவை இந்தியாவின் உடனடியான, அபாயகரமான எதிரியாக ஆர்.எஸ்.எஸ். கும்பல் கட்டமைக்க முயலுவதற்குக் காரணம், பா.ஜ.க.வின் அமெரிக்க அடிமைத்தனம். ஆசியப் பகுதியில் அமெரிக்காவின் நம்பகமான அடியாளாகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளுவதற்கு சீன எதிர்ப்பை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொள்ளத் திட்டமிடுகிறது, ஆளும் பா.ஜ.க. அதனால்தான் அமெரிக்காவில் மழை அடித்தால் இந்தியாவில் குடை பிடிக்கிறது, ஆர்.எஸ்.எஸ். இந்திய-சீன எல்லைப்புறத்தில் இரு நாடுகளுக்குமிடையே காணப்படும் பதற்றத்தையும் இந்தப் பின்னணியிலிருந்துதான் காண வேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால், மோடியின் சுயசார்பு நாட்டைத் தன்னிறைவு அடையும் பாதையில் அழைத்துச் செல்லப் போவதில்லை. மாறாக, இந்திய நாட்டையும், மக்களையும் மறுகாலனியாக்கம் என்ற மரணக்குழிக்குள் இன்னும் ஆழமாக இழுத்துச் செல்லக்கூடிய தீமையாகவே அமையும்.

■ இளமுருகு



# உணவுப் பாதுகாப்பை அச்சுறுத்தும் வேளாண் சந்தை சீர்திருத்தங்கள்!

**உணவு தானிய உற்பத்தி, அப்பொருட்களுக்கான விலை நிர்ணயம் மற்றும் கொள்முதல், சேமிப்பு ஆகியவற்றைத் தீர்மானிப்பதிலிருந்து அரசு படிப்படியாக விலகிக்கொண்டு, அப்பொறுப்பை கார்ப்பரேட் உணவுக் கழகங்கள், ஏற்றுமதியாளர்களிடம் ஒப்படைப்பதுதான் இச்சீர்திருத்தத்தின் நோக்கம்.**

குப்புறத் தள்ளிய குதிரை குழியும் பறித்த கதையாக, ஊரடங்கால் தமது விளைபொருட்களை விற்க முடியாமல் பெரும் நட்டத்தைச் சந்தித்த இந்திய விவசாயிகள் மீது வேளாண் சந்தை சீர்திருத்தம் என்ற பெயரில் அடுத்த இடியை இறக்கியிருக்கிறது, மோடி அரசு.

அத்தியாவசியப் பொருட்கள் சட்டத் திருத்தம், வேளாண் உற்பத்திப் பொருட்கள் வணிக ஊக்குவிப்பு அவசரச் சட்டம், விவசாயிகளுக்கான விலை உத்தரவாதம் மற்றும் வேளாண் சேவைகள் மீதான ஒப்பந்தப் பாதுகாப்பு அவசரச் சட்டம் - இவைதான் மோடி அரசால் அவசர அவசரமாக அறிவிக்கப்பட்டிருக்கும் சீர்திருத்தங்கள்.

உணவுப் பொருட்கள் பதுக்கப்படுவதையும், செயற்கையாக விலை உயர்த்தப்படுவதையும் தடுக்கும் நோக்கில் 1955-இல் கொண்டுவரப்பட்டு, இன்று வரை நடைமுறையில் இருந்துவரும் அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்திலிருந்து வெங்காயம், உருளைக்கிழங்கு, சமையல் எண்ணெய், எண்ணெய் வித்துக்கள், தானியங்கள், பயறு வகைகள் ஆகியவற்றுக்கு விலக்கு அளித்து அச்சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. இத்திருத்தத்தால், உணவு பதப்படுத்தும் தொழில் நிறுவனங்கள், ஏற்றுமதியாளர்கள், பெருவியாபாரிகள் உள்ளிட்டோர் இனி இவ்வுணவுப் பொருட்களை எவ்விதக் கட்டுப்பாடும் இன்றித் தமது தேவைக்கு அல்லது உற்பத்தித் திறனுக்கு ஏற்ப வாங்கிச் சேமித்து வைத்துக் கொள்ள முடியும்.

பஞ்சம் அல்லது தேசியப் பேரிடர் ஏற்படும் காலங்களில் இத்திருத்தம் தற்காலிகமாக விலக்கிக் கொள்ளப்படும் எனக் கூறப்பட்டாலும், அத்தகைய நெருக்கடியான காலங்களிலும்கூட ஏற்றுமதியாளர்கள் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில் நிறுவனங்கள் மீது எவ்விதமான கட்டுப்பாடும் விதிக்கப்படாது என்றும் தெளிவுபடுத்தியிருக்கிறது, மைய அரசு.

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சட்டத்திலிருந்து வெறும் ஆறு உணவுப் பொருட்களுக்குத்தானே விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என இந்தத் திருத்தத்தை எளிதாகக் கடந்துபோய்விட முடியாது. வட இந்திய ஏழைகள் மற்றும் கீழ் நடுத்தர வர்க்கத்தைப் பொருத்தவரை சப்பாத்தியோடு வெங்காயமும் உருளைக்கிழங்கும்தான் அவர்களின் அன்றாட உணவு. தமிழகத்திலும்கூட கஞ்சிக்குத் தொட்டுக்கொள்ள வெங்காயம் இருந்தால் போதுமானது. இத்தகைய சாமானிய மக்களின் உணவுப் பொருளான வெங்காயம் இத்திருத்தத்தின் மூலம் சந்தை சூதாடிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் இந்தியா இன்னமும் தன்னிறைவு அடையவில்லை. எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய் தேவைக்கு இந்தியா பெரிதும் இறக்குமதியைத்தான் சார்ந்து இருக்கிறது. இந்நிலையில் அவையிரண்டும் அத்தியாவசிய உணவுப் பொருள் சட்டத்திலிருந்து விலக்கப்பட்டிருப்பதன் விளைவு எதிர்மறையாகவே அமையும்.

வேளாண் உற்பத்திப் பொருட்கள் வணிக ஊக்குவிப்பு அவசரச் சட்டம், வேளாண் உற்பத்திப்

நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை உயர்த்தித் தரக் கோரி கும்பகோணம் நகரில் காவிரி பாதுகாப்பு விவசாயிகள் சங்கத்தினர் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)






அனைத்து விவசாயக் கடன்களையும் தள்ளுபடி செய்யக் கோரிப் பல்வேறு விவசாயிகள் சங்கத்தினர் டெல்லியில் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

பொருட்களை விற்பனை செய்வதை ஒழுங்குபடுத்தும் மாநில அரசுகளின் அதிகாரத்தை ஏறத்தாழ ரத்து செய்து விட்டிருக்கிறது. ஒரே நாடு ஒரே வரி, ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை, ஒரே நாடு ஒரே கல்வித் திட்டம் என்ற வரிசையில் ஒரே நாடு ஒரே வேளாண் சந்தை என்பதை முன்னிறுத்துகிறது, இந்த அவசரச் சட்டம்.

இந்திய விவசாயிகள் தமது பகுதியிலுள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தின் மூலம்தான் தமது விளை பொருட்களை விற்க முடியும் என்ற கட்டுப்பாடை அடியோடு ரத்து செய்யும் இந்த அவசரச் சட்டம், இனி, விவசாயிகள் தமது விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூட வரம்புகள், மாநில வரம்புகளையும் தாண்டி இந்தியாவின் எந்தப் பகுதியிலும் விற்றுக் கொள்ளும் சுதந்திரத்தைப் பெறுவதாகப் பீற்றிக் கொள்கிறது. தமது விளைபொருட்களுக்கு எங்கு நல்ல விலை கிடைக்கிறதோ அங்கே விற்றுக் கொள்ளும் வாய்ப்பை இச்சட்டம் விவசாயிகளுக்கு வழங்குவதால், அவர்களின் வருமானம் அதிகரிக்கும் என ஆருடம் கூறுகிறது.

தமது விளைபொருட்களுக்கு உள்ளூரிலேயே கட்டுபடியாகக்கூடிய விலை கிடைப்பதை உத்தரவாதப் படுத்துங்கள் என விவசாயிகள் கோரிவரும் வேளையில், மோடியோ நல்ல விலை கிடைக்க அகில இந்திய சந்தைக்கு வாருங்கள் என அழைக்கிறார். தேவனின் ராஜ்ஜியம் நெருங்கி வருவதாகக் கூறி ஆறுதல்படுத்தும் மத போதனைக்கும் மோடியின் தேசிய அழைப்புக்கும் வேறுபாடு உண்டா?

தானிய வியாபாரிகள் உள்ளூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பதிவு செய்திருக்க வேண்டும், மாநில அரசு வழங்கும் உரிமத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடுகளையும் ரத்து செய்யும் இந்த அவசரச் சட்டம், பான் கார்டை மட்டுமே ஒரே உரிமமாக அங்கீகரிக்கிறது. பான் கார்டு வைத்திருக்கும் எந்தவொரு தானிய வியாபாரியும் இந்தியாவின் எந்த வொரு பகுதியைச் சேர்ந்த விவசாயிடமிருந்தும் நேரடியாகவே தானியங்களைக் கொள்முதல் செய்துகொள்ள அனுமதிக்கிறது, இந்த அவசரச் சட்டம். பா.ஜ.க.வின் உறுப்பினர் அட்டை வைத்திருந்தால் போதும் எனச் சொல்லாமல் விட்டாரே மோடி, அதுவரையில் விவசாயிகள் தப்பித்தார்கள்.

விவசாயிகளுக்கான விலை உத்தரவாதம் மற்றும் வேளாண் சேவைகள் மீதான ஒப்பந்தப் பாதுகாப்பு அவசரச் சட்டம் என்ற நீளமான பெயர் கொண்ட இந்தச் சட்டத்தைச் சுருக்கமாக இரண்டே வார்த்தைகளில் சொன்னால், அதன் பெயர் ஒப்பந்த விவசாயச் சட்டம். பல்வேறு மாநில அரசுகளும் ஒப்பந்த விவசாயத்திற்கெனத் தனித்தனி சட்டங்களை இயற்றியிருக்கும் நிலையில், அவற்றுக்கெல்லாம் மேலான மத்திய சட்டமாக இதனை இயற்றியிருக்கும் மோடி அரசு, இதற்கு ஏற்றபடி மாநில அரசுகள் தமது சட்டங்களைத் திருத்த வேண்டும் எனக் கட்டளையிட்டிருக்கிறது.

●●●

**பொ**ருளாதார நெருக்கடியாலும், கரோனா பரவலைக் காட்டித் திணிக்கப்பட்ட ஊரடங்காலும் பாதிக்கப்பட்டிருக்கும் குறு, சிறு, நடுத்தர விவசாயிகள் யாரும் இந்த வகையான சீர்திருத்தங்களைக் கோரவில்லை. மாறாக, அவர்கள் அடுத்த பட்டத்திற்கான வேளாண் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு நிதியுதவி கோரினார்கள். கடன் தள்ளுபடி கோரினார்கள். மிக முக்கியமாக, அரசின் தானியக் கொள்முதலை அதிகரிக்கக் கோரினார்கள். எம்.எஸ்.சுவாமிநாதன் அறிக்கையின்படி, விளைபொருட்களுக்கு 50 சதவீத இலாபம் தரும்படிக் குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயிக்க வேண்டும் எனக் கோரினார்கள்.

மோடி அரசு அறிவித்திருக்கும் 20 இலட்சம் கோடி ரூபாய் பெறுமான பொருளாதார மீட்பு நடவடிக்கைகளில் விவசாயிகளின் இக்கோரிக்கைகளுள் ஒன்றுகூட இடம் பெறவில்லை. விவசாயக் கடன் அட்டை மூலம் கடன் பெற இரண்டு இலட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு, உணவுப் பொருட்களைச் சேமித்து வைக்கவும், பதப்படுத்தி வைக்கவுமான உள்கட்டுமான திட்டங்களுக்கு ஒரு இலட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு மற்றும் இந்த மூன்று அவசரச் சட்டங்கள் - இவைதான் மோடி அறிவித்திருக்கும் விவசாய மீட்பு நடவடிக்கைகள்.

இவற்றுக்கு அப்பால், நெல், கோதுமை உள்ளிட்ட பயிர்களுக்கு இந்த ஆண்டிற்கான குறைந்தபட்ச ஆதார விலை அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி ஏ கிரேடு நெல்லுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஆதார விலை ரூ.1,888/-. இந்த விலை கடந்த ஆண்டோடு ஒப்பிடும்போது (ரூ.1,835) ஐம்பத்து மூன்று ரூபாய் மட்டுமே அதிகம். அதாவது, ஒரு கிலோ நெல்லுக்கு 53 பைசா உயர்த்தப்பட்டிருக்கிறது. நெல் விவசாயத்திற்கான உள்ளீடு பொருட்களின் விலையும், மற்ற விலைவாசியும் கடந்த ஆண்டோடு ஒப்பிடும்போது இந்த அளவுக்குத்தான் உயர்ந்திருக்கிறதா?

நெல்லுக்குக் குறைந்தபட்ச ஆதார விலையாக 2,400 ரூபாய் தர வேண்டும் எனத் தமிழக விவசாயிகள் கோரி வரும் நிலையில், அதனைவிட 500 ரூபாய் குறைவாக ஆதார விலையை நிர்ணயம் செய்துவிட்டு,

*2022-ஆம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கப் போவதாகத் தம்பட்டம் அடித்துவருகிறார், மோடி. கேப்பையிலிருந்து நெய் வடியப் போகிறதாம், நம்புங்கள் மக்களே!*

நெல், கோதுமை உள்ளிட்ட 24 வேளாண் பொருட்களுக்குக் குறைந்தபட்ச ஆதார விலை மைய அரசால் நிர்ணயிக்கப்பட்டாலும், நெல், கோதுமையைத் தவிர மற்ற வேளாண் பொருட்களை இந்திய உணவுக் கழகம் நேரடியாகக் கொள்முதல் செய்து இருப்பு வைத்துக் கொள்வதில்லை. இவையிரண்டிலும்கூட விளைச்சல் முழுவதையும் அரசு கொள்முதல் செய்வது கிடையாது. வேளாண் பொருட்களை, அரசைவிடத் தனியார்தான் அதிகளவில் கொள்முதல் செய்து இருப்பு வைத்துக் கொள்வது நடைமுறையில் உள்ளது.

குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயிக்கப்படுவதன் நோக்கம், அந்த விலைக்குக் கீழாக வேளாண் பொருட்களைத் தனியார் கொள்முதல் செய்யக்கூடாது என்பதுதான். எனினும், விவசாயிகளின் அனுபவம் எதிர்மறையாகத்தான் இருந்து வருகிறது. குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்யப்படும் 24 வேளாண் பொருட்களுக்கே, வெளிச் சந்தையில் அவ்விலை கிடைப்பது குதிரைக் கொம்புதான் எனும்போது, மற்ற விளைபொருட்களைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

இவ்வாறான நிலையில் எந்த வகையான சீர்திருத்தங்களை மைய அரசு மேற்கொண்டிருக்க வேண்டும்? குறைந்தபட்சமாக, விவசாயிகள் கோரி வருகிறபடி 50 சதவீதம் இலாபம் தரத்தக்க வகையில் வேளாண் பொருட்களின் குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயம் செய்திருக்க வேண்டும். நெல், கோதுமை மட்டுமின்றி, மற்றைய அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் கொள்முதல் செய்வதற்கும் விநியோகம் செய்வதற்கும் ஏற்றபடி இந்திய உணவுக் கழகத்தின் கட்டமைப்பையும் விதிகளையும் மாற்றி அமைத்திருக்க வேண்டும். அரசு நிர்ணயிக்கும் அல்லது விவசாயிகள் தீர்மானிக்கும் விலை வெளிச்சந்தையில் கிடைப்பதை உத்தரவாதம் செய்யக்கூடிய கண்காணிப்பு அமைப்புகளை உருவாக்கியிருக்க வேண்டும். குறிப்பாக, இத்தகைய அமைப்புகளில் விவசாயிகளின் பிரதிநிதிகளுக்கு அதிகாரம் அளிக்கக்கூடிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இந்த வகையான சீர்திருத்தங்கள்தான் விவசாயிகளின் வருமானத்தை உத்தரவாதப்படுத்துவதோடு, இந்திய மக்களுக்கும் உணவுப் பாதுகாப்பை வழங்கும்.

**இந்திய உணவுக் கழகக் கிடங்குகளில் குவிந்து கிடக்கும் உணவுப் பொருட்களைப் பட்டினியால் வாடும் ஏழைகளுக்கு வழங்கு என்ற கோரிக்கையை வலியுறுத்தி வேலை - உணவுப் பாதுகாப்பு இயக்கத்தினர் இராஜஸ்தான்- ஜெய்பூர் நகரில் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)**




இவற்றுக்கு மாறாக, மோடி அரசு கொண்டு வந்திருக்கும் வேளாண் சந்தை சீர்திருத்தங்கள், விவசாயியின் வயிற்றில் அடித்துக் கொள்முதல் செய்து வரும் தனியாரின் நேர்மையற்ற வர்த்தக நடவடிக்கைகளைச் சட்டபூர்வமாக்கவே பயன்படும். மேலும், பதுக்கல், கள்ள வியாபாரத்தின் மூலம் உணவுப் பொருட்களின் விலைகளைச் செயற்கையாக உயர்த்திப் பொதுமக்களைக் கொள்ளையடிப்பதற்கும் தனியாருக்கு முழுச் சுதந்திரம் வழங்கும்.

●●●

இந்தச் சீர்திருத்தங்களால் விவசாய அடிக்கட்டுமான திட்டங்களில் - குறிப்பாக, குளிர்பதனக் கிடங்குகளை அமைப்பது உள்ளிட்டவற்றில் தனியார் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் மூலதனமிட முன்வருவார்கள். அதனால், விவசாய விளைபொருட்களைச் சேமித்து வைத்து, நல்ல விலை கிடைக்கும் நேரத்தில் விற்பனை செய்யும் வாய்ப்பு விவசாயிகளுக்குக் கிடைப்பதோடு, அவர்களது விளைபொருட்கள் அழுகி வீணாவது தடுக்கப்படும் என்ற தேன் தடவிய வாதங்களாலும் இத்தனியார்மய அபாயம் மூடிமறைக்கப்படுகிறது.

ஒவ்வொரு பட்ஜெட்டிலும்கூடக் குளிர்பதனக் கிடங்குகளை உருவாக்குவது உள்ளிட்ட விவசாய அடிக்கட்டுமான திட்டங்கள் குறித்துப் பேசப்பட்டாலும், அவையெல்லாம் சம்பிரதாயமான பட்ஜெட் உரை என்பதைத் தாண்டி நடைமுறையில் ஒரு குண்டுமணி அளவிற்குக்கூட விவசாயிகளுக்குப் பலன் அளிக்கவில்லை.

“உருவாக்கப்பட்டிருக்கும் குளிர்பதனக் கிடங்கு, சேமிப்புக் கிடங்குகளெல்லாம் வியாபாரிகளுக்குத்தான் பெருமளவு பயன்படுகிறதேயொழிய, விவசாயிகளுக்குப் பயனளிக்கவில்லை” என்கிறார், தமிழகத்தைச் சேர்ந்த விவசாய சங்கப் பிரதிநிதி தூரன் நம்பி.

“விவசாயத் துறையில் தனியார் பங்களிப்பை ஈர்க்கும் நோக்கில் செய்யப்படும் சீர்திருத்தங்கள் அனைத்தும் ஏற்கெனவே இருப்பதையும் அழிப்பதாகவே முடிகின்றன” எனக் குறிப்பிடும் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் சமூக அறிவியல் துறையைச் சேர்ந்த இணைப் பேராசிரியர் ஹிமான்சு, இதற்கு உதாரணமாக பீகார் அனுபவத்தை எடுத்துக்காட்டுகிறார்.


“2006-ஆம் ஆண்டிலேயே வேளாண் பொருட்கள் விற்பனை கமிட்டிக் கூடங்களையும், அது தொடர்பான

சட்டங்களையும் ரத்து செய்த பீகார் அரசு, அந்த இடத்தைத் தனியார் முதலீடு நிரப்பும் என நியாயப் படுத்தியது. இதன் பின் கடந்த பதினான்கு ஆண்டு களில் நடந்தது என்னவென்றால், புதிய சந்தைகள் எதையும் தனியார் உருவாக்கவில்லை என்பதோடு, பீகார் மாநில அரசால் நடத்தப்பட்டு வந்த 54 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களும் முறையான பராமரிப்பு இன்றிச் சிதலமடைந்தன. இது மட்டுமின்றி, 54 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களின் வழியாக அரசிற்குக் கிடைத்து வந்த வருமானமும் நின்றுபோனது. இதனால், இவ்வருமானத்தின் மூலம் கிராமப்புற சாலைகளைப் பராமரிப்பது உள்ளிட்ட விவசாயம் சார்ந்த அடிக் கட்டுமானத் திட்டங்களைச் செயல்படுத்துவதும் முற்றிலுமாக முடங்கிப் போனது."

"இன்னொருபுறத்தில், கள்ளச் சந்தைக்கு இணை யான எவ்வித விதிமுறைகளுக்கும் கட்டுப்படாத சட்ட விரோதமான தனியார் சந்தைகள் பீகார் எங்கும் பெருகி யதோடு, அச்சந்தைகளை நடத்துகின்ற அரசியல் ஆதரவு பெற்ற மாஃபியா கும்பலால் விவசாயிகளும், வர்த்தகர் களும் சந்தைக் கட்டணம் என்ற பெயரில் கொள்ளை யடிக்கப்படுவது நடைமுறைக்கு வந்தது" என்கிறார் ஹிமான்சு. (இந்து, மே 25, 2020)

பீகார் அரசு வேளாண் பொருட்கள் விற்பனைக் கூடங்களைக் கைகழுவிய பிறகு, அம்மாநிலத்தின் காய் கறிகள் மற்றும் பழச் சந்தை முற்றிலுமாகத் தனியார் கைக்குச் சென்றுவிட்டதாகவும்; அம்மாநில விவசாயி களிடமிருந்து குறைந்தபட்ச ஆதார விலைக்கும் குறைவாக வேளாண் விளைபொருட்களைக் கொள் முதல் செய்யும் தனியார் வியாபாரிகள், அப்பொருட் களை பஞ்சாப், அரியானா உள்ளிட்ட அண்டை மாநிலங் களில் குறைந்தபட்ச ஆதார விலைக்கு விற்பதாகவும் குறிப்பிடுகிறார், அகமதாபாத், இந்திய மேலாண்மைக் கழகப் பேராசிரியர் சுக்பால் சிங். (பிரண்ட்லைன், ஜூன் 19, 2020)

பீகார் அனுபவத்திலிருந்து பார்த்தால், மோடி அறிவித்திருக்கும் சீர்திருத்தங்களால் தனியார் முதலீடு வருகிறதோ இல்லையோ, தனியார் கொள்ளை சட்ட பூர்வமாகவும், சட்டவிரோதமாகவும் பெருகும்; தனியார் முதலாளிகளாலும், அரசியல் மாஃபியாக்களாலும் விவசாயிகள் சுரண்டப்படுவது இரட்டிப்பாகும் என நிச்சயமாகக் கூற முடியும்.




●●●

**த**னியார்மயம்-தாராளமயம் நடைமுறைக்கு வந்த காலந்தொட்டே அத்தியாவசிய உணவுப் பொருள் சட்டத்தையும், நெல், கோதுமை உள்ளிட்ட 24 விவசாய விளைபொருட்களுக்குக் குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயிக்கப்பட்டு வருவதையும் முற்றிலுமாகக் கைவிட வேண்டுமென மேற்குலக ஏகபோக உணவுக் கழகங்களும், இந்தியத் தரகு முதலாளிகளும், ஏற்றுமதி யாளர்களும் கோரி வந்தனர். கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாகவே இவற்றைக் கைவிடுவதற்கு இந்திய ஆளும் வர்க்கமும், ஆட்சியாளர்களும் பல்வேறு வழிகளில் முயன்று வந்தனர்.

மோடி பிரதமராகப் பதவியேற்ற பிறகு, நாடெங்கும் ஒரே வேளாண் சந்தையை உருவாக்கும் திட்டத்தோடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை விற்பனை மாதிரிச் சட்டத்தை 2017-ஆம் ஆண்டு கொண்டு வந்தார். அதனைத் தொடர்ந்து ஒப்பந்த விவசாயம் மற்றும் சேவைகள் சட்டத்தை மாநில அரசுகள் இயற்ற வேண்டுமென நிர்ப்பந்தம் கொடுக்கப்பட்டது. மேலும், மாநில ஒழுங்குமுறை விற்பனைக் கூட வரம்புகளைப் புறந்தள்ளக்கூடிய வகையில் மின்னணு தேசிய விவசாய சந்தை கட்டமைப்பு (E-NAM) உருவாக்கப்பட்டது.

காங்கிரசு, தனது 2019-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில் வேளாண் பொருள் விற்பனைக் கூடச் சட்டத்தை ரத்து செய்வது; வேளாண் பொருட்கள் ஏற்றுமதி மற்றும் மாநிலங்களுக்கு இடையே வர்த்தகம் செய்வது ஆகியவற்றில் காணப்படும் தடைகளை நீக்கு வது உள்ளிட்ட வாக்குறுதிகளை அளித்தது. காங்கிரசு அளித்த வாக்குறுதிகளை ஆட்சியைப் பிடித்த மோடி நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்.

தனித்தனியான இந்த மூன்று சட்டங்களின் நோக்கம் ஒன்றுதான். அதாவது, உணவுப் பொருட்கள் உற்பத்தி, அப்பொருட்களுக்கான விலை நிர்ணயம் மற்றும் கொள் முதல், சேமிப்பு ஆகியவற்றைத் தீர்மானிப்பதிலிருந்து அரசு படிப்படியாக விலகிக்கொண்டு, அப்பொறுப்பை கார்ப்பரேட் உணவுக் கழகங்கள், ஏற்றுமதியாளர்களிடம் ஒப்படைப்பதுதான்.

ஒவ்வொரு பொருளாதார சீர்திருத்த நடவடிக்கையின் பின்னும் அரசு தனது சமூகப் பொறுப்பு களிலிருந்து கழண்டு கொள்வதைக் கடந்த முப்பதாண்டு களாகப் பார்த்து வருகிறோம். இந்த வேளாண் சீர்திருத் தங்களின் விளைவும் அதுவாகத்தான் இருக்கும். குறிப்பாக, நெல்லையும் கோதுமையையும் இந்திய உணவுக் கழகம் கொள்முதல் செய்து இருப்பு வைப்பது படிப்படியாகக் குறைக்கப்பட்டு, இறுதியில் கைகழுவி விடும் நிலை ஏற்படும். வேளாண் விளைபொருட்



அத்தியாவசிய உணவுப் பொருள் சட்டத்தில் கொண்டுவரப்பட்டிருக்கும் சீர்திருத்தத்தின் முக்கிய இலக்கு ரேஷன் பொருள் விநியோகம்தான்.

களுக்குக் குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயித்துவரும் அரசின் நடைமுறை கைவிடப்படும். இவை இரண்டும் உலக வர்த்தகக் கழகத்தின் நிகழ்ச்சி நிரலில் ஏற்கெனவே இருந்து வருவதை நினைவில் கொண்டால், இந்தச் சீர்திருத்தங்கள் தற்போதுள்ள உணவுப் பாதுகாப்பையும், விலைக் கட்டுப்பாட்டையும் முற்றிலுமாக ஒழித்துக்கட்டுவதை நோக்கித்தான் செல்லும்.

பஞ்சம் அல்லது தேசியப் பேரிடர் ஏற்படும் காலங்களில் இத்திருத்தம் தற்காலிகமாக விலக்கிக் கொள்ளப்படும் எனக் கூறப்படுவதெல்லாம் பம்மாத்துதான். ஊரடங்கு காலத்தில் சமையல் எண்ணெய் உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விலைகள் உயர்ந்தபோது, மோடியின் கைகள் எதைப் பறித்துக் கொண்டிருந்தன? அத்தியாவசிய உணவுப் பொருள் சட்டம் நடைமுறையில் இருக்கும்போதே இதுதான் நிலைமை என்றால், இச்சட்டத் திருத்தத்தால் உணவுப் பொருட்களின் விலைகள் எந்தளவிற்கு உயரக்கூடும் என்பதை எண்ணிப் பார்ப்பதே நடுக்கமூட்டுவதாக உள்ளது.

எனவே, இந்த அவசரச் சட்டங்கள் விவசாயிகளுக்கும் ரேஷனில் வழங்கப்படும் உணவுப் பொருட்களை நம்பிவாழும் ஏழைகளுக்கும் மட்டும் பாதகமாக அமையப் போவதில்லை. அரசின் கட்டுப்பாடின்றி உணவுப் பொருட்களின் விலையைத் தனியார் மட்டுமே தீர்மானிக்கும் நிலை ஏற்படும்போது நடுத்தர மக்களும்கூடப் பாதிக்கப்படும் நிலைமை கண்டிப்பாக உருவாகும்.

பணமதிப்பழிப்பு நடவடிக்கை போலவே, ஊரடங்கு போலவே, இந்த மூன்று சீர்திருத்தங்களையும் மோடி அரசு அவசரச் சட்டங்களாக அறிவித்து நடைமுறைக்குக் கொண்டுவந்துவிட்டது. நாடாளுமன்றம், மாநிலங்களின் உரிமை ஆகியவற்றையெல்லாம் மோடி ஒரு பொருட்டாக மதிப்பதில்லை என்பதற்கு இந்த அவசரச் சட்டங்கள் இன்னுமொரு எடுத்துக்காட்டு. அதிகாரத் திமிரும் முதலாளித்துவ இலாப வெறியும் கொண்ட ஒரு பாசிஸ்டின் கையில் நாடு சிக்கிக்கொண்டிருப்பதை இந்த அவசரச் சட்டங்களின் அமலாக்கம் எடுத்துக்காட்டுகிறது.

இன்று நம்முன் உள்ள பிரச்சினை மோடியின் தலைமையில் அதிகாரத்தில் அமர்ந்துள்ள இந்த கார்ப்பரேட்-காவி பாசிச கும்பலை எப்படித் தோற்கடிப்பது என்பது மட்டுமல்ல. மக்களுக்கு எதிரான தனியார்மயம்-தாராளமயம் என்ற பொருளாதாரக் கொள்கையை எப்படித் தோற்கடிப்பது, அதற்கு மாற்றாக எதை முன்வைப்பது என்பதும்தான்.

பா.ஜ.க. மட்டுமின்றி, காங்கிரசு உள்ளிட்ட அனைத்து ஓட்டுக்கட்சிகளும் தனியார்மயத்தை ஆதரிக்கும் கட்சிகளாகவே உள்ளன. எனவே, அடுத்துவரும் தேர்தலோ, இந்தக் கட்சிக்கு மாற்றாக அந்தக் கட்சிக்கு வாக்களிப்பதோ, தனியார்மயம் உருவாக்கியுள்ள துயரங்களுக்கு நிரந்தரமான தீர்வாக, மாற்றாக இருக்க முடியாது.

மாறாக, உழைக்கும் மக்களுக்குப் பொருளுற்பத்தியிலும், அதன் விலையை நிர்ணயம் செய்வதிலும், விநியோகத்திலும் அதிகாரம் அளிக்கக்கூடிய ஒரு புதிய சமூக, பொருளாதார, அரசியல் கட்டமைப்பை உருவாக்குவது மட்டும்தான் இதற்கு ஒரே தீர்வு. அத்தகைய கட்டமைப்பை மந்திரத்தால் அல்ல, உழைக்கும் மக்கள் அமைப்பாகத் திரண்டு போராடுவதன் வழியாகத்தான் உருவாக்க முடியும்.

■ ரஹீம்

## அறிவிப்பு

புதிய ஜனநாயகம் இதழின் அலுவலகம் விரைவில் இடம் மாற்றம் செய்யப்படவிருக்கிறது. புதிய அலுவலக முகவரியை அறிவிக்கும் வரையில், இதுவரை பயன்படுத்தி வந்த அலுவலக முகவரிக்குப் பதிவு அஞ்சல், கூரியர், பணவிடை ஆகியவற்றை அனுப்ப வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

இவற்றுக்கு மாற்றாக, எமது மின்னஞ்சல் (puthiyajananayagam@gmail.com); வாட்ஸ்-ஆப் மற்றும் G-pay (94446 32561) சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கோருகிறோம். வங்கி கணக்கு விவரம், Bank: **SBI**, Branch: **Kodambakkam**, Account Name: **PUTHIYA JANANAYAGAM**, Account No: **10710430715**, IFS Code: **SBIN0001444**.

அலுவலகத் தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ள விரும்பும் வாசகர்கள், முகவர்கள் மறு அறிவிப்பு வரும் வரையில் காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரையில் மட்டுமே தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தவிர்க்கவியலாத நிர்வாகக் காரணங்கள் மற்றும் கரோனா ஊரடங்கு காரணமாக இதழ் தொடர்ச்சியாக வெளிவராத நிலையில், அச்சுப் பிரதிக்கான சந்தா தொகை செலுத்தியுள்ள வாசகர்களுக்கு விடுபட்டுள்ள இதழ்கள் அவர்கள் கணக்கில் நேர்செய்யப்பட்டு, அவர்களின் சந்தா காலம் அதற்கேற்ப நீட்டிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஆசிரியர் குழு.

# கார்ப்பரேட்டுகளின் பலிபீடத்தில் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு!

மோடி அரசு சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு சட்டத்தில் கொண்டுவரவிருக்கும் மாற்றங்கள், அதன் அழிவைத் துரிதப்படுத்தும்.

கரோனா உள்ளிட்ட பெருந்தொற்று நோய்க் கிருமிகள் உருவாகிப் பரவுவதற்கும், முதலாளித்துவப் பெருவீத உற்பத்தியால் இயற்கை-சுற்றுப்புறச் சூழல் மாசுபட்டிருப்பதற்கும் இடையே நெருங்கிய தொடர்பிருப்பதைச் சுட்டிக்காட்டி, சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்துப் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அறிவியல் அறிஞர்களும் வல்லுநர்களும் எச்சரித்து வருகிறார்கள்.

இயற்கையையும் சுற்றுப்புறச் சூழலையும் பாதுகாக்க வேண்டுமென்றால், சுற்றுப்புறச் சூழலுக்குக் கேடு விளைவிக்கக்கூடிய திட்டங்களை, தொழில்களைத் தடை செய்ய வேண்டும். சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டங்கள், விதிமுறைகளை இன்னும் கடுமையாக்க வேண்டும். இது பாமரனுக்கும் புரியக் கூடிய எளிய வழி. ஆனால், மோடி அரசோ இதற்கு நேரெதிர் திசையில் பயணிக்கிறது.

ஊரடங்கைப் பயன்படுத்திக் கொண்டு சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு சட்டங்களை மிகக் கேடாகத் தளர்த்த முயற்சிப்பதோடு, சுற்றுப்புறச் சூழலுக்குக் கேடு விளைவிக்கக்கூடிய 191 திட்டங்களுக்குச் சட்டவிரோதமான முறையில் தன்னிச்சையாக அனுமதியும் கொடுத்திருக்கிறது, மோடி அரசு.

ஒரு மரத்தைச் சாய்ப்பதற்கு அதனைச் சிறுகச் சிறுக வெட்டுவதற்குப் பதிலாக, அதன் வேரில் வெந்நீரையோ, வேறு ஏதாவது இரசாயனத்தையோ ஊற்றிவிட்டால், அது எவ்வளவு பெரிய மரமாக இருந்தாலும் சிறுகச்சிறுகப் பட்டுப்போய் அழிந்துவிடும். அப்படிச் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் வேரில், திருத்தம் என்ற பெயரில் வெந்நீர் ஊற்றியிருக்கிறது, மோடி அரசு.

எந்தவொரு பெரிய திட்டங்களையும் தொடங்குவதற்கு முன்பாக, அத்திட்டம் அமையவுள்ள பகுதியின் சுற்றுப்புறச் சூழலில் அத்திட்டம் ஏற்படுத்தக்கூடிய பாதிப்புகளைக் கண்டறிய சுற்றுப்புறச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை தயாரிக்க வேண்டும் என்பதும், அத்திட்டம் குறித்து அப்பகுதி மக்களின் கருத்துக்களைக் கேட்டறிய விரிவான கருத்துக்கேட்பு கூட்டங்களை நடத்த வேண்டும் என்பதும் தற்போது நடைமுறையிலுள்ள சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் அடிப்படையான விதிமுறைகள்.

இவை இரண்டையும் பெயரளவிலாவது பூர்த்தி செய்வதன் அடிப்படையில்தான் எந்தவொரு திட்டத்துக்கும் அனுமதி அளிக்கப்படும். எடுத்துக் காட்டாக, சேலம் எட்டுவழிச் சாலைத் திட்டத்திற்கு முறையாகச் சுற்றுப்புறச் சூழல் அனுமதி பெறப்படவில்லை என்ற அடிப்படையில்தான் அத்திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்துவது உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு சென்னை உயர்நீதி மன்றம் தடை விதித்திருக்கிறது.

இந்த விதிமுறைகள் இரண்டையும் நடைமுறைப்படுத்துவதில் சில விதி விலக்குகள் உள்ளன என்றபோதும், இந்த விதிமுறைகளிலிருந்து தமக்கு முற்றிலுமாக விலக்கு அளிக்க வேண்டும் என்பது தான் கார்ப்பரேட் முதலாளி வர்க்கத்தின் கோரிக்கை. 2006-ஆம் ஆண்டு சுற்றுப்புறச் சூழல் தாக்க மதிப்பீடு விதிமுறைகளைத் திருத்தியிருப்பதன் மூலம் அம்முதலாளிகளின் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறது, மோடி அரசு.

விசாகப்பட்டிணத்தில் இயங்கிவரும் எல்.ஜி.பாலிமெர் ஆலையில் ஏற்பட்ட வாயுக் கசிவால் மூச்சுத் திணறலுக்குள்ளாகி உயிருக்குப் போராடும் குழந்தை. (கோப்புப் படம்)



சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சகம் ஊரடங்கு அறிவிப்பதற்குச் சற்று முன்னதாக வெளியிட்ட சுற்றுப்புறச் சூழல் தாக்கம் குறித்த அறிவிக்கை 2020, ஏற்கெனவே இருந்துவரும் விதிமுறைகளில் மூன்று முக்கியமான தளர்வுகளை முன்மொழிந்திருக்கிறது.

முதலாவதாக, சுற்றுப்புறச் சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையின்றியே, ஒரு திட்டத்தைத் தொடங்கவோ அல்லது ஏற்கெனவே நடைமுறையில் இருந்துவரும் திட்டத்தை விரிவாக்கவோ அனுமதி அளிக்கிறது, இந்த அறிவிக்கை.

கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்பார்களே, அது போல, சுற்றுப்புறச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையின்றி தொடங்கப்படும் அல்லது விரிவாக்கப்படும் திட்டங்கள் குறித்துப் பிற்பாடு ஒரு கமிட்டியைப் போட்டு ஆய்வு செய்வார்களாம். அந்த கமிட்டி தரும் அறிக்கை எதிர்மறையாக இருந்தால், ஒன்று திட்டத்தை ரத்து செய்வார்களாம்; இல்லையென்றால், அபராதம் விதித்துத் திட்டத்திற்கு அரசு இசைவு தெரிவிக்குமாம்.



சென்னை-எண்ணூர் கடல் பகுதியில் ஏற்பட்ட கச்சா எண்ணெய்க் கசிவால் படிந்த மாசை வாளிகளில் வழித்து அப்புறப்படுத்தும் தன்னார்வலர்கள்: எப்பேர்பட்ட தொழில்நுட்பம்!

முறைகேடுகள், விதிமீறல்களுக்கு ஏற்ப அபராதம் - எப்பேர்பட்ட நியாயம்! பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்ட குற்றவாளியைத் தண்டிப்பதற்குப் பதிலாக, பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு அக்காமுகனைத் திருமணம் செய்து வைக்கும் நிலப்பிரபுத்துவ கட்டப் பஞ்சாயத்துக்கும் இதற்கும் வேறுபாடு உண்டா?

ஒரு வனப்பகுதியையோ அல்லது விளை நிலத்தையோ அழித்து உருவாக்கப்படும் திட்டங்கள் பிற்பாடு ரத்து செய்யப்பட்டாலும், அழிக்கப்பட்ட இயற்கையை அல்லது எளிய மக்களின் வாழ்க்கையை பழையபடி மீட்டுருவாக்கம் செய்துவிட முடியுமா? திட்டம் தொடங்கிய பிறகு ஆய்வு, அனுமதி, ரத்து என்பதெல்லாம் இயற்கை மீது, மக்களின் வாழ்க்கை மீது ஏவிவிடப்படும் சதித்தனமான நாசவேலைகள்தான்.

மேலும், இந்தியாவின் அதிகார வர்க்க கமிட்டிகளின் யோக்கியதை என்னவென்பது நாம் அறியாததா? போபால் விஷவாயு விபத்து விசாரணையை நினைவுபடுத்திப் பாருங்கள். யார் சுற்றுப்புறச் சூழலை நாசப்படுத்துகிறார்களோ, அவர்கள்தான் அதற்குரிய தண்டத் தொகையைச் செலுத்த வேண்டும் (*Polluters must pay*) என்பதுதான் இயற்கை நீதி. ஆனால், உச்ச நீதி மன்றமோ போபால் விஷவாயு வழக்கில் உரிய நட்ட ஈடு செலுத்துவதிலிருந்து யூனியன் கார்பைடு நிறுவனத்தைக் காப்பாற்றியது. இந்த உத்தரவால் விஷவாயுக் கசிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நட்ட ஈடும், தொடர் மருத்துவக் கண்காணிப்பும் சிகிச்சையும் கிடைக்கவில்லை. மாசுபடுத்தப்பட்ட அந்தப் பகுதி மீட்டுருவாக்கமும் செய்யப்படவில்லை.

இதுவொருபுறமிருக்க, கடந்த ஏப்ரல் மாதத்தில் உச்சநீதி மன்ற நீதிபதி சந்திரசூட் சுற்றுப்புறச் சூழல் குறித்த வழக்கொன்றில் அளித்த தீர்ப்பில், “திட்டம் தொடங்கிய பிறகு அனுமதி (post facto approval) வழங்க மைய அரசிற்கு அதிகாரம் கிடையாதென்றும், அப்படி அனுமதி வழங்குவது சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு அடிப்படை நியதிகளுக்கு எதிரானதென்றும்” தீர்ப்பளித்திருக்கிறார். இத்தீர்ப்பை ஓரங்கட்டிவிட்டுத்தான் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறது, மோடி அரசு.

இரண்டாவதாக, குறிப்பான சில திட்டங்களுக்கு அது செயல்படுத்தப்படும் பகுதிகளில் வாழும் மக்களிடம் கருத்துக்கேட்கத் தேவையில்லை எனக் கூறுகிறது, 2020 அறிவிக்கை. மற்ற திட்டங்களுக்குப் பொருத்தவரையில், பொது மக்களின் கருத்துக்களைத் தெரிவிப்பதற்காக வழங்கப்பட்டு வந்த கால அவகாசத்தை 30 நாட்களில் இருந்து 20 நாட்களாகக் குறைத்துள்ளது. மேலும், இத்திருத்தத்தில் குறிப்பான திட்டங்கள் என்பதற்கு எவ்வித வரையறையும் இல்லாததால், எல்லா திட்டங்களையும் இதன் கீழ் கொண்டுவந்து விடும் மோசடியும் இதனுள் மறைந்தே இருக்கிறது.

அதிகார வர்க்கத்தால் நடத்தப்படும் கருத்துக் கேட்புக் கூட்டங்கள் அனைத்துமே நாடகங்கள்தான். போலிசைக் குவித்து அச்சமூட்டும் விதத்திலும், அதனையும் மீறி மக்கள் எழுப்பும் மாற்றுக் கருத்துக்களை ஒதுக்கித் தள்ளிவிட்டும்தான் “கருத்துத் திணிக்கும் கூட்டங்கள்” நடத்தப்படுகின்றன. இந்தத் திருத்தமோ ஒப்புக்காகக்கூட அத்தகைய கூட்டங்களை நடத்தத் தேவையில்லை எனக் கூறி, அந்நாடகங்களுக்கு மங்களம் பாடிவிட்டது.

மூன்றாவதாக, நாட்டின் பாதுகாப்பு உள்ளிட்ட கேந்திரமான திட்டங்களுக்கு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டிலிருந்து விலக்கு அளிக்கும் சலுகையை வழங்குகிறது, 2020 அறிவிக்கை. ஆனால் இந்த வரைவறிக்கையில் நாட்டின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட திட்டங்கள் என்றால் என்னவென்பதற்கு எவ்விதமான தெளிவான வரையறையும் இல்லை. கேந்திரமான திட்டங்கள் எனப் பொத்தாம் பொதுவாகச் சொல்வதன் வழியாக, எந்தவொரு திட்டத்தையும் அதனுள் கொண்டுவந்து சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு என்பதையே காலில் போட்டு மிதித்துவிட முடியும். இதன் மூலம் இயற்கை வளங்




**அருணாச்சலப் பிரதேசத்தில் கட்டப்படவுள்ள உலகின் மிக உயரமானதும், இந்தியாவிலேயே மிகப்பெரியதுமான திபாங்க் அணைக்கட்டுத் திட்டத்தை எதிர்த்து மிஷ்மி பழங்குடியின மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)**

கள் - சுற்றுப்புறச் சூழலை மட்டுமல்ல, பொதுமக்களின் வாழ்வாதாரங்களையும் கேள்வி கேட்பாரின்றிக் கபளீகரம் செய்துவிட முடியும்.

இந்த மூன்று திருத்தங்களையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்த்தால், இனி புதிய திட்டங்களுக்கோ அல்லது பழைய திட்டங்களின் விரிவாக்கத்திற்கோ சுற்றுப்புறச் சூழல் தாக்க மதிப்பீடும் தேவையில்லை; பொது மக்களிடம் கருத்துக் கேட்க வேண்டிய அவசியமும் இல்லை எனப் பொருள்படுகிறது. இவ்வாறான திருத்தங்கள் ஸ்டெர்லைட் போன்ற நாசகார ஆலைகளுக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்து, அது நழுவி வாயில் விழுவது போன்றதாகும்.

இவை ஒருபுறமிருக்க, எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்ற கதையாக, அறிவிக்கை 2020 மிகவும் வெளிப்படையாக ரியல் எஸ்டேட் முதலைகளின் நலனை முன்னிறுத்திக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதுவரையிலும் 20,000 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்படும் கட்டுமானங்களுக்கு சுற்றுப்புறச் சூழல் தாக்க மதிப்பீடும், மக்களின் கருத்தும் கேட்கப்பட வேண்டும் என இருந்த விதியை, 1,50,000 சதுர மீட்டர் பரப்பளவு வரையிலும் கட்டப்படும் கட்டுமானங்களுக்குக்கூட இவையிரண்டும் தேவையில்லை என்ற திருத்தத்தை முன்வைத்திருக்கிறது.

மேலும், மிக முக்கியமாக, சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்போடு தொடர்புடைய தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையம் உள்ளிட்டுத் தன்னாட்சி அதிகாரத்தோடு செயல்பட்டு வந்த பல்வேறு ஆணையங்களையும் ஒரே மண்டல அலுவலரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் கட்டமைப்பு சீர்திருத்தத்தையும் கொண்டுவந்திருக்கிறது, மைய அரசு. இம்மாற்றம் கார்ப்பரேட் முதலாளிகளுக்காகக் கொண்டுவரப்பட்டிருக்கும் ஒற்றைச் சாளர அனுமதி முறை தவிர வேறில்லை.

இவற்றுக்கெல்லாம் அப்பால், தற்போது ஊரடங்கியிருக்கும் சூழலைப் பயன்படுத்தி டெல்லியில் புதிய நாடாளுமன்றம் கட்டும் திட்டம், அருணாச்சலப்பிரதேசத்தில் ஈடலின் அணை கட்டும் திட்டம், வேடந்தாங்கல் பகுதியிலுள்ள மருந்து தயாரிக்கும் ஆலை விரிவாக்கத்திற்காக வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தின் பரப்பளவைக் குறைப்பது, அசாமிலுள்ள பட்காய் யானைகள் வழித்தடப் பகுதியில் நிலக்கரிச் சுரங்கம் அமைப்பது, கோவாவிலுள்ள பகவான் மஹாவீர் வனவிலங்கு சரணாலயத்தின் வழியாக நெடுஞ்சாலை அமைப்பது, கிர் தேசியப் பூங்கா பகுதியில் சுண்ணாம்பு சுரங்கம் அமைப்பது எனச் சுற்றுச்சூழலுக்குக் கேடுவிளைவிக்கக்கூடிய 191 திட்டங்களுக்குச் சுற்றுச்சூழல் அனுமதியை வழங்கியிருக்கிறது, மோடி அரசு.

நாடாளுமன்றம் கூடாதநிலையில், இந்த அனுமதியை எதிர்க்கட்சிகள் பிரச்சினையாக்கி விடக் கூடாது என்பதற்காகவே 30 திட்டங்களைப் பற்றி விவாதிப்பதற்கென காணொலி கூட்டத்தைக் கண்துடைப்பு நடவடிக்கையாக நடத்தியிருக்கிறது. இவ்விவாதங்களில் திட்ட அனுமதிக்கு எவ்வித இடையூறும் ஏற்பட்டுவிடக் கூடாதென்பதற்காக, துறைசார்ந்த வல்லுநர்கள் எவரும் தமது கருத்தை முழுமையாகத் தெரிவிக்க வாய்ப்பளிக்காத வண்ணம் ஒவ்வொரு திட்டத்தின் மீதான கருத்தையும் வெறும் 10 நிமிடங்களுக்குள் தெரிவிக்கக் கட்டாயப்படுத்தப் பட்டுள்ளனர்.

புதிய நாடாளுமன்றம் கட்டுவதற்கான திட்டத்திற்கு அனுமதியளிக்கப்பட்டதை எதிர்த்து 60 பிரமுகர்கள் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில்,


**"புதிய ஜனநாயகம்" உரிமையாளர் மற்றும் இதர விவரங்கள்**
**படிவம் IV (விதி 8-இன் படி)**

1. வெளியிடும் இடம் : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024.
2. வெளியிடும் காலம் : மாதம் ஒருமுறை
3. அச்சிடுபவர் பெயர் : இரா. சண்முகராசு
   இந்தியக் குடிமகனா? : ஆம்
   முகவரி : எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024.
4. உரிமையாளர் மற்றும் வெளியிடுபவர் பெயர்: இரா. சண்முகராசு,
   இந்தியக் குடிமகனா? : ஆம்
   முகவரி : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024.
5. ஆசிரியர் பெயர் : இரா. சண்முகராசு
   இந்தியக் குடிமகனா? : ஆம்
   முகவரி : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024.

இரா. சண்முகராசுவாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

(ஒப்பம்) இரா. சண்முகராசு,
வெளியிடுபவர்.

01.03.2020

“தங்களது செயல்கள், நீரோ மன்னனை நினைவுபடுத்துவதாக”ச் சாடியுள்ளனர். மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து அக்கறை கொண்ட அறிவியல் அறிஞர்கள், தொழில்முறை வல்லுநர்கள் அடங்கிய 291 பேர் கொண்ட குழு, “நாடு கோவிட்-19 தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கையில், எவ்வித ஆய்வுகளுமின்றி பல்வேறு திட்டங்களுக்குச் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதை நிறுத்துமாறு” மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பிரகாஷ் ஜவடேகருக்கு கடிதம் எழுதியுள்ளனர். இவர்களின் கடிதங்களெல்லாம் எங்கே போயிருக்கக் கூடுமென்று சொல்லத் தேவையில்லை. நல்வாய்ப்பாக, இவர்களுள் ஒருவரையும் நகர்ப்புற நக்சல்கள் என சங்கப் பரிவாரக் கும்பல் முத்திரை குத்தவுமில்லை.



“சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டங்களிலிருந்து தமக்கு முற்றிலுமாக விலக்கு அளிக்க வேண்டும் என்பதுதான் கார்ப்பரேட் முதலாளி வர்க்கத்தின் கோரிக்கை. சுற்றுப்புறச் சூழல் தாக்க மதிப்பீடு விதிமுறைகளைத் திருத்தியிருப்பதன் மூலம் அக்கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறது, மோடி அரசு.”

மாற்றுக் கருத்து, ஜனநாயகம் ஆகியவற்றின் மீது மோடிக்கு எந்தளவிற்கு வன்மமும் வெறுப்பும் உண்டோ, அதே அளவிற்கு சுற்றுப்புறச் சூழல் விதிகளின் மீதும், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பை முன்னிறுத்தும் அமைப்புகள், செயல்வீரர்கள் மீதும் மோடிக்கு வன்மமும் வெறுப்பும் உண்டு. அவர் 2014-இல் பிரதமர் பதவியில் உட்கார்ந்தவுடனேயே, அவரது அரசு பெருந்திட்டங்களுக்கான சுற்றுப்புறச் சூழல் அனுமதிக்கு இணையதள வழியில் விண்ணப்பித்தால் போதும் என ஒற்றைச்சாளர முறையைக் கொண்டு வந்ததும்; சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு குறித்துக் கருத்துத் தெரிவிப்பவர்களை வளர்ச்சிக்கு எதிரானவர்கள் என அவரது அரசு அவதூறு செய்து வருவதும் இந்த வன்மத்தைப் புட்டு வைக்கின்றன.

ஓரளவிற்குக் கட்டுக்கோப்பான சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டங்கள் நடைமுறையில் இருக்கும் போதே, நமது நாட்டின் சுற்றுப்புறச் சூழல் எந்தளவிற்கு நாசப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதற்கு மாசடைந்த நொய்யல் ஆறு தொடங்கி பல்வேறு எடுத்துக்காட்டுகளைக் கூற முடியும். சென்னை எண்ணூர் கடல் பகுதியில் கப்பலில் இருந்து கொட்டிய கச்சா எண்ணெயை வாரி எடுக்க வாளிகளைப் பயன்படுத்திய அவலத்தை நாடே கண்டது. மாசடைந்து போன சுற்றுப்புறச் சூழலை மீட்டுருவாக்க இந்திய அரசிடம் உயர் தொழில்நுட்ப அறிவு எதுவுமில்லை என்பதை இந்தச் சம்பவம் அம்பலப்படுத்தியது. இந்த நிலையில் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு என்பதற்கே வேட்டு வைக்கக் கூடிய திருத்தங்களை ஊரடங்கு நேரத்தில் கொண்டு வந்து, அவற்றைச் சட்டமாக்கி விடத் துடித்து வருகிறது, மோடி அரசு.

இத்திருத்தங்கள் சட்டமாக்கப்பட்டால், சேலம் எட்டுவழிச் சாலைத் திட்டம் நீதிமன்றத் தடையை முடக்கிப்போட்டு விட்டு நடைமுறைக்கு வரும். கர்நாடகா அரசு காவிரியில் கட்டத் திட்டமிட்டிருக்கும் மேகதாது அணையும், கேரள அரசு முல்லைப் பெரியாறு அணைக்குப் பதிலாகப் புதிய அணை கட்டத் திட்டமிட்டிருப்பதும் செயல் வடிவம் பெறும். மிகவும் முக்கியமாக, காவிரி டெல்டாவில் கேள்வி கேட்பாரின்றி ஹைட்ரோ கார்பன் கிணறுகள் அமைப்பதற்கு வழி திறந்துவிடப்படும். சுருக்கமாகச் சொன்னால், இத்திருத்தங்கள் தமிழகத்தைச் சுடுகாடாகவும், வறண்ட பாலையாகவும் மாற்றக்கூடிய அபாயத்தைக் கொண்டுள்ளன.

தீவிரமடைந்துவரும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முதலீடுகளை ஈர்ப்பது என்ற தேன் தடவிய வார்த்தைகளுக்குள் ஒளிந்துகொண்டுதான், வடமாநில பா.ஜ.க. அரசுகள் தொழிலாளர் நலச் சட்டங்களை, முதலாளிகள் நலச் சட்டங்களாகத் திருத்தியுள்ளன. நாட்டின் கேந்திரமான அனைத்துத் துறைகளிலும் இந்தியத் தரகு முதலாளிகளையும் பன்னாட்டு நிறுவனங்களையும் அனுமதிப்பதற்கு ஏற்ப சீர்திருத்தங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்குவது என்ற போர்வையில் பெரும் வியாபாரிகளின் நலனை முன்னிறுத்தி அத்தியாவசிய உணவுப் பொருள் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இலவசமாகவும் மானியக் கட்டணத்திலும் வழங்கப்படும் மின் விநியோகக் கட்டமைப்பை ரத்து செய்யும் மின்சார திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இவற்றின் தொடர்ச்சியாகத்தான் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டங்களிலும் கார்ப்பரேட் முதலாளிகளின் நலனுக்கு ஏற்றபடி திருத்தங்களை மேற்கொள்ள முயற்சிக்கிறது, மோடி அரசு.

இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனி தீர்வுகளை முன்வைத்து தனித்தனியாகப் போராடுவது எதிர்ப்புகளைப் பலவீனப்படுத்தக் கூடும். மாறாக, ஒரே தீர்வாக, கார்ப்பரேட் முதலாளிகளின் கைகளிலுள்ள அதிகாரத்தை மக்களின் கரங்களுக்கு மாற்றும் சமூக, பொருளாதார தீர்வை முன்வைத்துப் போராடுவதுதான் ஒரே மாற்று!

■ **பூங்குழலி**

# ஊரடங்கு அல்ல, அறிவிக்கப்படாத அவசர நிலை!

**ஆர்.எஸ்.எஸ்.–இன் கார்ப்பரேட்–காவி பாசிசத் திட்டங்களை எதிர்த்துவரும் ஒவ்வொருவரையும் ஊரடங்கைப் பயன்படுத்திக்கொண்டு காராகிருகத்தில் தள்ளி வருகிறது, மோடி அரசு.**

நதாஷா நர்வால் - ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழக வரலாற்றுத் துறை ஆராய்ச்சி (Ph.D.) மாணவி. தேவங்கனா கலிதா, அதே பல்கலைக்கழகத்தின் பெண்ணியத் துறை ஆய்வியல் நிறைஞர் (M.Phil.) மாணவி. இவர்கள் இருவரும் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் இயங்கிவரும் “பிஞ்ஜ்ரா தோட்” (கூண்டை உடை) என்ற பெண்ணிய அமைப்பின் உறுப்பினர்கள்.

இவர்கள் இருவரையும் கடந்த பிப்ரவரியில் வடகிழக்கு டெல்லியில் நடந்த கலவரம் தொடர்பாக மே 23 அன்று கைது செய்தது, டெல்லி போலிசு. அரசு ஊழியர்களைப் பணி செய்யவிடாமல் தடுக்கும் நோக்கில் அவர்கள் மீது தாக்குதல் தொடுத்தது உள்ளிட்டு ஏழு கிரிமினல் குற்றச்சாட்டுகளை இவ்விரு மாணவிகள் மீதும் சுமத்தி, கடந்த பிப்ரவரியிலேயே முதல் தகவல் அறிக்கை தயார் செய்திருந்த டெல்லி போலிசு, அதன் பின் மூன்று மாதங்கள் கழிந்த நிலையில், ஊரடங்கு நேரத்தில், இளம் மாணவிகள் என்றும் பாராமல் நடாஷாவையும் கலிதாவையும் கைது செய்திருக்கிறது.

இவர்களது பிணை மனுக்கள் மீது மறுநாள் (மே 24) நடந்த விசாரணையில், “இருவரும் அரசு ஊழியர்களைப் பணி செய்யவிடாமல் தடுக்கும் நோக்கில் தாக்குதல் தொடுத்தார்கள் எனக் குற்றஞ்சுமத்தப்படுவதற்கு முதல் கட்ட ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை” என டெல்லி மாநகர குற்றவியல் நடுவர் கருத்துத் தெரிவித்தார். இவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்த மற்றைய குற்றச்சாட்டுகள் பிணையில் வெளிவரக்கூடிய சாதாரண குற்றச்சாட்டுகள் என்ற நிலையில், பிணையில் வெளிவரமுடியாத இந்தக் குற்றச்சாட்டும் கலகலத்துப் போனது.

அவ்விரு மாணவிகளும் பிணையில் வெளியே வந்துவிடக் கூடும் என்பதை விசாரணையின் போக்கில் அனுமானித்த டெல்லி போலிசின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு, அதனைத் தடுக்கும் திட்டத்தோடு விசாரணை முடிவடைவதற்கு முன்னரே இரண்டாவது முதல் தகவல் அறிக்கையைத் தாக்கல் செய்தது. இதில், அவர்கள் இருவர் மீதும் முந்தையதைவிடக் கடுமையான குற்றச்சாட்டுக்கள் - கொலை, கொலை முயற்சி, சதி தொடங்கிச் சட்ட விரோதமாக ஆயுதம் வைத்திருந்தனர் என்பது வரையிலும் - சுமத்தப்பட்டன.

இந்த இரண்டாவது முதல் தகவல் அறிக்கையில் சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிப்பதற்காக அவர்கள் இருவரையும் 14 நாட்கள் போலிசு காவலில் எடுத்துக் கொள்ள அனுமதி கோரியது சிறப்புப் புலனாய்வுக் குழு. நீதிமன்றம் இரண்டு நாட்கள் மட்டுமே போலிசு காவலுக்கு அனுமதித்த நிலையில், போலிசு விசாரணை முடிந்தபின், அவர்கள் இருவரும் திகார் சிறையில் நீதிமன்றக் காவலில் அடைக்கப்பட்டவுடனேயே நடாஷா மீது உபா சட்டத்தின் கீழ் புதிதாக ஒரு வழக்கும், கலிதா மீது மூன்றாவது முதல் தகவல் அறிக்கையும் பதியப்பட்டன.

ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவிகள் தேவங்கனா கலிதா (இடது) மற்றும் நதாஷா நர்வால்.





ஜே.என்.யூ. மாணவிகள் நடாஷா, கலிதா ஆகிய இருவர் மீதும் அடுத்தடுத்து வழக்குகள் பாய்ச்சப்படுவதிலிருந்து, அம்மாணவிகளைப் பழி தீர்த்துக்கொள்ளுவதுதான் டெல்லி போலிசைக் கையில் வைத்திருக்கும் மோடி அரசின் நோக்கம் என்பதை யாரும் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

நடாஷா, கலிதா என்ற இந்த இரு மாணவிகள் மீது மோடி அரசிற்கு ஏன் இத்துணை வன்மம் என்றால், அவர்கள் இருவரும் குடியுரிமை திருத்தச் சட்டத்தையும், தேசியக் குடிமக்கள் பதிவேடு நடவடிக்

கையையும் எதிர்த்தார்கள், அவ்விரண்டையும் எதிர்த்து டெல்லி நகர முசுலிம்கள் நடத்திய போராட்டங்களில் கலந்துகொண்டதோடு, அவர்கள் சார்ந்த அமைப்பான பிஞ்ஜரா தோட் அதற்கு ஆதரவு அளித்தது என்பது தவிர வேறு காரணங்கள் இல்லை.

இவர்கள் இருவரை மட்டுமல்ல, குடியுரிமைத் திருத்தச் சட்டத்தையும் தேசியக் குடிமக்கள் பதிவேட்டையும் எதிர்க்கும் ஒவ்வொருவரையும் நிரந்தரமாகச் சிறையில் அடைக்க வேண்டும் என்ற தீய நோக்கத்தோடு மோடி அரசின் உள்துறை அமைச்சகம் செயல்பட்டு வருவது, டெல்லி கலவரம் தொடர்பாகப் பதியப்பட்டுள்ள பல்வேறு வழக்குகளில் அம்பலமாகி வருகிறது.



காங்கிரசு கட்சியின் முன்னாள் மாநகர மன்ற உறுப்பினர் இஷ்ரத் ஜஹான். (கோப்புப் படம்)

டெல்லி ஜாமியா மிலியா இஸ்லாமியா பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மாணவியான ஸஃபூரா ஜார்கர் மீது போடப்பட்டிருக்கும் வழக்குகள் மோடி அரசின் மதவெறி பாசிச வன்மத்திற்கு மற்றொரு உதாரணம். குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை எதிர்த்து டெல்லியின் ஜாஃப்ராபாத் பகுதியில் நடந்த போராட்டத்தையொட்டி கைது செய்யப்பட்ட ஸஃபூராவிற்கு நீதிமன்றம் பிணை வழங்கியவுடனேயே, அவர் டெல்லி கலவரத்தின் சதிகாரர்களுள் ஒருவராகக் குற்றம் சுமத்தப்பட்டு மீண்டும் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சதி வழக்கு தொடர்பான விசாரணையின் போது, டெல்லி கலவரத்தில் ஸஃபூரா ஆற்றிய பாத்திரம் குறித்த போலிசின் குற்றச்சாட்டில் தெளிவில்லை என நீதிபதி தெரிவித்தவுடன், ஸஃபூரா மீது உபா சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகள் புனையப்பட்டன.

ஸஃபூரா கர்ப்பிணி என்ற நிலையிலும்கூட, அவர் பிணையில் வெளியே வருவதை மோடி அரசு விரும்பவில்லை. அவர் மீதான இத்துணை வன்மத்திற்குக் காரணம், ஸஃபூரா குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை எதிர்த்தார் என்பது மட்டுமின்றி, அவர் ஒரு முசுலிம், முக்கியமாக ஜம்மு காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்த முசுலிம் என்பது மற்றொரு முக்கியமான காரணமாகும்.

டெல்லியைச் சேர்ந்த வழக்குரைஞரும் காங்கிரசு கட்சியைச் சேர்ந்த முன்னாள் டெல்லி மாநகர மன்ற உறுப்பினருமான இஷ்ரத் ஜஹானுக்கு டெல்லி கலவரம் தொடர்பான வழக்கில் பிணை வழங்கிய கூடுதல் குற்றவியல் நடுவர் மன்ற நீதிபதி, தனது தீர்ப்பில், "குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராக நடந்த போராட்டங்களுக்கு ஆதரவு அளித்துவந்த அவர் மீது டெல்லி போலிசு பொய்யாக வழக்கு போட்டிருப்பதாகக் குறிப்பிட்டதோடு, அரசின் நியாயமற்ற நடவடிக்கைகளை எதிர்ப்பதற்கு அவருக்கு அடிப்படை உரிமை இருக்கிறது" என்றும் சுட்டிக் காட்டினார். இவ்வாறான நீதிமன்ற உத்தரவுக்குப் பின், இஷ்ரத் ஜஹான் மீதான வழக்கு திரும்பப் பெறப்பட்டிருக்க வேண்டும். ஆனால், டெல்லி போலிசோ அவருக்குப் பிணை வழங்கப்பட்ட மறுநிமிடமே அவர் மீது உபா சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்தது.

டெல்லி கலவரம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட பாப்புலர் ஃபிரண்ட் ஆஃப் இந்தியா என்ற அமைப்பைச் சேர்ந்த பர்வேஸ் ஆலம், முகம்மது இல்யாஸ், முகம்மது தானிஷ் மீதான வழக்கிலும் இதே வன்மம்தான். டெல்லி குற்றவியல் நீதிமன்ற நடுவர் பிரபா தீப் கவுர் இம்மூவருக்கும் பிணை வழங்கியவுடனேயே, அவர்கள் பிணையில் வெளியே வந்துவிடக்கூடாது என்ற உள்நோக்கத்தோடு அவர்கள் மீது கொலை, கொலை முயற்சி, டெல்லி கலவரத்திற்கு நிதி ஏற்பாடு செய்து கொடுத்தது மற்றும் அக்கலவரத்தைத் திட்டமிட்டு நடத்தியது ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, மீண்டும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

டெல்லி கலவரம் தொடர்பாக இதுவரை புனையப்பட்ட வழக்குகளை எடுத்துக் கொண்டால், டெல்லி போலிசும் சிறப்புப் புலனாய்வுப் பிரிவும் வெறும் கைத்தடிகள்தான். விசாரணையை எந்தத் திசையில் எடுத்துச் செல்ல வேண்டும், யார் யாரையெல்லாம் கைது செய்ய வேண்டும், கைது செய்யப்பட்டவர்கள் மீது என்னென்ன வழக்குகளை அடுத்தடுத்துப் பாய்ச்ச வேண்டும் என்பதையெல்லாம் முடிவு செய்வது சங்கப் பரிவாரத்தைச் சேர்ந்த நீதிக்கான அறைகூவல் மற்றும் அறிவுத்துறையினர்-கல்வியாளர்கள் குழு என்ற இரண்டு அமைப்புகள்தான். இவ்விரண்டு அமைப்புகளும் இணைந்து டெல்லி கலவரம் தொடர்பாக மைய அரசின் உள்துறைக்குக் கொடுத்திருக்கும் அறிக்கையின்படிதான் போலிசு விசாரணை நடந்துவருவதையும் வழக்குகள் பதியப்படுவதையும் மனித உரிமைச் செயல்பாட்டாளர்கள் பலரும் அம்பலப் படுத்தியுள்ளனர்.

டெல்லி ஜாமியா இஸ்லாமிய பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவி ஸஃபூரா ஜார்கார் (இடது); அப்பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர் மீரான் ஹைதர்.





ஜாமியா பல்கலைக்கழக மாணவன் ஆசிஃப் இக்பால் தன்ஹா வழக்குத் தொடர்பான

விசாரணையில் கூடுதல் குற்றவியல் நீதிபதி தர்மேந்தர் ராணா, "போலிசின் வழக்கு குறித்த குறிப்பு நோட்டை ஆராயும் போது, போலிசு விசாரணை ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கியே நகரும் உண்மை தெரிவதாக"க் குறிப்பிடுகிறார்.

டெல்லி கலவரத்தின் போது கடைகளை எரித்ததாகக் குற்றஞ்சுமத்தப்பட்டவரின் பிணை குறித்த மனுவை விசாரித்த டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதி அனுப் ஜெய்ராம் பம்பானி, "பிணையை மறுப்பதன் மூலம் சமூகத்திற்கு ஒரு செய்தியை விடுக்க வேண்டும் என அரசு விரும்புகிறது. ஆனால், நீதிமன்றம் அப்படிச் செயல்பட முடியாது" எனக் குறிப்பிட்டிருக்கிறார்.





அசாம் மாநிலத்தைச் சேர்ந்த சமூகச் செயற்பாட்டாளர்கள் அகில் கோகாய் (இடது) மற்றும் பிட்டு சோனாவால்.

நடாஷா, கலிதா, ஸஃபூரா ஜார்கர், இஷ்ரத் ஜஹான் உள்ளிட்டோர் மீதான வழக்குகளில் கீழமை நீதிமன்றங்களும், டெல்லி உயர்நீதி மன்றமும் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் மோடி அரசு சிறுபான்மை முசுலீம்களுக்கும், ஜனநாயக சக்திகளுக்கும் எதிராக அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டு, அவர்களை ஒரேயடியாக ஒடுக்கிவிட வேண்டும் என்ற நோக்கத்துடனேயே செயல்பட்டு வருவதை அம்பலப்படுத்துகின்றன.

இதன் காரணமாகத்தான் டெல்லி கலவரம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருக்கும் பெரும்பாலோர் மீது பாசிச கருப்புச் சட்டமான உபா ஏவிவிடப்பட்டிருக்கிறது. இச்சட்டத்தின் கீழ் இவர்கள் மீது வழக்குப் பதிவு செய்வதற்கு எவ்விதமான காத்திரமான ஆதாரமும் அரசுக்குத் தேவையாக இருக்கவில்லை என்பதை அசாம் மாநிலத்தைச் சேர்ந்த அகில் கோகோய், பிட்டு சோனாவால் ஆகிய இருவர் மீது போடப்பட்டிருக்கும் உபா வழக்கு எடுத்துக்காட்டுகிறது.

நதாஷா நர்வால் மற்றும் தேவங்கனா கலிதா ஆகியோரை விடுதலை செய்யக் கோரி இந்திய மாணவர் சங்கத்தின் சார்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டம்.




அசாம் மாநிலத்தில் செயல்பட்டு வரும் சத்ரா முக்தி சங்க்ராம் சமிதி என்ற மாணவர் அமைப்பின் தலைவரான பிட்டு சோனாவால், கிரிஷக் முக்தி சங்க்ராம் சமிதி என்ற விவசாய அமைப்பின் ஆலோசகரான அகில் கோகாய் ஆகிய இருவர் மீதும் உபா சட்டத்தைப் பாய்ச்சுவதற்கு அவர்களை மாவோயிசத் தீவிரவாத அமைப்பின் ஆதரவாளர்களாகக் காட்டியிருக்கிறது, அசாம் மாநில பா.ஜ.க. அரசு.

இதற்கு ஆதாரமாக, இவர்கள் தமது முகநூல் பக்கங்களில் லெனினின் படத்தை வைத்திருந்தார்கள், அவர்களிடம் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை புத்தகம் இருந்தது, அவர்கள் தங்கள் நண்பர்களைத் தோழர் என அழைத்து வருகிறார்கள், முதலாளித்துவத்தை அழிக்க வேண்டும் என்ற லெனினின் மேற்கோளை தமது முகநூலில் வைத்துள்ளனர் எனத் தமது குற்றப் பத்திரிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது, அசாம் மாநில போலிசு.

கரோனா தொற்று பேரிடரைப் பயன்படுத்திக் கொண்டு, இரண்டு முனைகளில் தாக்குதல் தொடுத்து வருகிறது மோடி அரசு. ஒன்று, தனது பார்ப்பன-பாசிசத் திட்டங்களை எதிர்த்துப் போராடிவரும் ஜனநாயக, முற்போக்கு சக்திகள் மீது தொடுக்கப்படும் தாக்குதல். மற்றொன்று, தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உரிமைகள் பறிப்பு, மின்சாரம், சுற்றுப்புறச் சூழல், அத்தியாவசிய உணவுப் பொருள் சட்டங்களில் செய்யப்பட்டிருக்கும் திருத்தங்கள் மற்றும் நாட்டின் இயற்கை வளங்களையும், பொதுத்துறை நிறுவனங்களையும் இந்தியத் தரகு முதலாளிகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் கொள்ளைக்குத் திறந்துவிடுவதற்கு ஏற்ப செய்யப்பட்டிருக்கும் சீர்திருத்தங்கள். இவையிரண்டையும் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்துப் பார்க்க முடியாது. இந்தத் தாக்குதல்களைத்தான் கார்ப்பரேட் - காவி பாசிசம் என நாம் குறிப்பிடுகிறோம்.

கரோனா தொற்றைவிட, இந்த கார்ப்பரேட் - காவி பாசிசம்தான் நாட்டைக் கவ்வியிருக்கும் மிகப் பெரும் அபாயமாகும். இந்த அபாயத்தை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தி எதிர்த்து நின்ற தற்காகவே வரவர ராவ், ஆனந்த் தெல்தும்டே, சுதா பரத்வாஜ், பேராசிரியர் சாய்பாபா உள்ளிட்ட அறிவுத் துறையினரும்; நடாஷா, ஸஃபூரா, கலிதா உள்ளிட்ட முற்போக்கு மாணவர்கள்; பிட்டு சோனாவால், அகில் கோகோய் உள்ளிட்ட ஜனநாயக சக்திகள் மீதும் பொய் வழக்குகள் போடப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

■ செல்வம்

# நாய் வாலை நிமிர்த்த முடியாது! போலிசைத் திருத்த முடியாது!!

கார்ப்பரேட் – காவி பாசிசம் நாட்டைக் கவ்விவரும் சூழலில், போலிசைச் சீர்திருத்தும் சட்டங்களை இயற்றி நடைமுறைப்படுத்தக் கோருவது போகாத ஊருக்கு வழி தேடுவதாகும்.

**ப**யங்கரவாதம், பயங்கரவாதிகள் குறித்து ஓட்டுக் கட்சிகள், குறிப்பாக, பா.ஜ.க., காங்கிரசும்; துக்ளக், தினமணி, தினமலர் உள்ளிட்ட தேசிய ஊடகங்களும் உருவாக்கியிருந்த கதையாடல்கள் அனைத்தையும் கலைத்துப் போட்டுவிட்டது சாத்தான்குளம் கொட்டடிக் கொலைகள். அரசு பயங்கரவாதம் எனக் கூறப்படுகின்ற போலிசு பயங்கரவாதத்தை மிஞ்சிய பயங்கரவாதம் வேறொன்றுமில்லை என்பதை ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகிய இருவரின் பரிதாபகரமான சாவு எடுத்துக் காட்டியிருக்கிறது.

ஜெயராஜ்-பென்னிக்ஸ் கொட்டடிக் கொலைகள் போலிசு பயங்கரவாதத்தை அம்பலப்படுத்தியிருக்கும் அதேவேளையில், கரோனாவிற்கு எதிராக போலிசு துறையே உயிரைக் கொடுத்துப் போராடிவரும் வேளையில், அதற்குக் களங்கம் கற்பிப்பது போல இந்தச் சம்பவம் நடந்துவிட்டதென்று கூறி, இப்படு கொலையைச் சில போக்கிரி அதிகாரிகளின் தவறாகவும் விதிவிலக்கான ஒன்றாகவும் காட்டிவிடும் முயற்சியும் நடந்து வருகிறது.

இப்படுகொலை தொடர்பான ஆரம்பகட்ட விசாரணையைக் கண்காணித்துவரும் உயர்நீதி மன்ற நீதிபதிகள் பி.என்.பிரகாஷ், பி.புகழேந்தி அடங்கிய அமர்வும் கூட, “போலிசார் மன அழுத்தத்துடனேயே பணியாற்ற வேண்டியிருப்பதாகவும், கரோனா காலத்தில் அவர்களின் மன அழுத்தம் இன்னும் அதிகரித்திருப்பதா கவும், அத்தகைய மன அழுத்தம் இப்படிப்பட்ட அத்து மீறல்கள் நடந்துவிடுவதற்குக் காரணமாக அமைந்து விடுகிறது” என்றும் கருத்துத் தெரிவித்திருக்கிறது.

இவ்வழக்கில் மட்டுமல்ல, எப்பொழுதெல்லாம் போலிசின் மனித உரிமை மீறல்கள் பொதுவெளியில் விவாதப் பொருளாகிறதோ, அப்பொழுதெல்லாம் போலிசின் பணிச் சுமை, மன அழுத்தங்கள், அவர் களின் இன்ன பிற சங்கடங்கள் குறித்தெல்லாம் பேசப் பட்டு, அத்துறை மீது பொதுமக்கள் மத்தியில் எழும் கோபத்தை மட்டுப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப் பட்டு வருகிறது. போலிசாருக்கு மனவளப் பயிற்சி கொடுத்தும், அத்துறையில் சீர்திருத்தங்களைச் செய்தும் போலிசைப் பொதுமக்களின் சேவகனாக, நண்பனாக மாற்றிவிட முடியும் என்ற நம்பிக்கைப் பொதுமக்கள் மத்தியில் விதைக்கப்படுகிறது.

●●●

**போ**லிசு நிலையங்களில் நடந்திருக்கும் ஒவ்வொரு அக்கிரமும், அநீதியும் மன அழுத்தம் காரணமாக நடைபெறுவதில்லை; மாறாக, போலிசிற்கு வழங்கப்பட்டிருக்கும் தனிப்பட்ட அதிகாரங்கள் காரணமாகவும், அதனால் உருவாகும் திமிரின் காரண மாகவும், எத்தகைய மனிதத் தன்மையற்ற குற்றத்தைச் செய்தாலும் அதிலிருந்து உயர் அதிகாரிகளும், அரசும், ஏன் பல்வேறு சமயங்களில் நீதிமன்றமும்கூடத் தண்டனையிலிருந்து தம்மைக் காப்பாற்றிவிடுவார்கள் என போலிசின் மூளையில் பதிந்துவிட்ட தைரியம் காரணமாகவும்தான் நடைபெறுகின்றன என்பதை அவ்வழக்குகளை மேலோட்டமாகப் பார்த்தாலே யாரும் புரிந்துகொள்ள முடியும்.

ஜெயராஜ்-பென்னிக்ஸ் கொட்டடிக் கொலை வழக்கை எடுத்துக் கொண்டால், ஊரடங்கு காலத்தில் அனுமதிக்கப்பட்ட நேரத்திற்கு மேல் கடையைத் திறந்து வைத்திருந்தனர் என்பதுதான் அவர்கள் மீது வைக்கப் பட்டிருக்கும் பிரதான குற்றச்சாட்டு. எனினும், அவ்விரு வரும் உடனடியாகப் பிணையில் வெளியே வந்துவிடக் கூடாது என்பதற்காகவே பிணையில் வெளிவரமுடியாத

ஜெயராஜ் (இடது) மற்றும் பென்னிக்ஸ்.





**ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகிய இருவரும் இறந்தவுடனேயே அவர்களைக் கொட்டடிக் கொலை செய்த போலிசாரைக் கைதுசெய்து தண்டிக்கக் கோரி சாத்தான்குளத்தில் தன்னெழுச்சியாக நடைபெற்ற ஆர்ப்பாட்டம்.**

பிரிவுகளின் கீழ் அவர்கள் மீது மேலும் இரண்டு வழக்குகள் புனையப்படுகின்றன. தந்தையும் மகனும் அன்றிரவு முழுவதும் மிருகத்தனமாகச் சித்திரவதை செய்யப்பட்டதால் எழுந்த அலறல் போலிசு நிலையம் இருந்த தெரு முழுவதும் எதிரொலித்திருக்கிறது.

மறுநாள் காலையில் அவர்கள் இருவரும் குற்றவியல் நடுவரிடம் அழைத்துச் செல்லப்பட்டு, நீதிமன்றக் காவலில் வைக்கும் உத்தரவு பெறப்படுகிறது. தொடர்ச்சியான உதிரப் போக்கின் காரணமாக எழுந்து நிற்கக்கூட முடியாத நிலையில் இருந்த இருவரும் நல்ல நிலையில் இருப்பதாக மருத்துவர் சான்று பெறப்படுகிறது. அவர்கள் இருவரையும் அருகிலுள்ள கிளைச் சிறைகளுக்குக் கொண்டு செல்லாமல், சாத்தான்குளத்திலிருந்து 100 கி.மீ. தொலைவிலுள்ள, தங்களுக்கு மிகவும் நெருக்கமான அதிகாரிகள் பணியாற்றும் கோவில்பட்டி சிறைக்கு சாத்தான்குளம் போலிசார் கொண்டு செல்கின்றனர். அச்சிறைச்சாலை அதிகாரிகளுக்கு மேலிடத்திலிருந்து உத்தரவு வரவே, அவர்கள் காயங்களைப் பதிவு செய்துகொண்டு ஜெயராஜையும், பென்னிக்ஸையும் சிறையில் அடைக்கின்றனர். சிறையில் அடைக்கப்பட்ட இரண்டாவது நாளில் பென்னிக்ஸும், ஜெயராஜும் அடுத்தடுத்து இறந்து போனார்கள்.

இத்தொடர் நிகழ்வுகள் அனைத்தும் மன அழுத்தம் காரணமாக நடைபெற்றிருப்பதாக யாராலும் சொல்ல இயலுமா? மாறாக, இவை அனைத்திலும் ஒரு சதி இழை ஊடும் பாவுமாகப் பின்னியிருப்பதை நிச்சயமாக யாரும் காண முடியும்.

தந்தையையும் மகனையும் மிருகத்தனமானச் சித்திரவதை செய்த சாத்தான்குளம் போலிசாரை விட்டு விடுவோம். சாத்தான்குளம் குற்றவியல் நடுவர் எந்த அழுத்தத்தின் காரணமாக அவர்கள் இருவரையும் நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவிட்டார்? உதிரப் போக்கோடு வந்த அவர்களுக்கு உடல்தகுதிச் சான்றிதழ் கொடுத்த அரசு மருத்துவருக்கு என்ன அழுத்தம் இருந்தது?

இப்படுகொலையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடந்துகொண்டிருந்தபோதே தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. அருண்பாலகோபாலன் கிஞ்சித்தும் மனச்சான்று இல்லாமல், ‘‘சிறையில் அடைக்கப்பட்ட தந்தை, மகன் இருவரும் நெஞ்சுவலி மற்றும் காய்ச்சல் காரணமாக உயிரிழந்துவிட்டதாக”க் கூறினாரே; இவை லாக்கப் படுகொலைகள்தான் என அம்பலமான பிறகும் போலிசு துறையைக் கையில் வைத்திருக்கும் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, “பென்னிக்ஸும், ஜெயராஜும் மூச்சுத் திணறலாலும், உடல் நலக் குறைவாலும் இறந்து போனதாக” முதலைக் கண்ணீர் வடித்தாரே - இவர்களின் பச்சைப் புளுகுக்கும் மன அழுத்தம்தான் காரணமா?

இப்படுகொலைகள் தொடர்பான சாட்சியங்கள் எதுவும் விசாரணையில் சிக்கிவிடக் கூடாது என்ற நோக்கில் சாத்தான்குளம் போலிசு நிலையத்தில் இருக்கும் சி.சி.டி.வி. கேமரா பதிவுகள் தினந்தோறும் அழிந்துவிடும்படி செட்டிங்ஸ் செய்யப்பட்டிருக்கின்றன. அப்போலிசு நிலையத்திற்குச் சாட்சியங்களைச் சேகரிக்கச் சென்ற கோவில்பட்டி குற்றவியல் நடுவர் பாரதிதாசனை மிரட்டும் தொனியில் கூடுதல் மாவட்டக் கண்காணிப்பாளர் குமாரும், துணைக் கண்காணிப்பாளர் பிரதாபனும் நடந்துகொண்டுள்ளனர். காவலர் மகாராஜன் அந்நீதிபதியிடம், “உன்னால் ஒன்னும் புடுங்கமுடியாது” எனத் திமிராகக் கூறியிருக்கிறார். இவை அனைத்தும் போலிசின் கிரிமினல்தனத்தைக் காட்டுகிறதா அல்லது அவர்களின் மன அழுத்தத்தைக் காட்டுகிறதா?

இன்றைய பணிச்சூழலில் யாருக்குத்தான் மன அழுத்தம் இல்லை? உண்மையில் போலிசிடம் காணப்படுவது மன அழுத்தம் அல்ல; அது பொதுமக்களைப் புழுக்களைவிடக் கேவலமாகக் கருதும் அதிகாரத் திமிரெடுத்த பாசிச மனப்பாங்கு. தன்னை எதிர்த்துக் கேள்வி கேட்பவர்களை, தனக்குக் கீழ்ப்படிந்து நடக்க மறுப்பவர்களை இந்த பாசிச மனப்பாங்கு கிஞ்சித்தும் சகித்துக் கொள்வதில்லை. அவர்களுக்கு ஏதாவது ஒருவிதத்தில் பாடம் புகட்டவே போலிசின் பொதுபுத்தி வேலை செய்கிறது.

“விலையுயர்ந்த செல்போனை இலவசமாகத் தரும்படி சாத்தான் குளம் போலிசார் ஜெயராஜிடம் கேட்டதற்கு, அவர் மறுத்திருக்கிறார். இதற்குப் பாடம் புகட்டுவதற்குத்தான் ஜெயராஜையும், பென்னிக்ஸையும் சித்திரவதை செய்து கொன்றுவிட்டதாக” ஜெயராஜின் மகள் குற்றஞ்சுமத்தியிருக்கிறார்.

இது உண்மையாகவே இருக்கக்கூடும். போலிசின் எச்சக்கலை புத்தி நாம் அறியாததா? தான் கேட்ட கைபேசியைத் தர மறுத்த ஜெயராஜை ஸ்டேஷனுக்குக் கூட்டிச்

சென்று சித்திரவதை செய்வதற்கு போலிசார் உருவாக்கிய சாக்குதான், அனுமதிக்கப்பட்ட நேரத்திற்குப் பிறகும் கடையைத் திறந்துவைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டு.

“எனது தந்தையை ஏன் கூட்டி வந்தீர்கள் எனத் தைரியமாகக் கேட்டதற்கும், தன்னைத் தாக்க வந்த போலிசைத் தற்காப்புக்காகத் தடுக்க முயன்றதற்கும்” பென்னிக்ஸைச் சட்டவிரோதக் காவலில் வைத்து சித்திரவதை செய்திருக்கிறது, சாத்தான்குளம் போலிசு.

எல்லா போலிசாரும் இப்படி மிருகத்தனமாக நடந்து கொள்வதில்லை என வாதிடப்படுகிறது. உண்மையில், போலிசுத் துறையில் எத்துணை நல்லவர்கள் இருக்கிறார்கள், எத்துணை கெட்டவர்கள் இருக்கிறார்கள் என கணக்கெடுப்பதல்ல இந்தப் பிரச்சினை. சல்லடைப் போட்டுத் தேடினாலும் நல்லவர்களைக் கண்டுபிடிப்பது குதிரைக் கொம்பு என்ற கருத்தின் அடிப்படையில் ஜூனியர் விகடன் - 08.07.2020 தேதியிட்ட இதழில் கட்டுரையொன்று வெளியாகியிருக்கிறது.

போலிசு நிலையத்தில் ஒரு கிரிமினல் குற்றம் நடந்துவிட்டால், அதற்குச் சட்டப்படியான நடவடிக்கை எடுக்காமல், போலிசு மந்திரி தொடங்கி கீழ்நிலை போலிசுக்காரன் வரை அனைவரும் அக்குற்றச் செயலை மூடிமறைக்கவும், குற்றமிழைத்த போலிசாரைத் தண்டனையிலிருந்து காப்பாற்றவும் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி வேலை செய்கிறார்களே, அதுதான் இங்கு விவாதத்திற்குரிய விடயம்.

●●●

ஜெயராஜ்-பென்னிக்ஸ் கொலைகளைத் தொடர்ந்து போலிசு துறையைச் சீர்திருத்தப் பரிந்துரைக்கப்பட்ட உச்சநீதி மன்ற உத்தரவுகளை அமலுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் எழுந்திருக்கிறது. இது மட்டுமின்றி, இந்திய போலிசு துறை இன்னமும் காலனிய காலச் சட்டத்தின்படி இயங்கி வருகிறதென்றும், அதனைக் கைவிட்டுப் புதிய காவல் துறை சட்டங்களை உருவாக்க வேண்டும் என்றும் மனித உரிமை ஆர்வலர்கள் உள்ளிட்டோரால் கோரப்படுகிறது.

உச்சநீதி மன்றம் டி.கே.பாசு வழக்கில் வழங்கிய தீர்ப்பில் ஒருவரைக் கைது செய்யும்போது போலிசு கடைப்பிடிக்க வேண்டியவை குறித்துப் பல்வேறு கட்டளைகளைப் பிறப்பித்திருந்தது. குறிப்பாக, ஒருவர் தான் ஏன் கைது செய்யப்படுகிறோம் என்பது தொடங்கி அவர் கைது செய்யப்பட்டுக் காவலுக்கு அழைத்துச் செல்லப்படும் பட்சத்தில் அக்கைது குறித்து அவரது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் உடனடியாக போலிசார் தகவல் அளிக்க வேண்டும் என்பது வரை உச்சநீதி மன்றம் வழிகாட்டுதல் தந்திருந்தது.

சாத்தான்குளம் போலிசு நிலையத்தில் நடந்த மற்றொரு கொட்டடிச் சித்திரவதையில் பலியான மகேந்திரன்.



காவல்துறை நிலை ஆணை எண்.722, அதிகபட்சமாக ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனை பெறக்கூடிய வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டவரைக் கைது செய்யக்கூடாது எனக் கூறுகிறது. கொலை, கொள்ளை, வழிப்பறி, மானபங்கம் ஆகிய வழக்குகளில் மட்டுமே எதிரிகளைக் கைது செய்யலாம் எனத் தீர்ப்பு அளித்திருக்கிறது, உச்சநீதி மன்றம்.

“பிரகாஷ் சிங் எதிர் மைய அரசு” வழக்கில் தீர்ப்பளித்த உச்சநீதி மன்றம், அத்தீர்ப்பில் ஒவ்வொரு மாநில அரசும் போலிசு துறையை நிர்வகிக்க புதிய தொரு சட்டத்தை உருவாக்க வேண்டும் என அறிவுறுத்தியிருந்தது. மேலும், அத்தீர்ப்பிலேயே போலிசின் நடத்தை குறித்து விசாரிப்பதற்குத் துறைசார்ந்த கமிட்டிகளை உருவாக்க வேண்டுமென்றும் சுட்டிக் காட்டியிருந்தது.

இத்தீர்ப்பு வெளிவந்து பத்தாண்டுகளுக்கு மேலான பிறகும் பெரும்பாலான மாநிலங்கள் புதிய சட்டத்தை உருவாக்கவில்லை. தமிழக அரசு 2013-இல் இயற்றிய போலிசு சீர்திருத்தச் சட்டம் பழைய கள்ளு புதிய மொந்தை என்ற பாணியிலேயே உருவாக்கப்பட்டதோடு, அதனையும் 2017-ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தாமல் கிடப்பிலேயே போட்டு வைத்திருந்தது.

மாநில அளவிலான துறை சார்ந்த விசாரணைக் குழுவை ஓய்வுபெற்ற உயர்நீதி மன்ற நீதிபதியின் தலைமையில் உருவாக்க வேண்டும் என்ற உச்சநீதி மன்றப் பரிந்துரையைக் கேலிப்பொருளாக்கும் விதத்தில், அக்குழுவை உள்துறைச் செயலரையும் போலிசு அதிகாரிகளையும் கொண்டு உருவாக்கியிருக்கிறது, தமிழக அரசு.

போலிசு நிலையத்திற்குள் நடைபெறும் நிகழ்வுகளைக் கண்காணிக்க சி.சி.டி.வி. கேமரா வைக்கப்பட வேண்டும் என்ற சீர்திருத்தம் எந்தக் கதிக்கு ஆளானது என்பதை சாத்தான்குளம் சம்பவம் அம்பலப்படுத்தி விட்டது.

ஒருவரைக் கைது செய்வது குறித்து உச்சநீதி மன்றம் அளித்த பரிந்துரைகளை எந்தவொரு போலிசுக்காரனும் கழிப்பறைக் காகிதம் அளவிற்குக்கூட மதிப்பதேயில்லை. இந்தத் தீர்ப்புகள், குடிமக்களுக்குரிய சட்டபூர்வ உரிமைகள் குறித்து போலிசிடம் வாதாடினால், “எங்கிட்டேயே சட்டம் பேசுறியா?” என்ற எகத்தாளம்தான் போலிசின் பதிலாக இருக்கிறது. ஆயுதம் ஏந்தவும், கைது செய்யவும், காவலில் வைக்கவும் போலிசிற்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரமும், போலிசார் அனுபவித்துவரும் தனிச் சலுகைகளும் தம்மைச் சட்டத்திற்கு மேலானவர்களாகக் கருதிச் செயல்படும் மனோநிலையை அவர்களிடம் ஏற்படுத்தியிருக்கிறது.



ஜெயராஜ்-பென்னிக்ஸ் கொட்டடிக் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருக்கும் (இடமிருந்து) சாத்தான்குளம் போலிசு நிலைய ஆய்வாளர் சிறீதர்; துணை ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன் மற்றும் ரகு கணேஷ்.

ஒரு சாமானியன் மீது புகார் கொடுக்கப்பட்டால், உடனே அவரை போலிசு நிலையத்திற்கு இழுத்துவந்து காவலில் அடைத்துவிட்டுப் பிறகுதான் விசாரணையே நடத்துகிறார்கள். போலிசு குற்றமிழைத்தால், இந்த நடைமுறைகள் செல்லுபடியாவதில்லை.

சாத்தான்குளத்தில் நடந்தது கொட்டடிக் கொலைதான் என்பது அம்பலமான பிறகும்கூட குற்றமிழைத்த போலிசுக்காரர்கள் உடனடியாகப் பணியிடை நீக்கம் செய்யப்படவில்லை. அவர்கள் மீது கொலைவழக்குப் பதிவு செய்து, கைது செய்து, சிறையில் அடைக்க பத்து நாட்களுக்கு மேலாகிவிட்டது. இத்தாமதம் குறித்து கேள்வி எழுப்பினால், வழக்கைக் கண்காணிக்கும் உயர் நீதி மன்ற நீதிபதிகள், "மக்களின் கோபத்தையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு நீதிமன்றம் செயல்பட முடியாது" எனப் பதில் அளித்திருக்கிறார்கள்.

சாமானியனான அப்சல் குருவைத் தூக்கில் ஏற்ற சமூகத்தின் மனசாட்சியைத் திருப்திப்படுத்த வேண்டும் எனக் காரணம் சொன்ன நீதிமன்றம், போலிசுக்காரன் என்றால் தட்டைத் திருப்பிப் போடுகிறது.

குற்றம் சுமத்தப்பட்டவரை விசாரித்து வாக்குமூலங்களைப் பெற சித்திரவதைகளைப் பயன்படுத்தக்கூடாது என உயர் போலிசு அதிகாரிகளும், நீதிமன்றங்களும் சொல்லிவந்தாலும், அது சம்பிரதாயமான அறிவுரை என்பதைத் தாண்டி, அதற்கு எந்தவொரு மதிப்பும் கிடையாது. மேலும், (ரத்து செய்யப்பட்ட) தடா, பொடா சட்டங்களின்படியும்; பெருநகர மாஃபியா கும்பலின் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்காக மகாராஷ்டிரா, குஜராத் ஆகிய மாநிலங்கள் இயற்றியிருக்கும் சட்டங்களும் குற்றம் சுமத்தப்பட்டவர் போலிசு அதிகாரிகளிடம் அளிக்கும் வாக்குமூலங்களை நீதிமன்றங்கள் ஏற்றுக்கொள்வதை அனுமதிக்கின்றன. இது கொல்லைப்புற வழியாகக் கொட்டடிச் சித்திரவதைகளை அனுமதிப்பதற்கு ஒப்பானது.

கொட்டடிச் சித்திரவதைகளுக்கு எதிராக 1997-ஆம் ஆண்டில் ஐ.நா. சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் இந்தியா கையெழுத்திட்டிருந்தாலும், அதனை இந்திய அரசு இன்றுவரையிலும் சட்டமாக்க முன்வரவில்லை. இது தொடர்பாக உச்சநீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், அரசின் கொள்கை முடிவில் நாங்கள் தலையிட முடியாது எனக் கூறி நழுவிக் கொண்டது அந்நீதிமன்றம்.

போலிசு சீர்திருத்தங்கள் குறித்து இந்திய நீதித்துறை அக்கறை கொண்டிருப்பதாகக் காட்டிக்கொண்டாலும், மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் போலிசாரைத் தண்டிப்பதில் நீதித்துறை எப்பொழுதுமே நியாயமாக நடந்து கொள்வதில்லை என்பதற்குப் பல்வேறு உதாரணங்கள் உள்ளன. உச்சநீதி மன்றத்தால் கண்காணிக்கப்பட்ட வழக்குகளில் (சொராபுதின் மற்றும் இஷ்ரத் ஜஹான் போலி மோதல் கொலை வழக்குகள்) மட்டுமா குற்றமிழைத்த போலிசு அதிகாரிகள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்? பாதிக்கப்பட்டவர் இறுதிவரை போராடிய வழக்குகளில்கூட குற்றமிழைத்த போலிசு அதிகாரியை உச்சநீதி மன்றமே விடுவித்திருக்கிறது. (உ-ம்.நல்லகாமன் வழக்கு)

"ஜெயராஜ்-பென்னிக்ஸ் இருவரும் போலிசின் சித்திரவதையால் ஏற்பட்ட காயங்களால்தான் உயிர் இழந்தார்கள் என அவர்களது உடற்கூராய்வு தெரிவிக்கவில்லையென்றால், கைது செய்யப்பட்டிருக்கும் போலிசாரைக் கொலைக் குற்றச்சாட்டின் கீழ் தண்டிக்க முடியாது" என எச்சரிக்கிறார், முன்னாள் சி.பி.ஐ. அதிகாரி ரகோத்தமன். இவையனைத்தும், சட்டமும் நீதிமன்றமும் தம் கடமையைச் செய்ய முடியும் என நம்பி நாம் அமைதியாக இருந்துவிட முடியாது, கூடாது என்பதைத்தான் உணர்த்துகின்றன.

●●●

**நா**ய் வாலை நிமிர்த்திவிட முடியும் என்றால் இந்திய போலிசையும் சட்டங்களைப் போட்டுத் திருத்திவிடலாம் எனக் கூறலாம். ஆட்சியைப் பிடிக்கும் கட்சிகள் ஒவ்வொன்றுமே, போலிசைத் தமது ஏவல் நாயாகப் பயன்படுத்துவதால்தான், ஆளுங்கட்சிகள் போலிசை சீர்திருத்தும் சட்டங்களை இயற்றி அமல்படுத்த மறுக்கின்றன எனக் குற்றஞ்சுமத்தப்படுகிறது. இக்குற்றச்சாட்டு உண்மை என்றபோதும், அது இப்பிரச்சினையின் ஒரு பகுதிதான்.

சாதி, மத ரீதியாகவும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளாலும் பிளவுண்டு கிடக்கும் இந்திய சமூகத்தை போலிசு கண்காணிப்பின் வழியாகத்தான் அடக்கி ஆட்சி செய்ய முனைகின்றன, ஆளுங் கட்சிகள். அதனால்தான் குடிநீர் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளுக்காகத் தெருவுக்கு வந்து பொதுமக்கள் நடத்தும் மிகச் சாதாரணமான போராட்டங்களைக்கூடச் சட்டம்-ஒழுங்கு பிரச்சினையாகச் சித்தரித்து, அதனைக் கலைப்பதற்கு போலிசு படை அனுப்பி வைக்கப்படுகிறது. பொதுமக்கள் மட்டுமல்ல, தொழிலாளர்களோ, விவசாயிகளோ தமது

வாழ்வாதாரத்துக்காகச் சட்டப்படி நடத்தும் போராட்டங்களை எதிர்கொள்வதற்கும் போலிசுதான் முதலில் வருகிறதேயொழிய, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் வருவதில்லை.

இரண்டாவதாக, இப்படி ஒவ்வொரு வர்க்கமும் தமது அடிப்படைத் தேவைகளுக்காகவோ, வாழ்வாதாரத்துக்காகவோ நடத்தும் போராட்டங்களை வளர்ச்சிக்கு எதிரானதாகவும், தேச விரோதமானதாகவும் சித்திரித்து, அவற்றை போலிசைக் கொண்டு மிருகத்தனமாக அடக்கி ஒடுக்கும் போக்கு சமீப காலமாக மேலோங்கி வருகிறது. மேலும், இந்த அடக்குமுறையைச் சட்டபூர்வமாக நியாயப்படுத்திக் கொள்வதற்கு புதுப்புது அடக்குமுறைச் சட்டங்களோ, நிர்வாக நடைமுறைகளோ உருவாக்கப்பட்டு, அவற்றை அமல்படுத்தும் உரிமை போலிசு உள்ளிட்ட அதிகார வர்க்கத்திற்கு வழங்கப்படுகிறது.

போலிசையும், இராணுவத்தையும் நவீனப்படுத்த வேண்டும், அவற்றைப் பலப்படுத்த வேண்டும், மனித உரிமைச் செயல்பாட்டாளர்கள் அவற்றின் நடவடிக்கைகளில் தலையீடு செய்வதை மட்டுப்படுத்த வேண்டும் எனக் கூறப்படுவதையெல்லாம் இந்தப் பின்னணியிலிருந்துதான் பார்க்க முடியும்.

அதாவது, இந்திய சமூகத்தை, அதன் இன்றைய சமூக, பொருளாதார, அரசியல் கட்டமைப்பை ஜனநாயகரீதியாக நிர்வகிக்க முடியாது. போலிசின் கண்காணிப்பு, அடக்குமுறைச் சட்டங்களின் வழியாகத்தான் நிர்வகிக்க முடியும் என்ற நிலைக்கு ஆளுங்கட்சிகள் வந்துவிட்டன. மேலும், இது அக்கட்சிகளின் தனிப்பட்ட விருப்பம் மட்டும் அல்ல. ஆளுங்கட்சிகளைப் பின்னிருந்து ஆட்டுவிக்கும் ஆளுங்கும்பலான இந்தியத் தரகு முதலாளிகளும் அவர்களின் எஜமானர்களான ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கமும் இதைத்தான் விரும்புகின்றன.

தூத்துக்குடியில் பொதுமக்களின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடும் அடக்குமுறைகளும் ஆளும் அ.தி.மு.க.வின் நலனுக்காகவா நடத்தப்பட்டது? நிச்சயமாக இல்லை. அந்த அடக்குமுறைகளின் முதன்மையான நோக்கம் ஸ்டெர்லைட் முதலாளியின் நலன்களைக் காப்பாற்றுவதுதான். கடந்த இரண்டு மூன்று வருடங்களாக அம்மாவட்ட நிர்வாகமே, குறிப்பாக, போலிசுத் துறை ஸ்டெர்லைட்டின் சம்பளப் பட்டியலில் இருந்து வருவது எந்தளவிற்கு கார்ப்பரேட் அதிகாரம் மக்களின் மீது நிலைநாட்டப்பட்டிருக்கிறது என்பதையும், அதற்கு போலிசு அடியாட்படையாகச் செயல்படுவதையும் எடுத்துக் காட்டுகின்றன.

தூத்துக்குடி மட்டுமல்ல, அரியானா மாநிலம் மானேசரில் இயங்கும் சுசுகி கார் ஆலை நிர்வாகத்தை எதிர்த்துப் போராடிய தொழிலாளர்கள் மீது ஏவப்பட்ட அடக்குமுறைகளும், குற்றஞ்சுமத்தப்பட்ட தொழிலாளர்களைத் தூக்கில் ஏற்ற வேண்டும் என்று அம்மாநில பா.ஜ.க. அரசு வாதாடியதும் கார்ப்பரேட் அதிகாரத்தின் எடுத்துக்காட்டுதான்.

இந்த கார்ப்பரேட் அதிகாரத்தின் இன்னொரு பக்கமாக, அதனின் மிகவும் விசுவாசமான, நம்பகமான கூட்டாளியாக மோடியின் ஆட்சி விளங்குகிறது. தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டையும், எட்டுவழிச் சாலைத் திட்டத்தையும் ஆதரித்து பா.ஜ.க. கும்பல் வாதாடியதை எண்ணிப் பாருங்கள், காவிகளும், கார்ப்பரேட்டுகளும் ஈருடல் ஓர் உயிராகச் செயல்பட்டு, மக்களின் மீது அதிகாரம் செலுத்துவதைப் புரிந்து கொள்ளலாம்.

இத்தகைய அரசியல்-பொருளாதார சூழலில் போலிசைச் சீர்திருத்தும் சட்டங்களை இயற்றி நடைமுறைப்படுத்தக் கோருவது போகாதா ஊருக்கு வழி தேடுவதாகும். அப்படிப்பட்ட சட்டங்களின் மூலமாக போலிசைத் திருத்திவிட முடியும் என்ற நம்பிக்கையைப் பொதுமக்களின் மத்தியில் உருவாக்க முயலுவது அபாயகரமானதாகும்.

எனவே, கார்ப்பரேட்-காவி பாசிசம் நாட்டைக் கவ்வி வரும் சூழலில், போலிசைச் சீர்திருத்த அல்ல, அவ்வமைப்பையே கலைக்கக் கோரும் கோரிக்கையை முன்வைத்துப் போராடுவதுதான் பொருத்தமானதாகும். இதுவொன்றும் மிகைப்படுத்தப்பட்ட கோரிக்கையல்ல. அமெரிக்காவில் ஜார்ஜ் ஃபிளாய்டின் படுகொலையை அடுத்து நடைபெற்று வரும் போராட்டங்களில் போலிசு துறைக்கு ஒதுக்கப்படும் நிதியைக் குறைக்க வேண்டும், அவ்வமைப்பைக் கலைக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் அந்நாட்டுத் தெருக்களில் ஒலிக்கத் தொடங்கிவிட்டன. நாமும் அத்தகைய அதிகபட்ச ஜனநாயகக் கோரிக்கையை ஏன் எழுப்பக் கூடாது?

போலிசைக் கலைத்து விட்டால் குற்றங்களைத் தடுப்பது எப்படி, அதற்கு மாற்று என்ன என்ற கேள்விகள் எழுவே கூடும். அதற்கான மாற்று அமைப்பை, மக்கள் தமது போராட்டங்களின் வழியாகத் தீர்மானிக்கட்டுமே!

■ இளங்கோ

சாத்தான்குளம் கொட்டடிக் கொலை தொடர்பாக முதற்கட்ட விசாரணை நடத்திய கோவில்பட்டி குற்றவியல் நடுவர் மன்ற நீதிபதி பாரதிதாசன் (இடது) மற்றும் அக்கொலை தொடர்பாகச் சாட்சியம் அளித்திருக்கும் காவலர் ரேவதி.





# நீதிமன்றத்தின் ஆணவப் படுகொலை!

**ஆணவக் கொலைகள், தீண்டாமைக் குற்றங்களில் ஈடுபடும் ஆதிக்க சாதி வெறி பிடித்த குற்றவாளிகளைத் தண்டிக்க சட்டம், நீதிமன்றம் ஆகியவற்றை மட்டுமே நம்பியிருக்க முடியாது.**

உடுமலை சங்கர் ஆணவப் படுகொலை மேல் முறையீட்டு வழக்கில், அவ்வாணவக் கொலையின் முதன்மைக் குற்றவாளியும் சங்கரின் காதல் மனைவி கௌசல்யாவின் தந்தையுமான சின்னசாமிக்கு விதிக்கப்பட்டிருந்த தூக்கு தண்டனையையும் அவர் மீது சுமத்தப்பட்டிருந்த மற்றைய குற்றச்சாட்டுகளையும் ரத்து செய்து, அவரை விடுதலை செய்திருக்கும் சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்பு சம்பிரதாயமான எதிர்ப்புகளைத் தாண்டி, வேறெந்த சலனத்தையும் தமிழகத்தில் ஏற்படுத்தவில்லை. உயர்நீதி மன்றத் தீர்ப்பு எந்தளவிற்கு அநீதியானதோ, அந்தளவிற்கு தமிழகத்தின் மௌனமும் அநீதியானதுதான். சமூக நீதியைச் சாதித்துவிட்டதாகக் கூறிக்கொள்ளும் தமிழகத்திற்கு, அத்தகைய அருகதையுண்டா என்ற கேள்வியை முன்நிறுத்துகிறது, இந்த மௌனம்.


மற்றைய ஆணவப் படுகொலைகளைப் போல, சங்கர் படுகொலை கமுக்கமாக, காதும் காதும் வைத்தாற்போல நடக்கவில்லை. உடுமலைப்பேட்டை நகரின் முக்கிய கடைவீதியில், பகலில், பொதுமக்களின் கண்முன்னே சங்கர் வெட்டிக் கொல்லப்பட்டார். கூலிப்படையால் திரும்பத் திரும்ப வெட்டப்பட்டதால் ஏற்பட்ட 33 வெட்டுக்காயங்களால் துடிதுடித்து உயிரிழந்தார், சங்கர்.

சங்கரை மட்டுமல்ல, வீட்டை எதிர்த்து, சாதியை மறுத்து அவரைக் காதல் மணம் புரிந்துகொண்ட கௌசல்யாவையும் கொல்ல வேண்டும் என்பதும் இந்த ஆணவக் கொலையின் இலக்கு. கூலிப்படையால் வெட்டப்பட்ட கௌசல்யா நல்வாய்ப்பாக உயிர் பிழைத்துக்கொண்டார்.

சங்கர் படுகொலையும் கௌசல்யா மீது நடத்தப்பட்ட கொலைவெறித் தாக்குதலும் ஆதிக்க சாதி பயங்கரவாதத்தின் வெளிப்படையான எடுத்துக்காட்டு. சாதிக் கட்டுமானத்தை மீறித் திருமணம் செய்துகொள்ளத் துணிவோருக்கு விடுக்கப்பட்ட வெளிப்படையான எச்சரிக்கை, அச்சுறுத்தல். அதனால்தான் கீழமை நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளின் தண்டனைகளை உறுதி செய்ய வேண்டும் என்பதோடு, விடுவிக்கப்பட்டவர்களையும் உயர்நீதி மன்றம் தண்டிக்க வேண்டுமெனத் தாழ்த்தப்பட்ட அமைப்பினர் மட்டுமின்றி, ஜனநாயக சக்திகள் அனைவரும் எதிர்பார்த்தனர்.

சங்கர் ஆணவப் படுகொலை வழக்கில் கௌசல்யாவின் தந்தை சின்னச்சாமி, தாய் அன்னலெட்சுமி, தாய் மாமன் பாண்டித்துரை உள்ளிட்டு 11 பேர் மீது சதி, கொலை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. திருப்பூர் நீதிமன்றத்தில் நடந்த இந்த வழக்கில், கௌசல்யா உள்ளிட்டு 163 பேர் சாட்சியம் அளித்திருந்தனர். இவ்வழக்கை விசாரித்த நீதிபதி அலமேலு நடராஜன் இந்த சாட்சியங்களின் அடிப்படையில் கௌசல்யாவின் தந்தை சின்னச்சாமி உள்ளிட்ட ஆறு பேருக்குத் தூக்கு தண்டனையும்; 9-ஆவது குற்றவாளி தன்ராஜுக்கு ஆயுள் தண்டனையும், 11-ஆவது குற்றவாளி மணிகண்டனுக்கு ஐந்து ஆண்டு சிறை தண்டனையும் அளித்த அதேசமயம், கௌசல்யாவின் தாய் அன்னலெட்சுமி, தாய் மாமன் பாண்டித்துரை, கூலிப் படையைச் சேர்ந்த பிரசன்னா ஆகிய மூவரையும் வழக்கிலிருந்து விடுவித்தார். விசாரணை நீதிமன்றத் தீர்ப்பு சங்கர் படுகொலைக்கு முழுமையான நீதியை வழங்கவில்லை என்றபோதும், பத்துக்கு ஒன்பது பழுதில்லை என்ற விதத்தில் அமைந்தது.

சாதி மறுப்பு திருமணம் செய்துகொண்ட சங்கர்-கௌசல்யா இணையர், மணக்கோலத்தில். (கோப்புப் படம்)



அரசுத் தரப்பில் சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்கில் கீழமை நீதிமன்றம் அளித்த தூக்கு தண்டனையை உறுதி செய்ய வேண்டும் என்பதோடு, விடுதலை செய்யப் பட்ட கௌசல்யாவின் தாய் உள்ளிட்ட மூவரையும் தண்டிக்க வேண்டும் எனக் கோரப்பட்டது. தண்டிக்கப் பட்டவர்கள் விடுதலை கோரி மேல்முறையீடு செய் திருந்தனர்.

இம்மேல்முறையீட்டு வழக்கில் சென்னை உயர் நீதி மன்றம் அளித்திருக்கும் தீர்ப்போ விசாரணை நீதிமன்றத்தில் நிலைநாட்டப்பட்ட குறைந்த பட்ச நீதியைத் தலைகீழாகப் புரட்டிப்போட்டுவிட்டது. அத்தீர்ப்பு இவ்வழக்கில் சதிக் குற்றச்சாட்டை அரசுத் தரப்பு நிரூபிக்கவில்லை எனக் கூறி, முதன்மைக் குற்ற வாளியான கௌசல்யாவின் தந்தை சின்னச்சாமியை விடுதலை செய்துவிட்டது. மேலும், விசாரணை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட கௌசல்யாவின் தாய் அன்னலெட்சுமி உள்ளிட்ட மூவரின் விடுதலையை உறுதி செய்திருக்கிறது. ஆயுள் தண்டனை விதிக்கப் பட்ட தன்ராஜும், ஐந்து ஆண்டு தண்டனை விதிக் கப்பட்ட மணிகண்டனும் விடுதலையாகியுள்ளனர். எஞ்சியிருந்த கூலிப்படையைச் சேர்ந்த ஐவரின் தூக்கு தண்டனை, அவர்கள் 25 ஆண்டு காலம் தண்டனைக் குறைப்பின்றிச் சிறையில் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையோடு ஆயுள் தண்டனையாகக் குறைக்கப் பட்டிருக்கிறது.

சின்னச்சாமி சதி செய்யவில்லை எனில், சங்கர் எதற்காகப் படுகொலை செய்யப்பட்டார்? கூலிப் படையை ஏவிவிட்டது யார்? இந்தக் கேள்விகளுக்கு நீதிமன்றத் தீர்ப்பில் பதில் இல்லை. எய்தவர்களை விடுதலைசெய்துவிட்டு அம்புகளைத் தண்டித்திருக் கிறது, உயர்நீதி மன்றம்.

திருப்பூர் நீதிமன்றம் கௌசல்யாவின் தந்தை சின்னசாமிக்கு ஏதோ மேம்போக்காக விசாரணை நடத்தித் தூக்கு தண்டனை அளித்துவிடவில்லை. சங்கர் படுகொலை செய்யப்படுவதற்கு முதல் நாள் மார்ச் 12 (2016) அன்றும் அதற்கு மறுநாள் மார்ச் 14 அன்றும்

இரத்த வெள்ளத்தில் சரிந்து கிடக்கும் சங்கர் . (கோப்புப் படம்)



கௌசல்யாவின் தாய்-தந்தையின் கூட்டு வங்கிக் கணக் கிலிருந்து ரூ.80,000/- பணம் எடுக்கப்பட்டிருக்கிறது. இதில் ரூ.50,000/- சங்கரைப் படுகொலை செய்த கூலிப் படைக் கும்பலிடமிருந்து கைப்பற்றப்பட்டிருக்கிறது.

சங்கரைப் படுகொலை செய்த கூலிப் படை யினரோடு சின்னச்சாமி ஒன்றாக அமர்ந்து பேசிக் கொண்டிருந்ததைக் கண்ணால் பார்த்த இரண்டு பேர் விசாரணை நீதிமன்றத்தில் அது குறித்து சாட்சியம் அளித்தனர்.

இப்படுகொலையில் சம்பந்தப்பட்ட ஐந்தாவது குற்றவாளி மணிகண்டன் உள்ளிட்ட நான்கு குற்ற வாளிகள் விடுதியில் தங்குவதற்கான ஏற்பாடுகளை சின்னச்சாமி செய்து கொடுத்திருக்கிறார். குறிப்பாக, மணிகண்டனும் சின்னச்சாமியும் ஒரே அறையில் தங்கி யிருக்கிறார்கள். இது தொடர்பான சாட்சியத்தை குற்ற வாளிகள் தங்கியிருந்த விடுதி உரிமையாளர் விசாரணை நீதிமன்றத்தில் கூறியிருக்கிறார்.

மேலும், சின்னச்சாமி கூலிப்படை கும்பலுடன் பலமுறை கைபேசி வழியாகப் பேசி வந்திருப்பதும் விசாரணை நீதிமன்றத்தில் சாட்சியமாக அளிக்கப் பட்டிருக்கிறது.

இப்படியான நேரடி மற்றும் சந்தர்ப்ப சாட்சியங் களின் அடிப்படையில்தான் கூட்டுச் சதி மற்றும் வன்கொடுமைக் கொலை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் சின்னச்சாமிக்குத் தூக்கு தண்டனை விதித்தது விசாரணை நீதிமன்றம்.

இந்த சாட்சியங்கள் அனைத்திலும் ஓட்டைகளைக் கண்டுபிடித்து சின்னச்சாமியை சதிக் குற்றச்சாட்டி லிருந்தும் கொலைக் குற்றத்திலிருந்தும் விடுவித்திருக் கிறது உயர்நீதி மன்றம்.

சின்னச்சாமி சங்கரைக் கொலை செய்ய சதி செய்தார் என்ற குற்றச்சாட்டை நிரூபிக்க அரசு தரப்பில் அளிக்கப்பட்ட பல்வேறு சாட்சியங்களுள், பிப்ரவரி 6, 2016 தொடங்கி மார்ச் 6, 2016 வரையிலான இடைப் பட்ட நாட்களில் சின்னச்சாமி கூலிப்படையினரோடு கைபேசியில் உரையாடி வந்திருக்கிறார் என்ற சாட்சி யத்தைத் தவிர, வேறு எந்தவொரு சாட்சியத்தையும் அரசு தரப்பால் நிரூபிக்க முடியவில்லை எனக் கூறுகிறது, உயர்நீதி மன்றத் தீர்ப்பு.

“சங்கர் படுகொலை செய்யப்பட்டபோது, அந்த இடத்தில் முதன்மைக் குற்றவாளியான சின்னச்சாமியும் இருந்தார் என்பதற்கான ஆதாரம் எதுவுமில்லை.”

“கூலிப்படையினர் தங்க சின்னச்சாமி தனியார் விடுதியில் அறை எடுத்துக் கொடுத்தார், அவர்களுள் ஒருவருடன் தங்கியிருந்தார் என்ற குற்றச்சாட்டை நிரூபிக்க அளிக்கப்பட்ட வாய்வழி மற்றும் ஆவண சாட்சியங்கள் போதுமானதாக இல்லை.”

“சின்னச்சாமிதான் வங்கிக் கணக்கிலிருந்து பணம் எடுத்தார், சின்னச்சாமிதான் அந்தப் பணத்தைக் கூலிப் படையினரிடம் கொடுத்தார் என்பதை அரசு தரப்பு சந்தே



உயர்நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட சின்னச்சாமி, தன்ராஜ், மணிகண்டன் ஆகியோரைச் சிறை வாசலுக்கே சென்று வரவேற்கும் ஆதிக்க சாதி சங்கத் தலைவர்கள்.

கத்திற்கு இடமின்றி நிரூபிக்காததால், அச்சாட்சியத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. குறிப்பாக, ஏ.டி.எம். மெஷினிலிருந்து சின்னச்சாமி பணம் எடுத்ததற்கான சி.சி.டி.வி. காட்சிப் பதிவை அரசு தரப்பு சமர்ப்பிக்க வில்லை என்பதால், அரசு தரப்பின் குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது."

"சின்னச்சாமி கூலிப்படையினருடன் சேர்ந்து சதி செய்து கொண்டிருந்ததைப் பார்த்ததாகக் கூறும் இரண்டு சாட்சியங்களும் சந்தேகத்திற்கிடமானவை."

இவையெல்லாம் சதிக் குற்றச்சாட்டை மறுக்க நீதிமன்றம் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கும் காரணங்கள். குறிப்பாக, கொலை நடந்த இடத்தில் சின்னச்சாமி இல்லை; விடுதியில் கூலிப்படையினர் தங்கியிருந்ததற்கான ரசீது சின்னச்சாமி பெயரில் இல்லை; சின்னச்சாமி கூலிப்படையினருடன் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்ததாகக் கூறும் சாட்சியங்கள், சின்னச்சாமி கூலிப்படையினருடன் சங்கரைக் கொலை செய்வது குறித்துத்தான் பேசிக் கொண்டிருந்தார் என்பதை நிரூபிக்கவில்லை என நீதிபதிகள் தீர்ப்பில் தர்க்கம் செய்திருக்கிறார்கள்.

இதன்படி பார்த்தால், சின்னச்சாமியும் அன்ன லெட்சுமியும் அரிவாளைத் தூக்கிக்கொண்டு சங்கரைக் கொலைசெய்ய பாய்ந்திருந்தால்தான் நீதிபதிகளின் சட்டப் புத்தி அதனை ஆணவக் கொலை என ஏற்றுக் கொண்டிருக்கும் போலும்!

இரகசியமாகத் திட்டமிடப்படுவதுதான் சதி எனும் போது, சின்னச்சாமி சங்கரைக் கொலை செய்வது பற்றித்தான் கூலிப்படையினரோடு பேசினாரா எனக் கேள்வி எழுப்புகிறார்கள் நீதிபதிகள். பிறகென்ன, சின்னச்சாமியும் கூலிப்படையினரும் சாதி ஒழிப்புப் பற்றியா பேசியிருப்பார்கள்?

கூலிப்படையிடமிருந்து கைப்பற்றப்பட்ட ரூ.50,000/- சின்னச்சாமி தந்ததுதான் எனக் கூலிப் படையினரே ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த பிறகும், அதனைச் சாட்சியமாக ஏற்றுக் கொள்ள மறுத்திருக் கிறார்கள், நீதிபதிகள். இதற்கெல்லாம் கையெழுத்திடப் பட்ட ரசீதை அல்லது புகைப்பட ஆதாரத்தையா காட்ட முடியும்?

கூலிப்படை தங்க அறை எடுத்துக் கொடுத்தற் கான ரசீது சின்னச்சாமி பெயரில் இல்லையாம்! ராஜிவ் காந்தி கொலை வழக்கில் பேட்டரி வாங்கித் தந்தார் என்ற குற்றச்சாட்டில் பேரறிவாளனுக்குத் தண்டனை கொடுத்த நீதிமன்றங்கள் ஒவ்வொன்றும், அதற்கான ரசீதை, அதுவும் பேரறிவாளன் பெயரில் உள்ள ரசீதைப் பார்த்த பிறகுதான் தண்டனை அளித்தனவா?

நாடாளுமன்றத் தாக்குதல் வழக்கில், அக்குற்றத் தோடு அப்சல் குருவைத் தொடர்புபடுத்த போதுமான சாட்சியங்கள் இல்லை என்ற நிலையில், சட்டத்தைப் புறந்தள்ளி, இந்து சமூகத்தின் மனசாட்சியைத் திருப்தி படுத்துவதற்காகவே தூக்குத் தண்டனையை உறுதி செய் வதாகப் பச்சையாகக் கூறியது, உச்சநீதி மன்றம்.

சங்கர் படுகொலை வழக்கிலும் ஆதிக்க சாதி வெறியர் தண்டிக்கப்பட வேண்டும் எனத் தாழ்த்தப் பட்ட மக்களின், ஜனநாயக சக்திகளின் மனசாட்சி விரும் பியது. ஆனால், உயர்நீதி மன்றமோ ஆதிக்க சாதிவெறி யர்களை விடுவிக்க சட்டத்தின் சந்துபொந்துகளைத் தேடி அலைந்திருக்கிறது.

இன்னொருபுறத்திலோ, குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்திற்குப் பொருளாதார உதவி செய்வது குறித்துப் பேசும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டப் பிரிவுகள் 8-ஏ மற்றும் 8-பி ஆகிய இரண்டையும் ஒதுக்கிவைத்துவிட்டு இத்தீர்ப்பை அளித்துள்ளனர், நீதிபதிகள். மேலும், 300 பக்கங்களுக்கு மேல் எழுதப்பட்ட இத்தீர்ப்பில் ஒரு இடத்தில்கூட இக்குற்றத்தைச் சாதி அடிப்படையில் அமைந்த ஆணவக் கொலை என நீதிபதிகள் பதிவு செய்யவில்லை.

இவை அனைத்தும் இத்தீர்ப்பின் நடுநிலை குறித்து சந்தேகத்தை எழுப்புகின்றன. சனாதனக் கருத்துக் களையும் ஆதிக்க சாதிவெறியர்களையும் ஆதரித்துப் பாதுகாக்கக்கூடிய இந்து மதவெறிக் கும்பல் ஆட்சி யதிகாரத்தில் அமர்ந்திருக்கும் இவ்வேளையில் அளிக் கப்பட்டிருக்கும் இத்தீர்ப்பு, சாதிரீதியாகப் பிளவுண்டு கிடக்கும் இச்சமூகத்திற்குச் சொல்லும் செய்தி என்ன? சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி ஒரு சின்னச் சாமியை விடுதலை செய்திருக்கும் இத்தீர்ப்பு, அதன் வழியாக நூறு சின்னச்சாமிகள் உருவாகிட வழிவகுத்துக் கொடுத்துவிட்டது.

மேலும், ஆணவக் கொலைகள், தீண்டாமைக் குற்றங்களில் ஈடுபடும் ஆதிக்க சாதிவெறி பிடித்த குற்றவாளிகளைத் தண்டிக்க சட்டம், நீதிமன்றம் ஆகிய வற்றை மட்டுமே நம்பியிருக்க முடியாது என்பதற்கும் இந்தத் தீர்ப்பு இன்னுமொரு உதாரணமாக அமைந் திருக்கிறது. இந்நிலையில் இந்தச் சட்டவரம்புகளுக்கு அப்பால், சாதி மற்றும் தீண்டாமை ஒழிப்பிற்காகப் போராடக்கூடிய ஓர் அமைப்பை மக்கள் மத்தியிலிருந்து உருவாக்கி வளர்க்க வேண்டிய தேவையை இத்தீர்ப்பு சாதி, தீண்டாமையை எதிர்த்துப் போராடிவருபவர் களுக்கு மீண்டும் உணர்த்திச் சென்றிருக்கிறது.

■ **வேலன்**

# நீதியில்லையேல், அமைதியில்லை!

**அமெரிக்காவில் வெள்ளை நிறவெறிக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டம் ஒவ்வொரு அமெரிக்கனின் முன்பும் நீ எந்தப் பக்கம் என்ற கேள்வியை எழுப்புகிறது.**

அமெரிக்காவின் செல்வ வளம், வளர்ச்சி, முன்னேற்றம் குறித்தும், அதனின் ஜனநாயக மாண்பு குறித்தும் உலகெங்கும் உருவாக்கப்பட்டிருந்த கற்பிதங்கள் அனைத்தும் பூகம்பத்தில் கட்டிடங்கள் சரிந்து விழுவதைப் போல பொலபொலவென நொறுங்கி விழும் காட்சியை உலகமே கண்டு வருகிறது.

கரோனா நோய்த் தொற்று அமெரிக்காவில் பரவி வரும் வேகமும், அதனால் ஏற்பட்டிருக்கும் உயிர் இழப்புகளும் அந்நாட்டின் செல்வ வளமும் இன்ன பிற முன்னேற்றங்களும் வசதிகளும் அந்நாட்டுத் தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல, நடுத்தர வர்க்கத்திற்கும்கூடப் பயன் படவில்லை, பயன்படுத்தப்படு வதில்லை என்பதை அம்பலப் படுத்தியிருக்கிறது.

இத்தொற்று காலத்தில் நடந்த ஜார்ஜ் ஃபிளாய்டின் படுகொலை அமெரிக்க ஏகாதிபத்தியம் அணிந் திருக்கும் ஜனநாயக, சமத்துவ மூகமூடியைக் கிழித்துக் கந்தலாக்கி விட்டது.

அதேசமயத்தில், ஜார்ஜ் ஃபிளாய்டின் படுகொலைக்கு நீதி கேட்டும் இன சமத்துவத்திற்கா கவும் அந்நாட்டு மக்கள் நோய்த் தொற்று அபாயத்தையும் மீறி நடத்தி வரும் போராட்டம், எதிர்காலம் குறித்து அஞ்சிக் கொண்டிருக்கும் உலக மக்களிடம், தீவிரமடைந்து வரும் முதலாளித்துவப் பொருளா தார நெருக்கடியின் சுமை தம் மீது திணிக்கிப்படுவதை எதிர்த்து இந்த நிலைமையிலும் போராட முடியும் என்ற நம்பிக் கையை விதைப்பதாக அமைகிறது.

●●●

"ஜார்ஜ் ஃபிளாய்ட் வெள்ளையின போலிசு அதிகாரியால் கொல்லப்பட்டதைத் தனிப்பட்ட போலிசு அதிகாரியின் தவறாகவும், ஒரு பிறழ் நடவடிக்கையாகவும்தான் பார்க்க முடியும்" எனக் கூறி அமெரிக்க போலிசு துறையை நிறவெறிக் குற்றத்திலிருந்து காப்பாற்றி விட முயலுகிறார், நம்ம ஊர் முன்னாள் சி.பி.ஐ. இயக்குநரான ஆர்.கே.ராகவன். தான் ஆடாவிட்டாலும் தன் தசை யாடும் என்பார்களே, அது இதுதான் போலும்.

இந்த வாதம் ஜார்ஜ் ஃபிளாய்டைக் கொலை செய்த போலிசு அதிகாரிகளை மட்டும் நிறவெறிக் குற்றத் திலிருந்து காப்பாற்றவில்லை. எரிக் கார்னர், மைக்கேல் பிரௌன், டமிர் ரைஸ், வால்டர் ஸ்காட், ஆல்டன் ஸ்டெர்லிங், பிலாண்டோ காஸ்டைல், ஸ்டீபன் கிளார்க், பிரேயொனா டைலர் ஆகியோரைப் படுகொலை செய்தவர்களையும் நிறவெறிக் குற்றத்திலிருந்து காப் பாற்றுகிறது. இவர்கள் அனைவரும் ஜார்ஜ் ஃபிளாய்டுக்கு முன்பாக, கடந்த ஆறு வருடங்களுக்குள் அமெரிக்க போலிசின் வெள்ளை இனவெறியால் உப்பு சப்பில்லாத காரணத்திற்காகக் கொல்லப்பட்ட வர்கள்.

கருப்பினத்தைச் சேர்ந்த ஜார்ஜ் ஃபிளாய்டின் இறுதி நிமிடங்கள் – வெள்ளை நிறவெறிக் கொடூரத்தின் சாட்சியம்.




2014 ஆம் ஆண்டு ஜூலையில் இளைஞனான எரிக் கார்னர், சட்ட விரோதமான முறையில் சிகரெட்டு களை விற்றான் என்பதற்காகக் கொல்லப்பட்டான். ஜார்ஜ் ஃபிளாய் டைப் போலவே எரிக் கார்னரும் வெள்ளையின போலிசு அதிகாரியின் கால்முட்டியால் கழுத்து நெறிக்கப் பட்டுத்தான் கொல்லப்பட்டான். ஜார்ஜ் ஃபிளாய்டைப் போலவே எரிக் கார்னரும் என்னால் மூச்சுவிட முடியவில்லை எனக் கதறியபடியே தான் இறந்து போனான்.

அதே ஆண்டு ஆகஸ்டில் மைக்கேல் பிரௌன் என்ற 18

வயதான கருப்பின இளைஞன் ஒரு சிகரெட் பெட்டியைத் திருடிவிட்டான் என்ற காரணத்திற்காக வெள்ளையின போலிசு அதிகாரியால் சுடப்பட்டுக் கொல்லப்பட்டான். பிரௌனின் உடலை ஆறு குண்டுகள் துளைத் திருந்தன.

டமிர் ரைஸ் வெள்ளையின போலிசு அதிகாரியால் சுட்டுக் கொல் லப்பட்டபோது அவனது வயது வெறும் பன்னிரெண்டுதான். அந்தச் சிறுவன் ஆயுதம் வைத்திருந்தான் எனக் கதை ஜோடித்து இந்தக் கொலையை நியா யப்படுத்த முயன்று தோற்றுப் போனது அமெரிக்க போலிசு.



ஜார்ஜ் ஃபிளாய்டு.
(கோப்புப் படம்)

“என்னால் மூச்சுவிட முடிய வில்லை” என்ற ஜார்ஜ் ஃபிளாய்டின் கதறல் நமது நினை வுகளிலிருந்து மறைவதற்குள்ளாகவே, அட்லாண்டா நகரில் கருப்பினத்தைச் சேர்ந்த நான்கு குழந்தை களுக்குத் தந்தையான ரேய்ஷர்ட் புரூக்ஸ் போலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அந்நகரின் ஓர் உணவு விடுதியின் கார் நிறுத்துமிடத்தில் தனது காரை நிறுத்தி விட்டு, அதனை எடுக்காமல் தூங்கிக் கொண்டிருந்த புரூக்ஸ், அதனால் பிற வாடிக்கையாளர்களுக்குத் தொந் தரவு தந்தார் என்பதுதான் அவர் மீதான குற்றச்சாட்டு. புரூக்ஸைக் கைது செய்ய வந்த போலிசாரின் துப்பாக் கியைப் பறித்துக்கொண்டு அவர் ஓடியதால், அவரைச் சுட்டுக் கொன்றோம் என்பது போலிசின் வாதம். குற்றச் சாட்டிலோ, அதற்கு வழங்கப்பட்ட தண்டனையிலோ ஏதாவது நியாயம் உள்ளதா?

சிகரெட் பெட்டியைத் திருடிவிட்டதாக, சட்ட விரோதமாக சிகரெட் விற்றதாக, சிகரெட் வாங்க கள்ள டாலர் கொடுத்ததாக, வாடிக்கையாளர்களுக்குத் தொந்தரவாக நடந்து கொண்டதாகக் குற்றஞ் சுமத்தப் பட்ட இந்த ஆஃப்ரோ அமெரிக்கர்கள் மிகக் கொடூர மான முறையில் கொல்லப்பட்டதற்குக் குற்றங்களை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும் என்ற

அமெரிக்க போலிசின் வெள்ளை நிறவெறிக்குப் பலியான கருப்பினத்தவர்கள்
(இடமிருந்து) எரிக் கார்னர், தமிர் ரைஸ் மற்றும் மைக்கேல் பிரௌன்.
(கோப்புப் படங்கள்)



அமெரிக்க போலிசின் அறவுணர்ச்சியா காரணம்? அல்லது இப்படுகொலைகள் குற்றத்தைத் தடுக்க வேண்டும் என்ற தன்முனைப்பின் காரணமாக நேர்ந்து விட்ட பிழையா? நிச்சயமாக இரண்டும் இல்லை. அமெரிக்க போலிசையும் அந்நாட்டின் நீதிமன்றத்தையும் பொருத் தவரை குற்றத்தின் தன்மை தண்டனை யைத் தீர்மானிப்பதில்லை. குற்றம் சுமத் தப்படுபவனின் தோலின் நிறம்தான் பெரும்பாலும் தீர்மானிக்கிறது.

மேலும், அமெரிக்காவின் பெரு வாரியான மாகாணங்களில் நடை முறையிலுள்ள, பின்வாங்கிச் செல் லாமல் எதிரிகளை எதிர்கொள்வது என்ற சட்டம் (stand your ground law) எதிரிகள் எனக் கருதப்படுவோர் மீது எத்தகைய பலப் பிரயோகத்தையும் பயன்படுத்துவதற்கு போலிசுக்கு அதிகாரம் அளிக்கிறது. அதாவது, எதிரிகளை எவ்வித விசாரணையுமின்றிக் கொலை செய்வதற்கும் போலி சுக்கு சுதந்திரம் வழங்குவதுதான் இந்தச் சட்டத்தின் உட்கிடக்கை.

இப்படி போலிசிற்கு வழங்கப்பட்டிருக்கும் வரம் பற்ற அதிகாரத்தோடு வெள்ளை நிறவெறியும் சேரும் போது, கருப்பின ஆண்கள் அமெரிக்க போலிசின் எளிதான இலக்காகிவிடுகின்றனர்.

“அமெரிக்க போலிசு அதிகாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட வெள்ளையினத்தவரின் எண்ணிக் கையைவிட கருப்பினத்தவரின் எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகம். கைகளில் எவ்வித ஆயுதமும் இன்றி நிராயுதபாணியாக நின்ற வெள்ளையினத்தவர் சுட்டுக் கொல்லப்பட்டதை ஒப்பிடும்போது நிராயுதபாணியான நிலையில் சுட்டுக் கொல்லப்பட்ட கருப்பினத்தவரின் எண்ணிக்கை 1.3 மடங்கு அதிகம். இப்படிச் சட்ட விரோதமான முறையில் சுட்டுக் கொல்லும் போலிசு அதிகாரிகளுள் 98 சதவீத அதிகாரிகள் மீது எவ்விதமான குற்ற வழக்கும் புனையப்படுவதில்லை” எனப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

போலிசு அதிகாரிகள் மீது கொலை வழக்குப் போடப்பட்டு நீதிமன்றங் களில் நிறுத்தப்பட்டாலும், “தனது உயிரைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக் கில்தான் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட் டதா?” என்ற கேள்வியை எழுப்பி, அவர்களை விடுதலை செய்துவிடுவதை அமெரிக்க நீதிமன்றங்கள் வாடிக்கை யாகக் கொண்டுள்ளன.

எடுத்துக்காட்டாக, மைக்கேல் பிரௌனைச் சுட்டுக் கொன்ற அதிகாரி நிறவெறியின் காரணமாகத்தான் பிரௌனைச் சுட்டுக் கொன்றார் என

நிரூபிக்கப்பட்ட பின்னும், அந்த அதிகாரி தண்டிக்கப் படவில்லை. மாறாக, அவர் கௌரவமான முறையில் போலிசு துறை யில் இருந்து பதவி விலகிச் சென்றார்.

வெள்ளையின எஜமானர்களுக்கு எதிராகக் கருப் பின அடிமைகள் நடத்திய கலகத்தை ஒடுக்கும் நோக் கில்தான் அமெரிக்க போலிசு படை உருவாக்கப் பட்டது. அந்த நிறபேத அணுகுமுறையும் நிறவெறியும் இன்னமும் அமெரிக்க போலிசுத் துறையில் ஊறிப் போயிருப்பதாகக் கூறுகிறார்கள் சமூகவியலாளர்கள்.

"போலிசு கண்காணிப்பின் முடிவு" என்ற நூலை எழுதிய சமூகவியலாளர் அலெக்ஸ் எஸ்.விடேல், கடந்த நாற்பது ஆண்டுகளில் அமெரிக்க சமூகத்தின் மீதான போலிசின் அதிகாரமும் கண்காணிப்பும் அளவுக்கு அதிகமாக அதிகரித்திருப்பதாக அந்நூலில் குறிப்பிட்டி ருக்கிறார். போலிசு துறைக்கு ஒதுக்கப்படும் அதிகப்படி யான நிதி, நவீன தொழில்நுட்பங்கள், சமூகத்தில் பரவி வரும் அச்சம், வறுமையின் காரணமாகப் பெருகி வரும் குற்றங்கள், மற்றும் குற்றங்களைக் காட்டிக் கொண்டுவரப்படும் புதுப்பது அடக்குமுறைச் சட்டங்கள்-இவை காரணமாக போலிசின் கண்காணிக்கும் அதிகாரம் அதிகரித்திருப்பதாகக் குறிப்பிடும் அவர், "சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்க இயலாத போலிசின் கைகளில் அதிகாரம் குவிக்கப்படுவதால், பிரச்சினை மென்மேலும் தீவிரமடைகிறதேயொழிய, குறைவதில்லை" என விமர்சிக்கிறார்.

போலிசிற்கு அளிக்கப்படும் வரம்பற்ற அதிகாரத்தால் பிரச்சினைகள் தீவிரமடைகிறது என அவர் குறிப்பிடுவதற்கு இன்னொரு நிரூப ணமாய் அமைந்திருக்கிறது ஜார்ஜ் ஃபிளாய்டின் படுகொலை.

●●●

**நி**றவெறியின் காரணமாக அமெரிக்க கருப் பினத்தவர்கள் கொல்லப்படுவது, சித்திரவதை செய்யப்படுவதற்கு எதிராகப் போராட்டங்களும் கலகங்களும் அமெரிக்காவில் நடப்பதும் புதிய விடய மல்ல. எனினும், முந்தைய போராட்டங்களுக்கும் ஜார்ஜ் ஃபிளாய்டின் படுகொலைக்கு நீதி கேட்டுத் தற்பொழுது நடைபெற்று வரும் போராட்டத்திற்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன.

கருப்பின மக்களின் உரிமைகளுக்காகவும் இன சமத்துவத்துக்காவும் போராடிய மார்ட்டின் லூதர் கிங் 1968-இல் சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டித்து நடந்த கலகத்தைக் காட்டிலும், தற்பொழுது நடை பெற்றுவரும் போராட்டம் முக்கியத்துவம் வாய்ந்த தாக இருப்பதற்குக் காரணம், இப்போராட்டம் நடுத்தர வர்க்க வெள்ளையினத்தவரையும் கருப்பின மக்களுக்கு ஆதரவாகத் தெருவிற்கு இழுத்து வந்திருப்பதுதான்.


மேலும், அமெரிக்காவையும் கடந்து கனடா விலும், தென்னமெரிக்க மற்றும் ஐரோப்பிய கண்டத்து நாடுகளிலும் அமெரிக்க போலிசின் மனித உரிமை மீறலை மட்டுமின்றி, அந்நாடுகளிலும் காணப்படும் வெள்ளையின வெறிக்கு எதிரான போராட்டமாகவும் உருவெடுத்திருக்கிறது.

அமெரிக்கச் சமூகத்தில் நிலவிவரும் இனப் பாகுபாட்டை கரோனா தொற்று - இத்தொற்றுக்குப் பலியாகும் கருப்பினத்தவரின் எண்ணிக்கை மற்ற இனத் தவரோடு ஒப்பிடும்போது மூன்று மடங்கு அதிகம் - மிகவும் துலக்கமாக எடுத்துக்காட்டி வரும் அதேவேளை யில்தான், ஜார்ஜ் ஃபிளாய்ட் கள்ள டாலர் கொடுத்து சிகரெட்டை வாங்கினார் என நிரூபிக்கப்படாத குற்றச் சாட்டைச் சாக்காகக் கொண்டு கொல்லப்பட்டார். இனப் பாகுபாட்டிற்கு எதிராகக் கருப்பின மக்களிடம் கனலாக இருந்துவரும் உணர்வை கரோனா இறப்புகளும் ஜார்ஜ் ஃபிளாய்டின் கொலையும் தீயாகப் பற்றியெறியும்படி விசிறி விட்டன என்றால், கரோனா தொற்றால் தீவிர மடைந்திருக்கும் வேலையிழப்பும், எதிர்காலம் குறித்த அச்சமும் வெள்ளையினத் தொழிலாளியையும் நடுத்தர வர்க்கத்தையும் அவர்களிடம் காணப்படும் இன மயக் கத்தைக் கலைத்து வீதிக்கு இழுத்து வந்தன.



மின்னசோட்டா மாநிலத் தலைநகர் செயிண்ட் பாலில் நிறவெறிக்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்களால் தரையில் சாய்க்கப்பட்ட வெள்ளை இனவெறியன் கிறிஸ்டோபர் கொலம்பஸ் சிலை.

அமெரிக்க போலிசின் அதிகாரத்தையும் அத்துறைக்கு ஒதுக்கப்படும் நிதியையும் குறைக்க வேண்டும் என்பது தொடங்கி போலிசு துறையையே கலைக்க வேண்டும் என்பது வரையில் பல தரப்பட்ட கோரிக்கைகள் இப்போராட்டங்களில் முன்வைக்கப் படுகின்றன. சாராம்சமாக, அமெரிக்க போலிசு மற்றும் நீதித் துறையில் பாரிய சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்பது இப்போராட்டத்தின் அடிநாதமாக உள்ளது. அதனால்தான், ஜார்ஜ் ஃபிளாய்டைக் கொன்ற போலிசு அதிகாரி டெரெக் சாவின் மீது கொலைக் (second degree murder charge) குற்றச்சாட்டு பதியப் பட்ட பிறகும், அமெரிக்காவில் போராட்டங்கள் ஓயவில்லை.




போராட்டத்தின் வீச்சும், போராட்டத்தில் காணப் படும் இன-வர்க்க ஒற்றுமையையும், போராட்டம் முன்னைப் போல அமைதியாக நடைபெறாமல், முன்னைப் போல சட்ட வரம்புகளுக்குள் அடங்கி விடாமல், ஊரடங்கையும் மீறித் திமிரி எழுவதும் தான் அமெரிக்க அதிபரையும் ஆளும் வர்க்கத்தையும் அச்சங்கொள்ள வைத்திருப்பதோடு, அதிபர் டிரம்பைப் பதுங்கு குழிக்குள் ஓடி ஒளிந்துகொள்ள வைத்தது.

●●●

ஒரு ஜனநாயக நாட்டில், தேர்தல்கள் மூலம் தேர்ந் தெடுக்கப்படும் அதிபரோ, பிரதமரோ, தான் அனைத்து மக்களுக்குமான அரசின் பிரதிநிதி என உணர்ந்து செயல்பட வேண்டும் என முதலாளித்துவ அறிவு ஜீவிகள் போதிப்பதுண்டு. குறிப்பாக, தேர்தல்களில் மத, இனவெறியைத் தூண்டிவிட்டு வெற்றியடையும் தலை வர்கள் விடயத்தில் அவர்கள் இதனை விசேடமாகக் குறிப்பிடுவதுண்டு. ஆனால், அதிபர் டிரம்போ இந்தச் சம்பிரதாயமான அறநெறிகளைக்கூட மதிக்காமல், அவற்றைக் குப்பைக் கூடைக்குள் வீசியெறிந்துவிட்டு, இன சமத்துவத்திற்காக நடைபெறும் இப்போராட் டத்தின் மீது வன்மத்தைக் கக்கி வருகிறார்.

போராட்டக்காரர்களைக் குண்டர்கள், வன்முறை யாளர்கள், உள்நாட்டுப் பயங்கரவாதிகள் எனப் பழித்த டிரம்பின் அவதூறுக்கும்; “கொள்ளையடிப்பது தொடங் கினால், துப்பாக்கிச் சூடு தொடங்கும்” என்றும், “போராட்டக்காரர்களை ஒடுக்க இராணுவத்தை இறக்கி விடுவேன்” என்றும் மிரட்டிய டிரம்பின் அச்சுறுத் தலுக்கும் போராட்டக்காரர்கள் அஞ்சிவிடவில்லை. மாறாக, அவரது வன்மத்திற்கு எதிர்வினையாகப் போராட்டம் பரந்துபட்ட ஆதரவைப் பெற்று, அவரைத் தனிமைப்படுத்தியது.

“வன்முறை என்பது கேட்கப்படாதவர்களின் குரல்” என்ற மார்ட்டின் லூதர் கிங்கின் புகழ்பெற்ற மேற் கோளை இன்று கோடிட்டுக் காட்டாதவர்களே கிடை யாது. “நாங்கள் வன்முறையாளர்கள் என்றால், அதை வெள்ளையினத்தவர் கள்தான் எங்களுக்குக் கற்றுக் கொடுத் தார்கள்” எனப் போராடும் கருப்பின மக்களின் சார்பாக டிரம்புக்குப் பதிலடி தந்தார், டமிகா மல்லோரி என்ற இளம் பெண் போராளி.

நவம்பர் 2020-இல் நடைபெற வுள்ள அமெரிக்க அதிபர் தேர்தலை மனதில் வைத்து ஜனநாயகக் கட்சியும், அக்கட்சியைச் சேர்ந்த ஆளுநர்களும், அமெரிக்க நாடாளுமன்றப் பிரதிநிதி களும் இப்போராட்டத்துக்கும் ஆதரவு அளித்துவரும் அதேவேளையில், அதிகார வர்க்கத்தின் ஒரு பிரிவும்கூட இன்று டிரம்பை எதிர்த்து, இப்போராட்டத்தை ஆதரிக்கத் துணிந்திருக்கிறது.

“இது ஆதிக்கம் செலுத்த வேண்டிய காலக்கட்டம்” என டிரம்ப் நிறவெறியோடும் அதிகாரத் திமிரோடும் பேசியதைக் கண்டித்திருக்கும் ஹூஸ்டன் நகர போலிசு உயர் அதிகாரி, “அதிபர் ஆக்கபூர்வமாக எதுவும் செய்ய முடியாவிட்டால், வாயை மூடிக் கொண்டு இருக்க வேண்டும்” எனக் கூறியிருக்கிறார்.

வெள்ளைமாளிகைக்கு முன்நடந்த போராட்டத்தின் மீது அரசு வன்முறையை ஏவி, போராட்டக்காரர்களைக் கலைத்து விட்டு, வெள்ளை மாளிகையிலிருந்து அதன் அருகிலுள்ள புனித ஜான் தேவாலயத்திற்கு நடந்து சென்று, பைபிளோடு புகைப்படம் எடுத்துக்கொண்ட டிரம்பின் வக்கிரம் பிடித்த நடவடிக்கையை, “அது தன்னை அவமானமும் அருவெருப்பும் அடையச் செய்த தாக” விமர்சித்திருக்கிறார், பெயரை வெளியிட விரும் பாத வெள்ளை மாளிகை அதிகாரி.

டிரம்புடன் புனித ஜான் தேவாலயத்திற்குச் சென்ற அமெரிக்க முப்படைகளின் தலைவர் மார்க் மில்லி, தன் செயலுக்கு வருத்தம் தெரிவித்திருப்பதோடு, இந்தப் போராட்டம் ஆப்பிரிக்க அமெரிக்கர்களுக்குப் பல நூற்றாண்டுகளாக இழைக்கப்பட்டு வரும் அநீதிகளுக்கு எதிராக நடந்து வருவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

அமெரிக்காவின் முன்னாள் இராணுவச் செயலர் ஜேம்ஸ் மேட்டிஸ், “டிரம்ப் மக்களை ஒன்றிணைப்ப தற்கு மாறாக, பிரிக்கவே முயற்சி செய்கிறார்” எனப் பகிரங்கமாகக் குற்றஞ்சுமத்தியிருக்கிறார்.

புகழ்பெற்ற ஹாலிவுட் நடிகரான ஜார்ஜ் க்ளூனி, “இனவெறிதான் மிகப் பெரிய வைரஸ். கடந்த 400 ஆண்டுகளாக அதற்கு மருந்து கண்டுபிடிக்கப்பட வில்லை” எனச் சாடியிருப்பதோடு, “குற்றவியல் சட்டத் திருத்தங்கள் தேவை” எனக் கோரியிருக்கிறார்.

டிவிட்டர் நிறுவனம் டிரம்பின் இரண்டு சுட்டுரை களை வன்முறையைத் தூண்டிவிடுவதாகக் குறிப்பிடும் எச்சரிக்கையோடு வெளியிட்டது.

ஜனநாயகக் கட்சியால் ஆளப்படும் மாகாணங்களில், போலிசு துறைக்கு வழங்கப்படும் நிதியைக் குறைக்கவும், தமது கால் முட்டியால் குற்றவாளிகளின் கழுத்தை நெறித்துப் பிடிப்பது உள்ளிட்டு போலிசு வழங்கப்பட்டிருக்கும் பல அதிகாரங்களைத் திரும்பப் பெறவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகச் செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

இவையாவும் இப்போராட்டம், அமெரிக்கர்கள் ஒவ்வொருவரின் முகத்திற்கு எதிரேயும் நீங்கள் எந்தப் பக்கம் என்ற கேள்விக் கணையை வீசி வருவதை எடுத்துக் காட்டுகின்றன.

இது வெறும் அடையாளப் போராட்டமாக அமையாமல், நிறவெறியின் ஒவ்வொரு அம்சத்தையும் எதிர்த்து நிற்கிறது. ஜார்ஜ் பிளாய்ட் படுகொலைக்கு நீதி கேட்டும், குற்றவியல் சட்டத் திருத்தங்களைக் கோரியும் போராடி வரும் அமெரிக்க மக்கள், நிறவெறியின், அடிமை வியாபாரத்தின் சின்னமாகத் திகழும் சிலைகளைத் தகர்த்தெறியத் தொடங்கியுள்ளனர். 1990-களில் சோவியத் ரசியாவிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் லெனின் உள்ளிட்ட கம்யூனிசத் தலைவர்களின் சிலைகள் வீழ்த்தப்பட்டதைக் கொண்டாடிய அமெரிக்க ஆளும் வர்க்கம், தனது கண்ணெதிரே தனது மூதாதையர்களின் சிலைகள் அமெரிக்க மக்களாலேயே அடித்து நொறுக்கப்படுவதைக் கண்டு விக்கித்து நிற்கிறது. வரலாறு எப்போதும் நேர்கோட்டுப் பாதையில் செல்வதில்லையே!

இந்தப் போராட்டம் தனது குறிக்கோள்களை முழுமையாக அடைய முடியாமல் முடிந்து போனாலும், இதனையடுத்து எழக்கூடிய போராட்டங்கள் இதனைவிட ஒற்றுமையோடும், இதனைவிடப் போர்க்குணமிக்கதாகவும், இதனைவிட முற்போக்கான கோரிக்கைகளை எழுப்பக் கூடியதாகவுமே அமையும். இதுதான் இப்போராட்டம் உணர்த்தும் செய்தி.

மேலும், ஒரு பெருந்தொற்றுக் காலத்திலும்கூட மக்கள் தமது உயிரைவிடவும், சுயமரியாதையையும், சமத்துவத்தையும், நீதியையும்தான் தமது உயிருக்கு மேலான ஒன்றாகக் கருதுகிறார்கள் என்பதை மீண்டுமொருமுறை உலக மக்களுக்கு உணர்த்தியிருக்கிறது, இப்போராட்டம்.

■ குப்பன்

# இந்திய நகர்ப்புற நடுத்தர வர்க்கத்துக்கு ஒரு கேள்வி!

அமெரிக்காவில் நடைபெற்று வரும் இப்போராட்டத்தை ஆதரித்து வரும் இந்திய நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் இந்தியப் பிரபலங்களின் முகத்திற்கு நேரே நாம் எழுப்ப வேண்டிய கேள்வி, அமெரிக்காவின் நிறவெறிக்குச் சற்றும் குறைந்ததல்ல இந்தியாவின் ஆதிக்க சாதிவெறி என்பதை இவர்கள் என்றாவது உணர்ந்து குரல் கொடுத்ததுண்டா என்பதுதான்.

தாழ்த்தப்பட்ட மக்கள் ஆதிக்க சாதிவெறியர்களாலும், அரசுப் படைகளாலும் தாக்கப்படும்போது, கொல்லப்படும் போது, அவர்களது அற்ப உடமைகள் சூறையாடப்படும்போது கிராமப்புற மக்கள் மட்டுமல்ல, படித்த நகர்ப்புற நடுத்தர வர்க்கமும் அதனை மௌனமாகக் கடந்து போய்விடுகிறார்கள். இந்த மௌனம் அற்பத்தனமான சுயநலத்திலிருந்து மட்டும் வரவில்லை. மாறாக, தாழ்த்தப்பட்டவர்களைத் தமக்குக் கீழாகக் கருதும் அருவெருக்கத்தக்க சுயசாதிப் பெருமிதத்திலிருந்தும் வருகிறது.

இந்து மதவெறிக் கும்பலால் தாக்கப்பட்ட முகம்மது நயீம்.
(கோப்புப் படம்)



இன்று இந்தியாவை ஆண்டுவரும் சங்கப் பரிவாரக் கும்பல் ஆதிக்க சாதிவெறியையும் சிறுபான்மையினருக்கு எதிரான இந்து மதவெறியையும் தமது கொள்கையாக, திட்டமாகக் கொண்டு இயங்கிவருகிறது. அக்லக், பெஹ்லுகான் உள்ளிட்ட அப்பாவி முசுலீம்களை இந்து மதவெறிக் கும்பல் கொன்று போட்டதும், குஜராத்தின் உனா மற்றும் மகாராஷ்டிராவில் பீமா கோரேகானில் தாழ்த்தப்பட்டவர்கள் மீது இந்து மதவெறிக் கும்பல் நடத்திய தாக்குதலும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை.

பிளாய்ட் படுகொலையைத் தொடர்ந்து அமெரிக்காவில் நடந்துவரும் போராட்டம் குற்றமிழைத்த அதிகாரிகளைத் தண்டிக்கவும், போலிசின் அதிகாரத்தைக் குறைக்கவும் வேண்டிய நிலைமையை உருவாக்கியிருக்கிறது. ஆனால், இந்தியாவிலோ இந்து மதவெறியையும், ஆதிக்க சாதி வெறியையும் எதிர்க்கக்கூடிய குரல்கள் பலவீனமாக இருப்பதால், பசுப் பாதுகாப்பு என்ற பெயரில் அப்பாவி முசுலீம்களைக் கொன்ற இந்து மதவெறியர்கள் தேச பக்தர்களாகப் புகழப்படுகிறார்கள். பீமா கோரேகான் சம்பவத்தைக் காரணமாக வைத்து முற்போக்கு அறிவுத்துறையினர் தேசத் துரோகிகளாகக் குற்றஞ் சுமத்தப்பட்டு, பயங்கரவாத உபா சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்படுகின்றனர்.

இந்து மதவெறிக் கும்பலின் இந்த பாசிச குற்றச் செயல்களை இந்திய நகர்ப்புற நடுத்தர வர்க்கம் கண்டிக்கவும் எதிர்த்துப் போராடவும் முன்வராத வரை, அமெரிக்காவில் காணப்படும் நிறவெறிக்கு எதிராக அவ்வர்க்கம் எழுப்பும் குரல் போலித்தனமானதுதான்.

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

போக வேண்டியிருக்கு; அரசாங்கம் முதல்ல பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்தணும். ஊரடங்கு, ஊரடங்குன்னு தொடர்ந்தோம்னா, நாசமாப் போய்டுவோம்.

**மூக்கையா, செங்கல் சூளைத் தொழிலாளி**

நீங்க கட்டிடத் தொழில்னு சொல்ற இந்தத் தொழில்ல குழி தோண்டுறவங்க, கம்பி வளைக்கிறவங்கனு 42 பிரிவு இருக்கு. அந்தத் தொழிலாளர்களிலேயே ரொம்ப ரொம்பக் குறைஞ்ச சம்பளத்துக்கு வேலை பாக்குறது நாங்கதான். கொத்தடிமைத்தனத்துலருந்து கொஞ்சம் கொஞ்சமா மீண்டுவந்தவங்க நாங்க; இந்த கரோனா திரும்பவும் எங்கள அந்தக் கொத்தடிமைத்தனத்துக்கே கொண்டுபோய் சேர்த்திடும்போல இருக்கு.

**குமார், சமையல்காரர்**

ஆயிரம் பேருக்குக் குறையாம சமையல் நடக்குற கல்யாணங்கள்ல வெறும் அம்பது பேருக்குத்தான் சாப்பாடுன்னா, எத்தனை பேருக்கு வேலை இருக்கும்? நாற்பது பேர் வேலை பார்த்த இடத்துல, நாலு பேரே அதிகம்னு ஆகிடுச்சி. பலருக்கு விருந்து பரிமாறுன கை அய்யா... இப்படியே போனா என்னாகும்னு இன்னைக்குப் பசியை நெனைச்சுப் பதறுறாங்க. இதெல்லாம் புரியாதவங்க வீட்டுக்குள்ள உட்கார்ந்துக்கிட்டு “ஊரடங்கு போடு!”ன்னு பேசுறாங்க!

**ராஜேஷ்குமார், புகைப்பட நிபுணர்**

போட்டோகிராபர், வீடியோகிராபர் மட்டுமல்லாம, ஆல்பம் டிசைனிங் செய்றவங்க, வீடியோ எடிட்டிங், ஆல்பத்தை பிரிண்ட் செய்யுற அச்சகம், ஒளிப்பதிவுக் கருவிகளை வாடகைக்கு விடுறவங்கன்னு தமிழ்நாடு முழுக்க ஒன்பது லட்சம் குடும்பங்களோட வேலை, வருமானம் சம்பந்தப்பட்ட விஷயம் சார் இது. அரசோ, பொதுச் சமூகமோ எங்களை மாதிரியானவங்க பாதிக்கப்பட்டிருக்காங்கன்னு உணர்ந்த மாதிரிகூடத் தெரியலைங்கிறதுதான் பெரிய வருத்தமா இருக்கு!

**மூர்த்தி, கல்யாண மண்டப உரிமையாளர்**

முக்கியமான சீசனை இழந்துட்டோம். அட, எங்களை விடுங்க... ஒவ்வொரு கல்யாணத்தையும் நம்பி எத்தனை தொழிலாளர்கள் இருக்காங்க? கல்யாணத்துல அம்பது பேருக்குத்தான் அனுமதின்னு ஆயிட்டா, பலரு பத்திரிகைகூட அடிக்கிறதில்லை. ரெண்டு மாலையோடு பூ வேலை முடிஞ்சுடுது. மேளவாத்தியம்கூடத் தவிர்த்திடுறாங்க. அப்படின்னா எத்தனை வகை தொழில்கள் பாதிக்கப்பட்டிருக்கும்! மூணு மாசமா யாருக்கும் ஒத்த ரூபா வருமானம் இல்லீங்க!

**தாவுத் மியான், தள்ளுவண்டி பிரியாணி கடைக்காரர்**


நம்ம வியாபாரமே மூணு மணி நேரக் கணக்குதான். பகல் 12 மணிலேர்ந்து 3 மணி வரைக்கும். ஜனத்துகிட்ட காசு இல்லை. இதுலேயும் போலீஸ் கெடுபிடி வேற! போன வாரம் நாற்காலி எல்லாத்தையும் அள்ளி எறிஞ்சிட்டுப் போய்ட்டாங்க. பல நாள் மிச்சப்படுறதை ஏழைபாழைங்களுக்குச் சும்மா அள்ளிக்குடுத்திட்டு வீட்டுக்குப் போறேன். இதே நிலைமைதான் பக்கத்துல இளநீ, கரும்புச்சாறு, டீ விக்குறவங்களுக்கும். ஆனாலும், இடத்தையும் தொழிலையும் இழந்துடக் கூடாதுன்னு வீம்புக்கு யாவாரம் பண்றோம்.

**ரவி, உணவக உரிமையாளர்**

இது கிராமத்துக் கடை. வியாபாரிங்க, வழிப் போக்கருங்க இந்தச் சாலை வழி போறவங்க சாப்பிட்டுப்போற இடம்.... வர்றவங்ககிட்ட காசு இல்ல, அவங்களுக்கு வியாபாரம் இல்லைங்கிறது நல்லாவே தெரியுது. இட்லி சாப்பிட்டுட்டு ஒரு டீ குடிக்கிறதுக்குக்கூட யோசிக்கிறாங்க. ஆனா, இன்னொரு ஊரடங்கு எல்லாம் போட்டா பெரும் பாதிப்பாகிடும். ஜாக்கிரதையா மக்களை நடந்துக்க அனுமதிக்கிறதுதான் நல்ல வழிமுறை.

**வேலவன்–சங்கீதா, வில்லிசைக் கலைஞர்கள்**

ஆறு மாத்தைக்கு திருநெல்வேலி, நாகர்கோயில்ல நடக்குற கொடையாலதான் குடும்பங்கள் வாழும். சாமிக்கே கொடையில்லாதப்போ எங்க கதி என்னாகும்? கொல்லை வேலை, கொத்து வேலை, தீப்பெட்டி கம்பெனி, வேட்டு கம்பெனின்னு அவன் வாழ்நாள்லேயும் பார்க்காத வேலைக்கெல்லாம் போவ ஆரம்பிச்சிட்டாங்க. ராவுல முழிச்சிருந்துட்டுப் பகல்ல தூங்குற பழக்கம் உள்ளவன் எப்படிப் பகல் வேலையப்






## புதிய ஜனநாயகம் வெளியீடுகள்!





**கரோனாவும் ஊரடங்கும்: இடிதாங்கிகளா ஏழைகள்?**

பக்கங்கள்: 72

விலை: ரூ.40.00

**கார்ப்பரேட் - காவி பாசிசம்**




பக்கங்கள்: 208

விலை: ரூ.100.00

**காஷ்மீர் யாருக்குச் சொந்தம்?**




பக்கங்கள்: 88

விலை: ரூ.60.00

(பதிவஞ்சலில் பெற ரூ.20.00 சேர்த்து அனுப்பவும். மேலும் விவரங்களுக்கு அலுவலக தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளவும்.)


Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.

பார்க்க முடியும்? அரசாங்கம் எந்த முடிவை எடுக்கும்போதும் எங்களையெல்லாமும் சேர்த்து யோசிச்சு எடுக்கணும்!

**தேன்மொழி ராஜேந்திரன், கரகாட்டக் கலைஞர்**

நாட்டுப்புறக் கலைஞர்களைப் பொறுத்தமட்டுல இந்தக் கோடை காலகட்டம்தான் வருஷத்துல வருமானத்துக்குரியது. காவிரிப் படுகையைப் பொறுத்தமட்டுல தொடர்ந்து மூணாவது வருஷமா வாழ்வாதாரம் இழந்து வக்கத்துப்போய்க் கிடக்கிறோம். ரேஷன் அரிசியை வாங்கித் தின்னுட்டுதான் உசுரு வாழ்ந்துக்கிட்டிருக்கோம். அதுவுமில்லைன்னா கதை முடிஞ்சுது.



**பி.மணிமேகலை, நாடகக் கலைஞர்**

கணவரைப் பிரிஞ்சு ஆறு வயசுப் புள்ளயோட இருக்கிற எனக்கு நாடகம்தான் உறுதுணையா இருந்துச்சு. இப்ப நாடகமும் இல்லன்னதும், ஏதோ அனாதையா ஆதரவில்லாம இருக்கிற மாதிரி இருக்கு. மாசத்துல பத்து நாளு வேலைக்குப் போனாலும்கூட, அதவெச்சு மீதி இருபது நாளை ஓட்டிடுவோம். ஆனா இப்படி மொத்தமா மூணு மாசம் வேலையில்லன்னா என்ன செய்றது? நகையை அடமானம் வெச்சு இப்ப ஓடிக்கிட்டிருக்கு. அதுவும் முடிஞ்சுருச்சுன்னா எப்படிச் சாப்பிடப்போறோம்னு தெரியலை.

**கிரேஸ் பானு, திருநபர்**

தமிழ்நாட்டில் உத்தேசமாக 5 லட்சம் திருநபர்கள் இருக்கிறார்கள். பெருநகரங்களில் குழுவாக இருக்கிறார்கள். சிறு நகரங்களிலோ நாங்கள் உதிரிகள். ஊரடங்கு அறிவிக்கப்பட்ட சமயத்தில் 5 கிலோ அரசி, 1 கிலோ பருப்பு, 1 கிலோ எண்ணெய் கொடுத்தார்கள். இரண்டு மாதங்களுக்கு ரூ.1,000 கொடுத்தார்கள். ஆனால், இவை யாவும் திருநபர் அடையாள அட்டை வைத்திருப்பவர்களுக்கானவை. யதார்த்தத்தில் இங்கே திருநபர்கள் அடையாளமற்றவர்கள். அனைவரும் வீட்டை விட்டுத் துரத்தப்பட்டவர்கள். பெரும்பாலானோரிடம் இந்தியக் குடிநபர் என்று நிரூபிப்பதற்கான எந்த ஆவணங்களும் கிடையாது. இந்நிலையில், ஆவணத்தைக் காண்பித்தால்தான் உதவிகள் வழங்கப்படும் என்று கூறுவது மனிதாபிமானமற்ற செயல்.

**சையது ஜாகீர் உசேன் சகோதரர்கள், அரிசி வணிகர்கள்**

என் அம்பது வருஷ அனுபவத்துல சொல்றேங்க, அழிமானம் தொடங்கிருச்சு. பொன்னி, கிச்சடி சம்பா மாதிரியான உயர்ரக அரிசி வியாபாரம் ரொம்ப விழுந்திடுச்சி. சாதாரண ரகம் போகுது, ஆனா, குறைஞ்சுடுச்சு. அதாவது, புதுசா ஒரு கூட்டம் ரேஷன் அரிசியையும், நிவாரணமா கொடுக்கிற அரிசியையும் சாப்பிடத் தொடங்கியிருக்காங்கன்னு பட்டவர்த்தனமா தெரியுது. அரிசி வியாபாரம் குறைஞ்சதால பாதிப்பு எங்களுக்கு மட்டுமில்லீங்க. கடைக்காரர்கள், மொத்த வியாபாரிகள், மூட்டை தூக்கும் கூலித் தொழிலாளர்கள், தரகர்கள்னு ஒரு பெரிய கூட்டத்துக்கே பாதிப்பு.

**எம்.காஜா, காய்கறி வணிகர்**

தமிழ்நாடு முழுக்க ஒரு விஷயத்தை நீங்க கவனிக்கலாம். காய்கறிக் கடையில கூட்டம் குறைஞ்சிக்கிட்டேபோகுது. அதேபோல தற்காலிகச் சந்தைகள்ல கடைகளோட எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைஞ்சிக்கிட்டே போகுது. வீடு வீடா போய் காய்கறி விக்கிறவங்களும் குறைய ஆரம்பிச்சிட்டாங்க. மக்கள்கிட்ட பணப்புழக்கம் இல்லாததுதான் காரணம். ஒருபக்கம் விவசாயிங்க விலை இல்லைனு காய்கறிகளைக் குப்பையில கொட்டுறாங்க. இன்னொருபக்கம் நாங்க விக்காம குப்பையில கொட்டுறோம்.

**மஜீத், கருவாடு வணிகர்**

கரோனாவுல கன்னாபின்னானு வியாபாரம் ஆறது கருவாடுதாங்க. முன்னத்தைவிட நாலு மடங்கு இப்ப கருவாடு விக்குது. இது எங்களுக்கு நல்ல சேதி; ஆனா, மொத்த சமூகத்துக்கும் நல்ல சேதியான்னு சொல்லத் தெரியலை. ஏன்னா, ''கருவாடு அதிகம் வித்துச்சின்னா, பஞ்சம் நெருங்கிக்கிட்டிருக்கு''ன்னு கிராமங்கள்ல சொல்வாங்க. இருபது ரூபாய்க்குக்கூட காய்கறி வாங்க முடியாத நிலையிலதான் அஞ்சு ரூபாய் கருவாடு அதிகம் செலாவணி ஆகும். ஏன்னா, ரெண்டு துண்டு கருவாட்டைப் போட்டு, மொத்தக் குடும்பமும் கருவாட்டு வாசத்துலயே சாப்பிட்டு முடிச்சுடலாம். இப்போ அந்தச் சூழல் உருவாகிட்டு இருக்கிறதை உணர முடியுது.




தொகுப்பு: **இளங்கதிர்**

நன்றி: இந்து தமிழ் திசை

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No. 42648/85
REGISTERED No. TN/CC(S)DN/190/18-20. Liscensed to Post without pre-payment under WPP No. TN/PMG(CCR)/WPP562/2018-2020.


கோவை


புதுச்சேரி


கரூர்

# சாத்தான்குளம் ஜெயராஜ் - பென்னிக்ஸை லாக்கப் படுகொலை செய்த போலீசாரை கொலை வழக்கில் கைது செய்!

தமிழகம் முழுவதும் பல்வேறு ஜனநாயக அமைப்புகளுடன் மக்கள் அதிகாரம் நடத்திய ஆர்ப்பாட்டங்கள்.


விருத்தாசலம்



திருச்சி